மாதப் பத்திரிகை

ஆசிரியர்

கா. வே. ராமச்ந்திரன்

நான்காவது வால்யூம் | விக்கிரம வருஷம் | ஆவணிப் பகுதி

15—8—1940.

விஷய ஸூசிகை

விஷயம்:- பக்கம்.

கவிதா விமர்சம்

1.	தமிழ்: சில குறிப்புகள்	... "ஸ்ரீ"	... 449
2.	ஸ்ரீ ராமனை இராவணன் தரிசித்தல்	... வே. திருப்பதி நாயுடு	... 451
3.	கவிதையும் வனிதையும்	... "தகளன்"	... 453
4.	மூப்பு	... "விசாரதன்"	... 454
5.	ஸ்ரீ ராம நாமம்	... "மாயக்கூத்தன்"	... 455

சிறுவர் பகுதி

1.	கிளிக்குப் படிப்பு	... டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை	457

புதுக் கற்பனைகள்

1.	சைவவுலகில் ஒருவர்	... "ஸ்ரீ வாதூலன்"	461
2.	ஒரு நாள் கலியாணமும் கங்கை கொண்ட சோழபுரமும்	... "கலைவாணன்"	... 466
3.	ஸர்க்ரிகா	... கே. என். கணேசன்	... 472
4.	மானஸீ (நாடகம்)	... K. வரதாச்சாரி, B.A., B.L.,	... 473
5.	டால்மியாபுரம்	.... "காமு"	... 487

கீதப் பகுதி

1.	ஸ்ரீ ஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்களின் கிருதி விளக்கம் (கண்ணன் குழலூதல்)	... தமிழ் வித்வான் R. முத்து ஐயர்	... 489

அனுஷ்டானப்பகுதி

1.	விஜய தசமி	... டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை	495
2.	புதிய யோகம்	... "சாதகன்"	... 497

பெண்டிர் பகுதி

1.	மங்கையர் தொண்டு	... டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை	499

மொழிபெயர்ப்புப் பகுதி

1.	கதைக் கடல்	டாக்டர் வே. ராகவன்	501
2.	உமர்கையூமின் ருபையத்து	"பாரத்வாஜன்"	508

சிற்பப் பகுதி

1.	வேலூர்க் கோட்டை	S. ஸுந்தரராஜன், M.A.,	509

புஸ்தக விமர்சனம்

1	ஸுந்தர ராமாயணமும் ஸதீ விலஸிதமும்	"வே. ரா."	512

சந்தாதாரருக்கு ஒரு விணப்பம்.

சந்தாதாரர்கள், தங்கள் சந்தாவை காலதாமதமின்றி அனுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு,

பத்திராதிபர்—சில்பஸ்ரீ.

அறிவிப்பு

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் முதல் வால்யூம்தைப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒரு பக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெறவிரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

இப் பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

சில்பஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி	விலை அணா 4.
வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட)	ரூ. 3.



கவிதா விமர்சம்.

தமிழ்: சில குறிப்புகள்

('ஸ்ரீ' எழுதியது)

'தமிழ்ப் பெருமை'யைப்பற்றிய ஒரு பிரசங்கத்தைக் கேட்கப் போயிருந்தேன். "பிரெஞ்சு பாஷையின் சொல்நயமும், ஆங்கிலத்தின் பொருட் செறிவும் தமிழுக்குண்டு; அன்றியும், வேறெந்த பாஷையும் தமிழவ்வளவு நீதி புகட்டவில்லை. இந்த உண்மையை ஓர் ஆங்கில ஆசிரியர் எடுத்துக் காட்டித் தமிழின் சிறப்பைப் பாராட்டியிருக்கிறார்; தமிழர் இப்பெருமைம்யை அறியாமலிருப்பது சிறுமையல்லவா?" என்று பண்டிதர் பேசி முடித்தார். "அந்நியருடைய குற்றங்களை மறந்து குணங்களைப் பாராட்டுவது நல்லது—நமக்கு உரியவர்களிடம் அப்படி நடந்து கொள்வது தகாது. தாய் பாஷையை நாம் கண்மூடித்தனமாய்க் கொண்டாடுவது அவசியமில்லை—அடிக்கடி தமிழ்ப் பெருமையைப் பற்றிச் சொன்னதைச் சொல்வதைக் காட்டிலும், தமிழின் குறைகளை விவரித்தால், நன்றாயிருக்கும்" என்று என் அருகிலிருந்தவர் சொன்னார். "அந்த விஷயத்தைப்பற்றி தங்களுக்கு ஏது முக்கியமாகப் படுகிறது?" என்று கேட்டேன். "தமிழில் உயர்ந்த நீதிகள் இல்லை. 'பொய்யும் மெய் போலத் தோன்றும்,' 'ஏழையைத் தாயும் வெறுப்பாள்' என்பவை போன்ற அநுபவக் கோட்பாடுகள் தாம் தமிழ் நீதி நூல்களில் விரவிக் கிடப்பன. உலகம் என்பது பலர் சொல்லும் கூற்றே; அந்த உலகத்தை எதிர்க்கும் வைராக்கியம் தமிழரிடம் வெகு குறைவு. உலக நீதியை அநுசரித்து முன்னுக்கு வரும் திறமை தமிழருக்கு அதிகம் உண்டு; இல்லாமலா, இந்தியா முழுவதிலும், தமிழ் நாடு இங்கிலீஷ் பயிற்சிக்காகவும், பிரபல வக்கீல்கள் தோன்றுவதற்காகவுமே, பேர் பெற்றிருக்கிறது?" என்றார். நான் அவருடன் மேலும் பேச சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

* * * *

பயிற்சியால் ஏற்படும் புத்திகூர்மையன்றி, அவரவருக்கு சுயபுத்தி எப்படிப்பட்டதென்று காட்ட சில பரீக்ஷைகள் இருக்கின்றன. இவைகளில் சில கேள்விகள் நடை உணர்ச்சியைச் சோதிப்பன. நடையழகில் சிறந்தன என்று பலர் மெச்சும் பாகங்களிலிருந்து சில வாக்கியங்களும், கருத்தில் மட்டும் அவற்றை ஒத்த வேறு வாக்கியங்களும் அடுத்தடுத்துக் கொடுக்கப் படும்; போலி நடையை மெச்சுவோர்

விடை எழுதிய பின் தங்கள் பிசகைத் தெரிந்து கொள்வார்கள். கடைக்காக மட்டும் பேர் போன தமிழ் வசனம் இன்னும் திரட்டப் படாததால், தமிழில் இவ்விதக் கேள்விகளுக்கு சரியான விடைகள் எவை என்று ஒருவரும் சொல்வதற்கில்லை. எனினும், நான் பார்த்த இங்கிலிஷ் கேள்விகள் சிலவற்றை முன் மாதிரியாகக் கொண்டு தமிழிலும் சில கேள்விகள் அமைத்தேன். அவைகளுக்கேற்ற விடைகளைப்பற்றிப் பலர் அபிப்பிராயம் ஒத்திருந்தால், அந்த ஒற்றுமையிலிருந்து கொஞ்சமேனும் நடை இலக்கணம் கற்றுக் கொள்ளலாம்; அபிப்பிராயங்கள் பேதப்பட்டாலோ, இப்போதுள்ள நிலைமைக்கு ஒன்றும் தாழ்வில்லை. கேள்விகளில் ஒன்று பின் வருமாறு:—

பின் வரும் வசனங்களில் எவை கோவை, வலிவு, சொற்பொருத்தம் இவற்றால் சிறந்தனவையோ அவற்றைப் பொறுக்கி எடுக்கவும்:

1. நதி தீரத்தில் ஒரு வட விருக்ஷத்தின் பொந்தொன்றில் ஒரு ஸர்ப்பம் வசித்து வந்தது.

ஓர் ஆற்றங்கரையோரத்தில், ஆலமரப் பொந்தொன்றில் ஒரு கிழப்பாம்பு குடியிருந்தது.

ஆற்றோரத்தில் ஓர் ஆலமரம்; அதனடியில் ஒரு துவாரம்; அதில் ஒரு நல்லபாம்பு குடியிருந்தது.

2. வந்தான் மணிவாளன்; வீசினான் மணிவாளை.

அச்சமயம் அங்கே மணிவாளன் தோன்றித் தன் வாளை வீசினான்.

3. தமிழ் உங்களுக்குத் தாய்பாஷை. செந்தமிழ்ச் செல்வி நம் தாயன்றோ?

4. அதன் பக்கத்திலாவது சமீபத்திலாவது வேறு மரங்கள் ஒன்று மில்லை.

சுற்று முற்றும் பொட்டல், பாலை, கடுஞ்சுரம்.

5. ஒன்றுக்கொன்று மாறாக இயங்குவதாகப் புலப்படும் இருவகைச் சக்திகளும் சமவளவினவாய் நின்று வஸ்துவின் போக்கை நிர்ணயிப்பனவாம்.

மாறான இரு சக்திகள் எதிராகவும் சமமாகவும் ஒரு வஸ்துவின் போக்கை நிலை நிறுத்துகின்றன.

6. அந்த நாட்டை ஆண்டவன் நள மகாராஜன். அவன் ஒரு சக்கரவர்த்தி, சந்திரகுலத்தவன், கலைகளில் வல்லவன், கருணையன், கொடைவள்ளல், நன்னெறி வாழ்க்கையன், தனிச் செங்கோலினன்; திருமாலையல்லவர் வேறு யாரும் அவனை ஒப்பார்.

அந்த நாட்டை நளன் என்ற சந்திரகுலத்தரசன் ஆண்டுவந்தான். அவன் பண்டைக் காலத்து அரசர்க் குரிய உத்தம குணங்கள் அனைத்தும் வாய்ந்தவன்.

பத்திரிகைத் தமிழ் நடை அநேகமாய்ப் படிப்பவருடைய நடை யுணர்ச்சியைக் கெடுப்பதாய்த் தான் இருக்கிறது. ஆங்கிலப் பத்திரிகைகளைப் பற்றிக் கூட இந்தக் குறை சொல்வதுண்டு. நம் நாட்டிலோ, ஜனங்களுக்குள் புத்தக நடமாட்டம் குறைவு; விலை நயமான பத்திரிகைகள் தெளிவையும் ஒரு முரட்டு வலிமையையுமே நடைக்கேற்ற முக்கிய லக்ஷணங்களாகப் பாராட்டுகின்றன. திக்கலைப் பரிகசிப்போர் தாமும் திக்கலைப் பழகிக் கொள்வது போல, சில அவலக்ஷணமான சொற்றொடர்களும் வசனப் போக்குகளும் இப்பொழுது பலராலும் கையாளப்படுகின்றன. உதாரணங்கள் :—"சீதை துடி துடித்தாள்—மின்னலைப் போல.', "இராவணன் எழுந்து போனான்—யானையைப் போல" "அர்மாள் பிரசன்னமானாள்—கையும் கரண்டியுமாய்" "அவன் போட்டு வைத்தான்—ஒரு கேள்வியை" "அவள் கருவிழிகளில் தவழ்ந்தது—ஒரு புன்னகை; அதைக் கண்ட மாத்திரத்தில் அவன் சொக்கிப்போய் விட்டான்." இவ்வித வசனப் போக்கு செந்தமிழ் நடையை ஒட்டியதுமில்லை; பேச்சு நடையை ஒட்டியதுமில்லை; இப்படிப்பட்ட வசனம் எழுதுவதற்கும் எளிது. அது ஒன்றே அதற்குரிய குணம்.

ஸ்ரீ ராமரை இராவணன் தரிசித்தல்

(வே. திருப்பதி நாயுடு, இடிகரை)

ஸ்ரீ ராமரை இராவணன் மூன்று தரம் தரிசித்ததாக கம்பராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. முதலாவதாக, ராகவன் சேது பந்தனம் நிறுவி, இலங்கைக்கு சென்று, கோட்டையின் உத்தரவாயிலில் பொங்கிப்பரந்த வானர சேனையோடு அணிவகுத்து நின்ற சமயம் ராவணன் வானர சைனியத்தை பார்வை யிடும் பொருட்டு வடக்கு கோபுரவாயிலின் மீது ஊர்வசி அரம்பை மேனகை முதலிய தேவ மாதர் சாமரை வீசவும் ஆலாத்தி ஏந்தவும் அகங்கார மமகாரங்கள் எல்லாம் சேர்ந்து ஒருரு வெடுத்தது போன்று சர்வாலங்கார பூஷிதனாய் சூல் கொண்ட கார்மேகங்கள் போன்ற நிறத்தையுடையவனாய் வந்து நின்று, பாற்கடல் போன்ற சேனை சமுத்திரத்தின் மத்தியில் தர்மமே கோயில் கொண்டெழுந்தருளியது போல் இருக்கும் வேதஸ்வரூபியை தரிசித்தான். அங்ஙனம் தரிசித்தபொழுது வேதமே கண்களுக்குத் தென்பட்டது. மனத்தை ஒருவழிப் படுத்தி மேலும் காணும் பொழுது, அவ்வேதத்தின் மூலப்பொருளும் ஸாத்வீகஸ்வரூபியுமான ஸ்ரீ ஹரியைக் கண்டு "வேதங்களால் நிச்சயிக்கப்பட்ட பழம் பொருளே இங்கே யிருக்க வேதங்கள் ஏன் இன்னும் அப்பொருளை தேடிக் கொண்டிருக்கின்றனவோ?" என்று ஆச்சரியப்பட்டான். இதனை கம்பநாடர் யுத்தகாண்டம் இராவணன் தானை காண் படலத்தில்,

"தோரணத்தின் மணிவாயின் மிசைச்சூல்
நீரனைத்த முகிலாமென நின்றான்
ஆரணத்தை யரியையம் மறை நேடும்
காரணத்தை நிமிர் கண் கொடு கண்டான்"

என எடுத்துக் காட்டுகிறார்.

இரண்டாவதாக, முதல் நாட்போரில் யுத்தம் செய்து தோற்று வீரமும் ஆண்மையும் களத்தே பேர்ட்டு வெறுங்கையோடு இலங்கைக்கு, என்றும் கண்டிராத புதிய சோகத்தோடு ஓர் தனியறையிற் படுத்துக் கொண்டிருந்த சமயம் தன் தாய்வழிப் பாட்டனாகிய மாலியவான் வந்து யுத்தத்தைப்பற்றி விசாரிக்கும் பொழுது தான் கண்ட ஸ்ரீ ராமரையும் அவரது கோதண்டத்தின் ஆற்றலையும் வர்ணிக்கிறான்: "என் அன்புள்ள தாத்தா, நான் தேவர்களோடும் தானவர்களோடும் திக்பாலகர்களோடும் கந்தர்வர்களோடும் திரிமூர்த்திகளோடும் மற்றும் கார்த்தவீரியார்ச்சுனன் முதலான அரசர்களோடும் திரிலோகங்களிலும் உள்ள அநேக பலவான்களோடும் யுத்தம் செய்திருக்கிறேன்; இந்த மாதிரி யுத்தம் நான் இது வரைப் பார்த்ததில்லை. திரிபுராந்தகனான சிவ பெருமானும் அவரது பூதகணங்களும் இன்னும் மூன்று லோகங்களிலுள்ள சுத்த வீரர்களும் என்னுடைய பலம் பொருந்திய பெருத்த ராக்ஷச சைன்யமும் ராகவன் தம்பியான இளையவனுடைய வில்லின் ஆற்றலுக்கே போதுமானதன்று. இனி ஸ்ரீ ராமரைப்பற்றி பேச வேண்டுமா? ஸ்ரீ ராமரது கோதண்டத்திலிருந்து புறப்படும் சரங்களானவை அவர் எப்படி நினைக்கிறாரோ அப்படியே செய்கின்றன. யானைகள் குதிரைகள் சிம்மங்கள் முதலிய படைகளினுடைய சிரங்களை கொய்ய வேண்டுமென நினைத்தால் அங்ஙனமே செய்கின்றன. உடல்களிற் படுவதில்லை. வேதங்களில் சொல்லப்பட்ட பொருள்கள் தப்பினும் அவரது தனுவுமிழ் சரங்கள் தப்பா. அதிகம் சொல்லுவதில் பயனில்லை. இவ்வுலகத்தில் அகங்காரத்தில் என்னை மிஞ்சினவர்கள் இல்லை. அந்தத் தீராத் தர்ப்பத்தைத் துடைத்ததென்றால் பிறிதொரு சான்றுமுண்டோ? ஆனால், ஒரு விசேஷம்; அவர் இவ்வளவு யுத்தம் செய்தும் தாம் சிறு வயதில் அயோத்தியில் விளையாடும் பொழுது கூனி கூன் போகும்படி பச்சைமண்ணை உருட்டி வில்லில் வைத்து அடித்தபோது திருமுக மண்டலம் எப்படி விகசித்திருந்ததோ அங்ஙனமே இருந்தது. சினம் என்பது அவருடைய திருமேனியில் எங்கும் காணப்படவில்லை. அதற்கு உதாரணம் நான் உயிருடன் திரும்பி வந்ததே போதுமானது. என்னவாயினும் கடைசிக் காலத்தில் தகுந்த எதிரி கிடைத்ததே சந்தோஷம்" என்று மாலியவனோடு

பேசுகிறான். ஆகவே, இரண்டாவது தடவையும் எதிரி என்கிற ஞாபகம் அன்று; பிரகிருதி புருஷன், சாந்தஸ்வரூபி, வேத முதல்வன், என்றே பல கவிகளிலும் எடுத்துக் காட்டுகிறார். மூன்றாவதாக, கடை நாள் யுத்தத்தில் தன் பந்து மித்திரர்களையும் சேனாபலத்தையும் வரத்தாற் பெற்ற ஆயுத பலத்தையும் தோற்று இன்னம் கொஞ்ச நாழிகையில் உயிர் போகும் தறுவாயில் எதிரில் நிற்கும் ஸ்ரீ ராமரைப் பார்த்து, “இவர் சிவபெருமானே என்றால், அவர் நமக்கு குலதெய்வம்; நம்மோடு யுத்தத்துக்கு வரமாட்டார். நான்முகனே என்றால், அவர் நமக்குப் பாட்டன் முறையாதலால் நம்மோடு யுத்தத்துக்கு வர கூடியவர் அல்லர். திருமால் என்றால், நாம் அவரோடு பாற்கடலுக்கு யுத்தத்துக்குப் போனபொழுது நம்மை கண்டு பயந்து ஒளிந்துகொண்டவர். அல்லது, நம்மை கொல்வதற்கே தவம் செய்து பிறந்த தபசி என்றாலோ, தபசிகளுக்கு இவ்வளவு தேஜஸ் இருக்க நியாயமில்லை. ஆகையால் இவர் வேதங்கள் முடிவாகக் கூறும் பரவஸ்துவே தான் ஆகவேண்டும்” என்னும் கருத்தை யுள்ளிட்டு

“சிவனே வல்லன் நான் முகனல்லன் திருமாலாம்
அவனே வல்லன்; மெய்வர மெல்லாமடுகின்றான்;
தவனே வென்னிற் செய்து முடிக்கும் தானல்லன்;
இவனே தானவ்வேதமுதற் காரண மாவான்.’,

ஆகவே, “இறைவனுக்கு பகைவன் பக்தன் என்ற வேறுபாடில்லை; அகங்கார மமகாரங்களற்று ஏக சிந்தையோடு எங்ஙனம் சிந்திக்கிறானோ அங்ஙனம் தோன்றுவான்” என்ற கீதாசாரியன் வாக்கு நோக்க தக்கது.

கவிதையும் வனிதையும்.

(துகளன் எழுதியது.)

"பத வின்னியாச மாத்திரத்தாலே வசீகரியாத வனிதையாற் பயன் என், கவிதையாற் பயன் என்?" என்னும் பொருளுடைய வடமொழிச் சுலோகம் ஒன்று உள்ளது. கவிதையை வனிதையோடு ஒப்பிட்டு உண்மைக் கவிதையின் குணகுணங்களை விளக்குவது கவி மரபு.

வனிதையரைப்போல கவிதைகளையும் மூன்று வகையாகப் பிரிக்கலாம். இப்பாகுபாடு சரீரம், குணம், அணி ஆகிய மூன்றனையும்பற்றி எழுவது. சரீரவனப்பினால் வசீகரிக்கும் வனிதை ஒரு வகை; நற்குணங்களால் மனதைக் கவரும் வனிதை மற்றொரு வகை; அணிகளால் அழகு பெற்று விளங்கும் வனிதை மூன்றும் வகை. இவர்களைப் போலவே, யாப்பிலக்கணம் பெற்று மாசற்ற மேனியோடு விளங்குவது சாதாரணக் கவிதை; பத்து வகைக் குணங்களும் வாய்ந்ததாய் விளங்குவது உத்தமக் கவிதை; மாசற்ற மேனியும் குணமுமே இன்றி அணிகளால் மயக்குவது அதமக் கவிதை. இம் மூவகைக் கவிதைகளுக்கும் இராமாயண கதா பாத்திரங்களினின்றும் உவமை கூறலாம்.

வெளஷ்டவ சரீரத்தோடு விளங்குகிறாள் கைகேயிதேவி. ஆனால் உத்தம குணங்கள் வாய்க்கப் பெறவில்லை. அவளுடைய மகன் பரதனை அயோத்தியினின்றும் கேகய நாட்டிற்கு வந்த தூதர்களிடம் அவளைப் பற்றிப் பேசும்போது, "கோப ஸ்வபாவங் கொண்டவள்" என்றும் "தானே அறிவாளி என்ற அகந்தை கொண்டவள்" என்றும் சொல்வதினின்றும் அவளுடைய குணதோஷங்கள் வெளிப்படை.

உத்தமக் கவிதைக்கு உவமையாகக் கூறத் தகுந்தவள் ஸ்ரீ கௌசல்யா தேவி. உத்தமக் கவிதையைப் போல இவளும் சகலவித நற்குணங்களும் வாய்ந்தவள். உத்தமக் கவிதை பரமார்த்தத்தை தன்னுள் அடக்கிக் கொண்டு சிறந்து விளங்கும். கௌசல்யா தேவியும் பரமார்த்தப் பொருளை தன் கர்ப்பத்திலே பன்னிரண்டு மாதம் தரித்துக்கொண்டிருந்த பாக்கியம் பெற்றவளாததால் உத்தமக் கவிதைக்கு நிதர்சனமாய் விளங்குகிறாள்.

மூன்றுவதான அதமக்கவிதைக்கு ஒப்பு பரதனைக் காண்பதற்குத் தன்னை அலங்கரித்துக் கொண்டு வந்த கூனியேயாம். அவளுடைய அலங்காரங்களை ஓர் அழகிய உவமையால் வால்மீகி முனிவர் நன்கு விளக்குகிறார்: "கயிறுகளால் வரிந்து கட்டிய குரங்கு போன்றனள்" என்று. சரீர வெளந்தர்யமும் இல்லை; போதாக் குறைக்கு முதுகிலே கூன் வேறு. குணங்களைப்பற்றியோ, சொல்ல வேண்டியதில்லை. இவ்வாறு மெய் வனப்பும் குண நலனும் இல்லாத ஒரு பெண் பிறப்பு அணிகள் மேய்ந்து விளங்கினால் காண்போர்க்கு எவ்வளவு அருவருப்பு உண்டாமோ, அவ்வளவு அருவருப்பு ரஸிகர்களுக்கு ஏற்படும், யாப்பு நலனும் குணநலனும் இல்லாது அணிகளையே பூண்டு கவிதை என்ற பெயருடன் உலவும் போலிப் பாடல்களைக் காணும்போது.

மூப்பு.

(விசாரதன் எழுதியது.)

மூப்பு மூவகைப்படும், வயதினால் ஏற்படும் மூப்பு, ஞானத்தாற் கிடைக்கும் மூப்பு, சீலத்தாற் சிறந்த மூப்பு. இவற்றை முறையே அதம, உத்தம, மத்திம வகைகள் என்று கூறலாம். சீலத்தாற் பெறும் மூப்புக்கு விக்கிரமாதித்தியன். சிறந்த உதாரணமாகும். சிறு வயதிலேயே அவன் நற்குண நற்செய்கைகளிலே பல்லாண்டுகள் பழகிப்பழுத்த கிழவனைப் போலத் தன் இராச்சியத்தை ஆண்டு வந்தான் என்பர். கல்வி நலனாற் பெற்ற ஞானத்தாற் சிறந்து சிறு வயதிலேயே மூத்தோருக்கு உரிய மேன்மைகளைப் பெற்று விளங்கியவர்களால் நம் நாடு நிறைந்து விளங்குவது. இவர்களே மூத்தோர் என்று போற்றுதற்குரியவர்களாம். 'மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்' என்பதும் இவர்களுடைய உபதேசத்தையே. இவர்கள் மும்மலங்களையும் சீலத்தாற் போக்கியவர்களாய் இரண்டற்ற ஒரு பரம் பொருளையே சதாகாலமும் நெஞ்சிலே கருதிக் கருதிச் சித்தி பெற்று, "அப்பரமன் அடியேனுட் புகுந்தான், அகல்வானும் அல்லன் இனி; முடியாதது என் எனக்கேல் இனி" என்று பெருமை கொள்ளும் வகையிலே பிறவிப்பயன் பெற்றவர்கள். இவ்வாறு சீல விருத்தர்களாகவோ காலக்கிரமத்திலே ஞான விருத்தர்களாகவோ முயலாமல் தங்கள் ஆயுளை வீணாகச் செலவிடுவோர் வயோவிருத்தர்கள் ஆவர். இவர்களை 'மூத்தோர்' என்று கொள்பவர் இளமை நலம்படைத்த பெண்டிரே யாவர்; மற்றோர் எவரும் இவர்களை மூத்தோர் என்று மதிக்க மாட்டார்கள். காமக்கலைக்கு அளவுகோலாகக் கொள்வதற்கு ஏற்ற இளம் பெண்களுடைய சேர்க்கையை இந்த வயோ விருத்தர்கள் விரும்பி நாடுவார்களானால், அப் பெண்பாலார் இணங்கினாலும் அவர்களுடைய உடல்கள் இவ்விருத்தர்களின் முயக்கத்தினின்றும் கூசிக்குறுகி இவர்கள் அடைந்துள்ள மூப்பினை வற்புறுத்துவனவாம்.

இவ்வுண்மையை விளக்கும் வெண்பா ஒன்று 'நல்வழி'யிலே உள்ளது. அது வருமாறு :—

முப்பதா மாண்டளவின் மூன்றற்றொரு பொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறுணயின்—செப்பும்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமா மூப்பு.

முப்பதாம் ஆண்டளவிலே மானிடன் தன்னுடைய முழுச்சக்தியையும் பெற்று விளங்குகிறான். அது வரையில் அவனது உடற் சக்தியும் கல்வியறிவும் மனோ பலனும் விருத்தியாகிக் கொண்டே வரும். அதன் பிறகு அவனது உடலின் வன்மை குன்றத் தொடங்கி விடும். மனோ சக்தி வளருமெனினும் மெய் தளர்வுறுவதால், மனோதிடனும் குன்றக்கூடும்; ஆகலால், முப்பது வயது ஆகு முன்பே, மும்மலங்களையும் ஆசாராதி நியமங்களால் நீக்கி தர்மார்த்த காமங்களால் முயன்று இறைவனை மனதிலே சதா வீற்றிருக்கும்படி செய்ய வேண்டும். மலங்கள் நீங்கப்பெற்ற மனத்தினராகிவிட்டால், மலர் போன்று தூயனவாகிய மனங்கள் தோறும் இறைவன் விரைந்து புகுந்து அகலகில்லேன் இறையும் என்று அமர்ந்து விளங்குவான் அன்றோ? இவ்வாறு முயன்று இளமைப்பருவத்தைப் பயன்படுத்திக் கொண்டவர்களே 'மூப்பர்' என்றும் 'மூத்தோர்' என்றும் பலராலும் கௌரவித்தற்கு உரியவர்கள். யாதொரு முயற்சியும் செய்யாது யௌவனத்தைச் சிற்றின்ப சுகத்திலே செலவிடுத்தால், சிற்றின்பத்தைத் தந்த காரிகையே "நீ மூப்பு அடைந்ததை காம நூல்களுக்குப் பிரமாணம் ஆகிய நான் அறியாவிட்டாலும் மூப்பினை அளக்கும் கருவியாகிய என் அவயவங்கள் உணர்ந்து கொண்டன" என்று கூறுவாள். வேறு யாரும் இவனை 'மூப்பனார்' என்றோ 'மூத்தவர்' என்றோ கௌரவிக்க மாட்டார்கள். ஆதலால், "மூத்தவாறு காண்மின்கள்" என்று 'செப்பு நேர்மென் கொங்கை நல்லார்தாம் சிரியாத' முன்னம், 'புலன்கள்நைய மெய்யில் மூத்துப்போந்திருந்து உள்ளம் எள்கிப் பிதற்றா' முன்னம், யௌவன வயதிலேயே, உடலிலே வன்மையுள்ள போதே, பரம புருஷார்த்தத்தை நாடிப்பெற வேண்டும் என்று நல்வழி காட்டுவது இந் நல்வழி வெண்பா.

ஸ்ரீ ராம நாமம்.

(மாயக்கூத்தன் எழுதியது.)

ஜபதாம வரம என்று வால்மீகிமுனிவரால் சிலாகிக்கப்பெற்ற வஸிஷ்டமுனிவர் எவ்வாறு ஜபம் செய்வோர்க்கெல்லாம் தலைமை பெற்றார் என்றால், ஸ்ரீ ராமவதாரத்திற்கு முன்பாகவே அவர் ஸ்ரீ ராமநாமஜபம் செய்து வந்ததாலேதான் என்று ஊகிக்கலாம். அகார வடிவினனாகிய பகவான் அவதரிக்கு முன்பே அகாராந்தப் புல்லிங்கவடிவிலே ராம சப்தமானது அவதரித்து வசிஷ்டர் முதலிய முனிவர்களால் ஜபிக்கப்பெற்றும் வித்தியாப்பியாசஞ் செய்வோர்களுக்கு ஆரம்பத்திலேயே உபதேசிக்கப் பெற்றும் வந்தது. ராம நாமம் படைத்த பகவதவதாரங்கள் மூன்றிலும் ஏனைய இரண்டு அவதாரங்களுக்கு அடைமொழியிட்டுச்சொல்வது ஏன் என்றால், இராமன் என்பது தசரததனயனாய் அவதரித்த இராமனையே சுட்டுவதாலேதான். இதுபற்றியே, "சஸ்திர பிருத்துக்களுக்குள்ளே இராமன் நான்" என்ற கீதாசாரிய வசனத்திற்கு உரைகாண்போர் அனைவரும் சஸ்திர பலத்தாற் பெயர் பெற்ற பரசுராமனையும் பலராமனையும் பொருளாகக் கொள்ளாமல் ஸ்ரீராமனையே அவ்வசனம் சுட்டுவதாகக் கொண்டனர். பல்லாண்டுகளாக தாம் ஜபித்து உருவேற்றியபின், வசிஷ்ட முனிவர் இட்ட பெயர் உலகெங்கும் பரவிப் பேரின்பம் அளிக்கும் அன்றோ? "இவ்வுலகிலே இப்பொழுது இக்குணங்கள் எல்லாம் படைத்த குணவான் யார்?" என்று கேட்ட வால்மீகி முனிவருக்கு நாரத பகவான், "இது தெரியாதா உனக்கு? உலகிலுள்ள ஜனங்கள் அனைவருக்கும் தெரியுமே, அவன் பெயர் இராமன் என்று' என்னும் பொருளிலே "ராமோ நாம ஜனை: ச்ருத:" என்றனரன்றோ?

சரயுதீரத்திலே பலை அதிபலை என்னும் மந்திரங்களைப் பெற்றுக்கொள் என்று கௌசிக முனிவர் இராமனை அழைத்தபோது, 'ஊன் வாட உண்ணாது உயிர்காவலிட்டு உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து' வாடித் தவம் செய்த அம் முனிவரின் குரலும் மதுரமாக இருந்தது என்பர் ஆதிகவி. மற்றோரிடத்தில், ஸ்ரீ ராமனை எதிர் நோக்கிவரும் பரசுராமனைக் கண்ட முனிவர்கள் அர்க்கியம் முதலியன கொண்டு அவனை வரவேற்று, 'ராம, ராம' என்று அழைத்தபோதும் அவ் வாக்கு ராம நாமம் ஆதலால் அது மதுரமாயிருந்தது என்பர்.

ராம நாமம் வேறு, அதனாற் சுட்டப்படும் இராமன் வேறு என்றில்லை என்பதை ஆதிகவி குறிப்பிட்டுள்ளதும் அறிந்து இன்புறத்தக்கது. ஹனுமான் கொணர்ந்த முத்திரை மோதிரத்தைப் பிராட்டி பெற்றதும் தன் பர்த்தாவைக் கண்டவள் போலானாள் என்று வர்ணிப்பதால், மோதிரத்திலே கண்ட ராம நாமத்திற்கும் அந் நாமத்தையுடைய பிரானைப் போலவே சீதையை மகிழ்விக்கும் தன்மையிருந்தது என்பது தெளிவாகின்றது. இராமனைக் கண்டு பீதிகொண்ட மாரீசன் மரவுரியையும் கிருஷ்ணாஜினத்தையும் தரித்தவனாய் வில்லைக் கையிலே பிடித்தவனாய் பாசக் கயிற்றைக் கையிற் கொண்ட அந்தகனைப் போலத் தோன்றும் ஆயிரக்கணக்கான ராமர்களை மரந்தோறும் காண்கிறேன்" என்ற பின் "ரகாரத்திலே தொடங்கும் ரத்தினம், ரதம் முதலியவையெல்லாம் எனக்கு நடுக்கம் தருகின்றன" என்பதால் "அப்பொருள்களை எல்லாம் காணாமல் மாரீசன் அவற்றின் பெயர்களையே கண்டான் என்பதும், அவை ரகாரத்திலே தொடங்கின ஆதலால், அப்பெயர்களும் ராம நாம ஸஹஸ்ரங்களாகத் தோன்றின" என்பதும் குறிப்பாக உணர்த்தப்படுகின்றன. ஆகவே, "இந்த அரணியம் முழுவதும் ராமமயமாக எனக்குத் தோற்றுகின்றது" என்னும் மாரீச வாக்கியத்திற்கு, 'அரணியம் முழுவதும் பல்லாயிர ராமர்களாகத் தோன்றிற்று' என்று பொருள் கொள்வதோடு, 'பல்லாயிர ராம நாமங்களாகத் தோன்றிற்று' என்று பொருள் கொள்வதும் பொருத்தமே.

வாலியும் இராமனைக் காணும் முன்பே அவனுடைய பெயரைக் கேட்டிருந்தான்.

இராமபாணத்தால் அடிப்பட்டு வீழ்ந்த பின்பே இராமனைக் கண்ணுற்றான். அப்பொழுது அவன், "இராம! நீ கருணைக்கடல்; பிரஜைகளின் இதத்தையே விரும்புவோன்; தயாளு; திடவிரதன்—என்றெல்லாம் சகல உயிர்களும் உன் புகழைக் கூறுகின்றன." என்றும் சொன்னான். வாலியைப் போலவே சுக்கிரீவனும் ஹனுமானும் இராம நாமத்தைக் கேட்டறிந்தவர்கள். வாலி வரவிட்டவர்களோ என்று பயங் கொண்ட சுக்கிரவன்முன் ஹனுமான் இராமனைத் தம்பியோடு கொணர்ந்து, "இவன்தான் இராமன், மகாப்பிராக்ஞன், திடவிக்கிரமன்; இலக்ஷ்மணனோடு கூடிய இந்த இராமன் சத்தியபராக்கிரமன்; இக்ஷ்வாகு குலத்திலே தசரத புத்திரனாய்ப் பிறந்த இராமன் இவன்; இந்த ராமன் உன்னைச் சரணமடைகிறான்" என்று ராம நாமத்தைப் பலகாலும் சொல்லி சுக்கிரீவனுடைய பயத்தைப் போக்குகிறான். ஸ்ரீ ராமனுடைய நிஜரூபத்தைப் போலவே அவனுடைய நாமமும் பயத்தைப் போக்கி இன்பம் பயப்பதாகின்றது. இது பற்றியன்றோ ஹனுமான் கூறிய ராம விருத்தாந்தத்தைக் கேட்ட பிராட்டி அவனை நோக்கி, "எனக்கு ராம கதையில் அதிகப் பிரியம்; ராம நாமத்தைக் கேட்க ஓர்த்துக் கிடக்கும் என் செவி" என்று தன் நிலைமையை விளக்குகிறாள். இராமபிரானைக் கண்டவர்கள் அவனைத் தங்கள் கண் வழியே புகும் கள்வன் என்றலும் இராம நாமத்தைக் கேட்டவர்கள் "ராம! நீ எம் செவியின் வழி புகுந்து எம்முள்ளாய்" என்றலும் நாமத்திற்கும் ரூபத்திற்குமுள்ள ஐக்கியத்தைக் காட்டுவன அன்றோ?

ராம நாமம் பிராட்டிக்குப் பிரியமானது போலவே ஸ்ரீ ராமனுக்கும் பிரியமானது என்பது வால்மீகியின் கருத்து. ஏனெனில், ஏனைய பத்தினிகள் போலல்லாமல், பிராட்டி கணவனிடம் பேசும் போதும், பிறரிடம் பேசும் போதும் தன் பர்த்தாவை 'ராமன்' என்ற பெயர் சொல்லியே குறிப்பிடுகிறாள். இராமபிரானும், "இராமன் இரண்டு சொற் சொல்வதில்லை" என்றும், "இன்று இராமனுடைய ராமத்வத்தைக் காண்பீர்கள்" என்றும் பேசுகிறார். இராமபிரானுக்கு ராமத்வத்தைக் கொடுத்தது அவனுடைய ராம நாமமே அன்றோ? அந்த நாமத்தை ஒரு முறை சொல்வோரும் அதின் இனிமையிலே துவக்குண்டு பலகாலும் 'ராம, ராம' என்பர் என்னும் உண்மையை "ராமோ ராமோ ராம இதி ப்ரஜானம் அபவந் கதா:" என்னும் சுலோகத்தாற் குறிப்பர் "ராம கதையைப் பாடு" என்று பிரம்மதேவருடைய அனுக்கிரகமும் அனுமதியும் பெற்றுப் பாடிய வால்மீகி பகவான்.



சிறுவர் பகுதி.

கிளிக்குப் படிப்பு.

(டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.)

முன்னுரை.

ஒரே ஒருகாலத்தில் ஒரு பறவையிருந்தது. அது பரம சாது; வெகு இனிமையாகப் பாடும். ஆனால் பகவத் கீர்த்தனங்கள் ஒன்றும் அதற்கு பாடத் தெரியாது. அது தாவித் தாவிக் குதித்து ஓடுவது வெகு அழகாயிருக்குமானாலும், அது இங்கிதம் என்பது இன்னதென்றுகூட அறிந்திருக்கவில்லை.

“அறியாமை யென்பது மிகவும் கெட்டது. அறிவில்லா மூடர்களால் பிரதிபலன் ஒன்றுமில்லாவிட்டாலும் அவர்களது உணவில் குறைவு கிடையாது. எனவே அறிவிலிகளால் வரும்படியில்லாமல் செலவுதான் அதிகம்” என்று அவ்வூர் அரசர் ஓர்நாள் எண்ணலானார்.

அவர் தமது மருமகன்மார்களை ஒருநாள் ஒன்றுகூட்டிப் பறவைக்கு நல்ல படிப்பு அளிக்கவேண்டுமெனத் திட்டமாய்க் கூறினார்.

உடனே பெரிய பண்டிதர்கள் வரவழைக்கப்பட்டனர். இவ்விஷயம் வெகு தீவிரமாக யோசிக்கப்பட்டது. “பறவைக்குள்ள அறிவின்மை அதனுடைய கேவலமான வாழ்க்கையால்” என்று அம்மேதாவிகள் நிச்சயித்தனர். ஆகவே, பண்டிதர்களின் யோசனைப்படி முதலில் பறவையின் படிப்புக்கேற்ற கூண்டு செய்ய வேண்டுமெனத் தீர்மானமாயிற்று.

பண்டிதர்களும் தகுந்த சன்மானம் பெற்றுச் சந்தோஷமாய் வீடு சென்றனர்.

தங்கக் கூண்டு.

கண்ணைக் கவரும் அழகிய அபூர்வ வேலைப்பாடுகளுடன் தங்கக் கூண்டும் தயாராயிற்று. இந்தக் கூண்டின் விமரிசையைப் பார்க்க உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் ஜனங்கள் திரள் திரளாய் வந்து சென்றனர். “கல்வி கூண்டில் அடைபட்டதே” எனச் சிலர் கூறிக்

கண்ணீர் விட்டுச் சென்றனர். மற்றும் சிலர் "கல்வி சென்று விட்டாலும், கடைசி வரையில் கூண்டாவது மிஞ்சும். ஓர் விஷயத்தில் இந்தப் பறவை அதிருஷ்டசாலிதான்" என்றனர்.

தட்டான் பை நிறையப் பணம் சம்பாதித்துக் கொண்டு உடனே கப்பலேறித் தன்னூருக்குப் போய் விட்டான்.

கல்வி.

பின் பறவைக்குக் கல்வி புகட்டப் பண்டிதர் வந்து உட்கார்ந்தார். தம்முடைய முறைப் படிக் குண்டான படிப்புக்குப் புஸ்தகங்கள் அதிகம் தேவை யிருக்காது என்று சொல்லிக் கொண்டே ஒரு சிட்டிகை பொடி யெடுத்து இழுத்தார். இதனிடையில் அரசரின் மருமகன்மார்கள் பெருங் கூட்டமான குமாஸ்தாக்களுடன் அங்கு வந்து சேர்ந்தார்கள். அந்த குமாஸ்தாக்கள் யாவரும் புஸ்தகத்திலிருந்து ஏட்டிலெழுதினர், ஏட்டிலிருந்து ஏட்டிலெழுதினர். இவ்விதமாக எழுதி எழுதி மலையாகக் குவித்து வந்தார்கள். இப்புஸ்தக மலையைக் கண்டு ஜனங்கள் பிரமித்தனர். "கல்விக் குன்று! ஆஹா! ஆஹா! எவ்வளவு உயரம்! உச்சி ஆகாயத்தில் மறைந்திருக்கிறதே" என்றனர்; பாவம்!

குமாஸ்தாக்களும் பணம் நிறையப் பெற்றுச் சந்தோஷமாய் இல்லம் போயினர்.

அரசரின் மருமகன்மார்களோ கூண்டை மெருகிட்டுப் பள பளப்பாய் வைப்பதில் மிகுந்த சிரத்தை செலுத்தி வந்தனர். இதெல்லாம் பார்த்தபோது ஜனங்கள் உண்மையில் இதெல்லாம் முன்னேற்றமே" எனத் திருப்தியடைந்தனர்.

குற்றமும் குறைவும்.

நாட்டில் எவ்வளவு குறைவுகள் இருந்தாலும் கட்டின வீட்டுக்குப் பழுது சொல்லும் சிகாமணிகளுக்கு மட்டும் எந் நாட்டிலும் குறைவு கிடையாது. அதில் சிலர் இந்தப் புதிய இலாகா சம்பந்தப்பட்ட வரையில் கல்வி கற்க இருக்கும் பறவையைத் தவிர மற்றவர்களெல்லோரும் கொழுத்து வருகின்றனர் என்று தூற்றிச் சென்றனர்.

இவ்விஷயம் ராஜாவின் காதுக்கு எட்டியதும் அவர் தமது மருமகன்மார்களை, அழைத்து "என் அருமைச் சிறுவர்களே! இந்தப் புகாருக்குக் காரணமென்ன" என்று கேட்டார்.

அரசே! வேலைகள் எவ்வளவு சிரத்தையாய் நடைபெற்று வருகின்றதென்பதற்கு தட்டார்கள், பண்டிதர்கள், குமாஸ்தாக்கள் முதலியவர்களை விசாரித்தால் தெரியும். வேலையில்லாச் சோம்பேறிகள் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் நாக்கு நீண்டு கண்டபடி பிதற்றுகிறார்கள்" என்று மருமகன்மார்கள் பதிலளித்தனர்.

இந்தப் பதில் அரசருக்கு மிகுந்த திருப்தியைக் கொடுக்கவே, அவர் தம் மருமகன்மார்களின் சாமர்த்தியத்தை மெச்சி ஒவ்வொருவருக்கும் விலை உயர்ந்த ஆபரணங்கள் சன்மானம் அளித்தனர்.

அரசரின் பேட்டி.

சிறிய பறவைக்காக ஏற்படுத்தப்பட்ட பெரிய கல்வி இலாகா எப்படி வேலை செய்து வருகிறதென்பதை தாம் நேரில் கண்டறிய அரசர் விருப்பம் கொண்டார். எனவே ஓர் தினம் திடீரெனக் கல்வி மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்.

மண்டப வாசலில் சங்கநாதமும், கொட்டு முரசுகளும், மேள வாத்தியங்களும் இன்னும் பலவித வாத்தியங்களும் காது செவிடுபட முழங்கின. பண்டிதர்கள் தங்கள் சக்திக்கு எட்டும் வரை கூச்சலிட்டு கோஷம் செய்தனர். குமாஸ்தாக்கள் கல்வி உத்தியோகஸ்தர்கள், முதலிய பலரும் அரசரைச் சுற்றி நின்று வாழ்த்துப்பாக்கள் பாடினர்.

மருமகன்மார்கள் அரசரை நோக்கி "அரசே! ஏற்பாடுகளெல்லாம் எப்படி யிருக்கின்றன என்று பார்த்தீர்களா?" என்று புன் சிரிப்புடன் கேட்டனர்.

அரசரும் ஆனந்தத்துடன் கல்வி இலாகா ஏற்பாடுகளைப் பற்றிப் புகழ்ந்து பேசினார்.

மிகுந்த சந்தோஷத்துடன் அரசர் தன் யானைமீது ஏறி அரண்மனைக்குச் செல்லப் புறப்பட்டார். அச்சமயத்தில் கோட் சொல்வி ஒருவன் கூட்டத்தின் இடையில் இருந்து கொண்டு, "அரசர் பறவையைப் பார்த்தாரோ?". என்று அரசருக்குக் கேட்கும்படிக் கூவினான்.

"ஆஹா! அதை முற்றிலும் மறந்தேனே" என்றார் அரசர். பண்டிதர்களை நோக்கிப் பறவையின் கல்விக்காக அவர்கள் கையாண்டு வரும் முறைகளைப் பற்றி வினவினார். யாவும் அரசருக்குக் காட்டப்பட்டது. அரசர் பூர்ண திருப்தியும் பரமானந்தமும் கொண்டனர். ஏற்பாடுகளின் ஆடம்பரங்களைக் கருதினால் அவ்வளவையும் கற்க இருக்கும் பறவை மலை முன் சிறு துரும்பாய்த் தோன்றும்; ஏற்பாடுகளில் யாதும் குறைவில்லையென அரசர் மகிழ்ச்சி கொண்டார். இனி யாராவது குறை சொல்லவேண்டுமென்றாலோ, பறவைதான் சொல்லவேண்டும்; அதுவோ ஒன்றும் குறை சொல்லவில்லை. அதனால் முடியவும் முடியாது. பறவையின் தொண்டைவரைப் பண்டிதர்கள் அடைத்துள்ள ஏடுகளினால், அதனால் வாய் திறந்து கத்தவும் கூடவில்லை; பறவையின் கல்வியபிவிருத்தி முறையைக் காணுவோருக்கு உடல் நடுங்கும்.

அரசர் திருப்தியுடன் அரண்மனை செல்லும்பொழுது குறை கூறிய கோட் சொல்வியின் இரண்டு காதுகளையும் பிடித்து நன்றாக முறுக்கும்படி அரண்மனைக் கிங்கரர்களுக்கு உத்திரவிட்டுச் சென்றார்.

பறவையின் வாழ்க்கை.

இவ்விதம் பறவை கொஞ்சம் கொஞ்சமாகத் தன் காலத்தைத் தள்ளிவந்தது. அதுவரை அதன் முற்போக்கைக் கண்டு கல்வி இலாகாவைச் சேர்ந்தோர் திருப்தி கொண்டனர். என்ன இருந்தாலும் இயற்கைக் குணம் இப்பயிற்சி முறைகளால் மாறிவிடுமா? எனவே காலைச் சூரியவெளிச்சம் கூட்டுக்குள் பட்டதும் பறவை தனது இறக்கைகளை பட பட வென்று அடித்து வந்தது. சில சமயத்தில் கூண்டின் கம்பிகளைத் தன் அலகால் அசைத்துப் பிடுங்கவும் முயன்று வந்தது.

"இதற்குச் சற்றும் மரியாதை தெரியவில்லை" என்று கொத்தவால் கடிந்து கொண்டார்.

உடனே அரசரின் கல்வி இலாகாவில் இரும்பு வேலைக்கு ஓர் ஆள் நியமிக்கப்பட்டது. அவன் தன் பட்டறையைத் திறந்து கொண்டான். அப்பப்பா! காது பொறுக்காத செம்மட்டியடி! சீக்கிரமாக பெரிய விலங்கொன்றும் செய்து முடிக்கப்பட்டது. பறவையின் கால்கள் இரண்டும் சேர்த்து விலங்கிடவும் பட்டன.

அரசரின் மைத்துனர் வந்து பார்வையிட்டார். இப் பறவைகளுக்குக் கொஞ்சம் கூட மூளை கிடையாது! அத்துடன் நன்றியறிதலுமில்லை" என்று முணு முணுத்துக் கொண்டே சென்றார்.

பின் பண்டிதர்கள் ஓர் கையில் புத்தகமும் மற்றோர் கையில் பிரம்புமாக வந்து சேர்ந்தனர். முறைப்படி பாடங்களைக் கற்பித்தனர்.

பறவையின் மரியாதையற்ற நடத்தையைக் கூர்மையாய் கவனித்த கொத்கவாலுக்குப் பட்டமும் கிடைத்தது. விலங்கின் வேலைப்பாட்டுக்காக இரும்பு வேலைக்காரனும் பட்டம் பெற்றான்.

பறவையோ இறந்தது.

இந்த சம்பவம் எப்பொழுது நடந்ததென்பது மட்டும் எவருக்கும் தெரியாது. கோள் சொல்லியே இந்த விஷயம் ஊர் முழுவதும் பரவுவதற்குக் காரணமானான்.

அரசன் மருமகன்மார்களைக் கூப்பிட்டு "நாம் ஏதோ கேள்விப் படுகிறோமே! அதன் விவரம் என்ன" என்று கேட்டார்.

"அரசே! பறவையின் கல்வி முடிந்து விட்டது" என்று மருமகனார்கள் பதில் அளித்தனர்.

"அது குதிக்கிறதா" என்று கேட்டார் அரசர்.

"இல்லவே இல்லை" என்று விடை கூறினர் மருமகன்மார்கள். "அது பறக்கிறதா"

"இல்லை"

"பறவையைக் கொண்டு வாருங்கள்" என்று அரசர் உத்தரவிட்டார்.

கொத்தவாலும், சிப்பாய்கள் பலரும் முன்னும் பின்னும் காவல் புரியப் பறவை அரசர் சமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அரசர் அதன் சரீரத்தை தன் விரலால் அமுக்கிப் பார்த்தார். அதன் வயிற்றில் அடைந்திருந்த ஏட்டுத் துண்டுகள் மட்டும் தான் "கா கா" வென்றன.

புதுக் கற்பனைகள்.

சைவவுலகில் ஒருவர்.

(ஸ்ரீ வாதூலன்.)

இளவேனிற்காலம்; மாலை நேரத்தின் ஆரம்பம்; வினைவழியே செல்லும் பிறவிபோலக் காவிரியின் நீரோடுகால் பரந்த மணற்றிட்டுக்களின் இடையிடையே, வளைந்தோடிச் சப்தித்தும், சுழன்றும், தேங்கியும் ஓடியது. காவிரியையடுத்த கரை! படுகைகளில் இருளை இடைவிடாது பரப்பும் பெருமரங்கள் அடர்ந்து உயர்ந்து விளங்குங் காட்சி! தெங்கு, வாழை, கமுகு, மா, பலா முதலிய மாந்தர்க்குப் பெரிதும் பயன் படும் விருக்ஷங்கள் தத்தம் தண்ணளிப் பயனாகுங் கொடைப்பொருளுடன், விளங்கும் தோற்றம் வழியோடு செல்லும் கருமிகளின் வாழ்க்கையைத் திருத்தத் தவறியதில்லை.

தமக்கு முன்னேயுள்ள பாதையை அடிக்கடி நோக்குவதும், தம் இரு புறங்களிலும் விளங்குகின்ற இயற்கையின் எழிலை வியந்து நோக்கி, அப்பொருள்கள் யாவற்றுள்ளும் இலங்கும் இறைவனின் அன்பழகை கண்கள் பனிப்ப நோக்கி நடப்பதுமாக வொரு தொண்டர் காணப்படுகின்றார். திருப்பழனப் பதியிலிருந்து காவிரிக்கரையுடன் நேர் கிழக்காக வந்த அச் சைவர் நாவரட்சி மீதூர நாற்புறமும் நோக்குகின்றார். அவர் சற்று தூரத்தில் காண்பதென்ன?

ஓர் அழகிய சோலை! காவிரியின் கோடை நீரோட்டமும் அச் சோலையைப் பார்க்க ஆவல் கொண்டதேபோல அங்கு வணங்கியோடி சான்றோரின் உள்ளம் போலத் தெளிந்துறைந்து விளங்கும் ஓர் துறையாகக் காணப்படுகின்றது. நல்வாழ்வையடைய பெரியோரைப் பேணி நலமுற்றிடும் நங்கையரைப் போன்று தென்றலும் அத் துறை நீரினிற் படிந்து இன்புறக் குளிர்ந்து குழைந்து வீசுகின்றது. அதன் எதிரே விளங்கும் ஒரு தண்ணீர்ப்பந்தல்; நெஞ்சுபுகைய நாவரண்டு களைத்து வந்த பாட்டைசாரிகள் பலர் பளிங்கு போன்றும் தண்ணென்றும் தழைத்த நீரைப் பருகி விடாய் தீர்ந்து மகிழ்வுடன் செல்வதைக் கண்ட தொண்டர் தாமும் அந்தத் தண்ணீர்ப் பந்தலின் வாயிலைக் குறுகுகின்றார்.

சிவனடியாரின் திருநீற்று மெழுகிய தோற்றம் அங்குள்ளவர்களை அன்பும் இன்

பும் கொண்டு பார்க்கச் செய்கின்றது. சிவச் சின்னமும், உழவாரப் படையும் தொண்டரின் பெருமையைச் சிறப்பித்துக் காட்டுகின்றன. சிவ பக்தர் பலர் அன்புடன் வரவேற்றுபசரிக்க, அந்த சைவர் தாம் நடந்து வந்த சிரமத்தை மறந்து அந் நீர்ச்சாலை முழுவதையுங் கடைக்கணிக்கிறார். ஆங்குள்ளோரின் கண்களும் அவ்வொருவரின் கவனத்திலேயே ஈடுபடுகின்றன. இப்பொழுது அவரிடம் எல்லோருங் காண்பது என்ன?

பெருவியப்பு! நெஞ்சு கருக கஷ்டத்தைக் காட்டும் முகம். அனலிலிட்ட புழுபோலத் துடிக்கின்றார்கள் அங்குள்ளவர்கள். "ஐயையோ! சிவாபராதம் ஏற்படுமோ?" என அவர்கள் அஞ்ச அச் சைவர் எப்பொருளேயோ கண்டு துயரமுறுகின்றார். அப் பொருளைத் தவிர்த்து வேறு எப்பொருளை நோக்கினும் அவரது அறிவு கலங்குகின்றது. "இஃதென்ன? எனது சிறுமையை வெளிப்படுத்தும் திருவருளோ?" என ஏங்கிப் பொருமுகிறார்; தொண்டர் கண்களைத் துலக்குகிறார். இப்பொழுதும் அதே காட்சி! அங்குள்ளவர்களும் உணருமாறு அவரது கண்கள்

....
'திருநாவுக் கரசே'னும் பேர்
சந்தமுறை வரைந்ததனை
எம்மருங்குந் தாங்கண்டார்

எனக் கண்டு நாணின. 'திருநாவுக்கரசு' என்ற பெயர் எங்கும் எப்பொருளிலும் வழங்கி வந்தது. திருநாவுக்கரசு என்ற நீர்ச்சால்; திருநாவுக்கரசு என்ற குவளை; திருநாவுக்கரசு என்ற நீரூற்றும் அந்தணர். திருநாவுக்கரசென்னும் நாமம் எப்பொருளையும் ஆட்கொண்டு, அணிபெறக் கேட்கப்படவே, தொழும்பர் மனவேதனை யுறுகிறார். நாணம் துயரம் இவை கோபமாக அன்பரின் முகத்தை அடைந்தது. அங்குள்ளாரைச் சுட நோக்கி, "இந்தப் பெயரிட்டு இந்தத் தண்ணீர்ப் பந்தலை அமைத்தவர் யாரோ?" என்றுக் கேட்கிறார்.

அக் கூட்டத்தினுள் துணிந்த ஒருவர், "ஐயா! இப் பெயருடையவரைப் பற்றித் தாங்கள் அறியாதவரா? இந்தப் பெயருடையவரின் அரும் பெருஞ்சித்தியை நன்குணர்ந்தோர் தாம் இப் பெயர் இட்டனர். அங்ஙனமிட்டவர் ஒரு தனிகர், அந்தணர். அவர் தமது உடைமையாயுள்ள இரு வகைப் பொருளுக்கும் இவ் விசைப் பெயரினையே யிட்டு அழைத்து வருகின்றார். அவ்விதம் அழைப்பதில் தனித்த வொரு இன்பத்தை அவர் அனுபவிக்கின்றனர். அப்பூதி அடிகள் என்பது அவருடைய திரு நாமம்" என்று சொல்லவும் சிவ பக்தர் சிந்தனைக் கடலில் ஆழ்ந்து, தத்தளிக்கின்றார். அவரது நெஞ்சம், "எக்கருத்து பற்றியோ இச் செய்கை?" என ஆராயத் தொடங்குகின்றது. பலவிதம் முயன்றும் உண்மையைக் காண முடியவில்லை.

உடனே அச்சைவர் அவர்களை நோக்கி, "அன்பர்களே! நீங்கள் சற்றுமுன் சொன்ன பெரியவர் எங்கு உள்ளார்? அவரது இல்லம் இங்கிருந்து எவ்வளவு தூரமோ?" என உசாவ அவர்கள் மகிழ்வும் பணிவுங்கொண்டு, "பெரியோரே! இப்பொழுது சற்று நேரத்துக்கு முன்னர்தான் இங்கிருந்து அவர் வீட்டுக்குச் சென்றனர். அவரது இல்லம் வெகு தூரம் இல்லை; இதோ தெரிகிறதே, இவ்வீடு" என்று சுட்ட, அவரைக் கண்டு களிக்க எண்ணங் கொள்ளுகிறார்.

சிவச்சின்னமும் உழவாரப் படையும் ஏந்திய அவ்வுத்தமர் திங்களூர் மறைத்தலைவரின் இல்லம் நோக்கி வந்ததைப் பிறர் உணர்த்த, அப்பூதி அடிகளார் பெருமகிழ்வெய்துகின்றனர். இயல்பிலேயே சிவபெருமான் பால் விளைந்த நெஞ்சுடைய ஐயர் பரபரப்புடன் வாயிலையடைந்து சைவமன்னனை வரவேற்று நமஸ்கரித்து, "எத்தவம் யான் செய்தேனோ, கருணையே உருவெடுத்தாற் போன்று உலகுய்யத் தோற்றிய வடிவம் பெற்ற நீங்கள் இவ்வேழைக் குடிசைக்கு எழுந்தருளியது எப்பரிசோ!" என்று உபசரிக்கிறார்.

"உயரிய பெருமையை என்றும் பூண்ட எம் இறையாம் நீலகண்டனைத் திருப்பழனத்துள் இறைஞ்சி இவ் வழிக்கொண்டனன் யான். இங்கே அறத்தின் வளர்ச்சியையுங் கண்டனன். உம்முடைய பிற அறச் செயல்களையுங் கேட்ட

னன். ஆனுல்.........'' என்று நாணம் நிறை கொள்ள நிலத்தை நோக்கியவாறு நிற்கும் அடியவரைக் கண்டு அப்பூதி அடிகளார் தடு மாற்றம் அடைகிருர்.

மீண்டும் அவர், ''ஆனுல் நீங்கள் மங்கை பாகனின் அன்பர் பொருட்டு அமைத்தத் தண்ணீர்ப் பந்தற்கு, உமது பெயரை வைக் காமல் இன்னெருவரின் நாமத்தை நீவிர் இடுவதற்கு காரணம் யாதோ?'' எனக் கேட்டு வருந்துகின்ருர். அப்பூதி அடிகளார் இம் மொழிகளிலே அவரைச் சந்தேகப் பார்வை யுடன் கவனிக்கவும், திருநீறு, சிவச்சின்னம், உழவாரப்படை யாவும் வேஷமே என்றும், அகத்திலே அப்பெயர்பால் அன்பிழந்தவர் என் றும் உணர்ந்து கொள்ளவும், கோபம் அவ் வந்தணரையும் அடிமை கொள்ளுகின்றது. ''சைவவேடத்தில் தன்னை யொளித்து பொரு மையே உருக்கொண்ட ஒரு பொய்யனே இவன்'' எனக்கருதி அலக்ஷியத்துடன், அவ ரைப் பார்க்கிருர். 'அந்தணன் கோபம் அண்டத்தையும் பெயர்க்கு மல்லவா?'

''உமக் கென்ன ஒன்றுந் தெரியாதா?'' எனத் தொடங்கிச் சீறிவிழும் அடிகளார் நாவுக் கரசர்பால் வைத்த அன்பு அசைக்க வொண்ணுமோ? ''தெரியாது போனுல் நான் உமக்குச் சொல்லுகிறேன், கேளும்! லஜ்ஜை என்ற பண்பைப் பிரகிருதியிலே மறக்கு முறையிலே பல தீயக்கொள்கைகளு டைய சமணம் என்ற படுகுழியிலே வீழ்ந் தும், கறைமிடற்றண்ணலின் கருணைப் பிர வாகத்திலே பல்லவ மன்னனின் சூழ்ச்சிகள் யாவற்றையும் கடத்தித் திருத்தொண்டின் வண்மையாலே உலகுய்யத் தோன்றிய அவ் வொருவரின் பெயர் இதல்லாவிட்டால் வேறு எதுவோ? உமக்கும் எனக்கும் இவ்வுலகுக் கும் இறையருளைப் பொழிவிக்கக் காரணமான வரின் பெயரையே நான் எழுதினேன். ஆ! நன்றலாத வார்த்தையை நாக்கூசாது நீங்கள் சொல்ல எப்படித்துணிந்தீர்? இந்தப் பெயரில் உமக்கென்ன பகைமையோ? பல்ல வன் பிணித்துவிட்டக் கல்லுடன் பொங்கு கடலிலே பாய்ந்து கொன்றைசூடியின் நல் லருளைத் துணைகொண்டு தெப்பமாக்கிக் கரை யேறிய திருநாவுக்கரசினை, இச் சைவ உலகம் முழுவதும் அறியுமே? சைவ உலகில் அந்த ஒருவரை நன்குணராத நீர் யார்? உமக்கு எந்த வூர்?'' என ஆத்திரம் பொங்கக் கூறு கின்ருர் அப்பூதி அடிகளார்.

அந்தணர்ப் பெருமகனின் வெஞ்சின மொழி நமது தொண்டரை நாணுறச் செய் கின்றது. ''அணியன்ரே நாணுடைமை; சான் ரேர்க் கஃதின்றேற் பிணியன்ரே பீடு நடை'' என்ற பொய்யாமொழியின் பொருள் வடிவமாக நிற்கும் தொண்டர், கண்ணீர் ததும்ப, ''ஐயனே! பரசமயப்படுகுழியினின் றும் பிறைசூடிய பெருமானுல்—பெருஞ்சூலே யாம் நோய் கொண்டு உழன்ற தெளியாத சிறியேனைச் சைவப்பெருமை யொளியால்— தடுத்தாட் கொள்ளப்பட்ட பேதை—அந் தத் திருநாவுக்கரசு என்பவன் இவனே!'' என்று கூறுகிருர்.

அவ்வளவே! அந்தணரின் நிலைமையைச் சேக்கிழாரே யன்றி வேறு எவரால் உள்ள வாறு எடுத்துரைக்கக்கூடும்? அப்பூதியடி களின் கரகமலங்கள் இப்பொழுது உச்சிமீது கூப்பியவாறு விரைகின்றன. சைவத்தின் அருள் விண்ணினின்றும் பொழிவதே போ ன்று அவருடைய கண்ணருவி கனிந்து ததும்புகின்றது. நெஞ்சகத்துள்ள அன்பு விஞ்சி மேலெழ நாக்கு குழறுகின்றது. உடற்கூச் செறிய அடியற்ற நெடுமரம்போல ஸாஷ்டா ங்கமாகத் தொண்டரை நமஸ்கரிக்கின்ருர் அடிகள். இக் கண் கொள்ளாக்காட்சி ஆங் குள்ள அந்தணர்ப் பெருமக்களுக்கும் அடி களின் மைந்தர்களுக்கும் ஆனந்தத்தை அளிக் கின்றது. அவர்களும் தத்தம் நிலையினை யிழ ந்து, அற்றவர்கள் அருநிதியாப் பெற்ரோர் போல, தொண்டரைச் சூழ்ந்து கூத்தாடி வலம் வருகின்றனர்.

பரவசமடைந்த அப்பூதியடிகள் தமது செவ்விய அங்கைகளைக் கூப்பியவாறு, ''ஹே த்ரிசூலின்! ஏழையேனின் பொருளைத் தாங் கள் துய்க்க வேண்டும். இதுவே எனது நீண்ட வாழ்க்கையின் பயன்'' என்கிருர். ஆண்ட திருநாவுக்கரசு அதற்குடன்பட அந்தணர் விரைந்து அர்க்கியபாத்தியாதிகளால் உபசா ரங்களை வேதமுறையும் சைவமுறையும் வழாது

சிறப்புறப் புரிகின்றார். ஸ்ரீ பாததீர்த்தமும் சேவடிப்பூவும் உச்சிமீது கொண்ட அடிகள் திருத்தாண்டகவேந்தனை அமுது செய்விக்கும் பணியில் அமைகின்றார். ஆராய்ந்தெடுத்த காய்கறிவகைகள், அன்பார்வத்தில் ஆக்கப்பட்டத் திருவமுது, அதிதியின் ஸத்காரத்திற்கு வேண்டும் முக்யமானவை யாவும் விரைவிலே ஸித்தமாகின்றது. போஜனபாத்திரம் ஒன்று தான் தேவை; அந்தத் தொண்டில் அடிகள் தமது மூத்த திருநாவுக்கரசை ஏவுகின்றார். அம்மகனைப் பாருங்கள்! 'தக்கார் தகவில ரெனப தவரவர் எச்சத்தாற் காணப்படும்' என்ற தமிழ்த்திருமறையின் தோற்றமோவென விளங்கும்; அவன் வாழையிலை அரியச் செல்லுகையிலே, "என் நற்றாய் தந்தை ஏவ நான் இப்புனித கைங்கரியத்தில், ஈடுபட்டேன்" என அகத்தே மகிழ்வு கொண்டு செல்லுகிறான் திருநாவுக்கரசு. வாழைத் தோட்டம்; ஆங்கு அவனது உள்ளத்தைக் கவருகின்றது, ஒரு பெரிய வாழை மரம். அதன் நடுவிலே பொன்னிறமும் பசுமையும் கொண்டதும் நீண்டு அகன்றதுமான இலையொன்று காணப்படுகின்றது. அதிதிக்கென அந்த இலையைக் கொய்ய முற்படுகிறான் மூத்தத் திருநாவுக்கரசு. அந்தோ, அவ்வளவே! அந்தணச்சிறுவனை ஆங்கொரு நாகம் அங்கையினைச் சுற்றிக்கொண்டு தீண்டுகின்றது. அலறி துடித்து அச்சிறுவன் தன்னுடைய செங்கையை வெளியே இழுக்கின்றான்.

பாவம்! ஆங்கு காணப்படுவது என்ன? கையைச் சுற்றிய உடலுடனும், சிவந்த விழியுடனும் கோபத்தால் சீறுகின்ற படத்துடனும் விளங்குகின்ற அந்த நாகத்தைக் கண்டு வெருவி உதறுகின்றான். "பாம்பெனிற் படையும் கலங்கும்" என்பர் பெரியோர். ப்ரஹ்மசாரி மூத்தத்திருநாவுக்கரசின் உறுதிபட்ட மனம் நினைப்பதைப் பாருங்கள்! "இப்பாம்பின் படுவிஷம் தலைக்கேறுவதற்குள் ஆதித்தியத்தை நிறைவேற்றுதலில் நான் காலதாமதம் செய்யேன்" என நினைக்கின்றது அவனுடைய வீரத்திலே தோய்ந்த மனம். வீட்டை நோக்கி விரைகின்றான் அரிந்த இலையுடன். எப்படி! "புனிதருக்கியற்றும் விருந்தினை வெல்லுமோ விதியின் பயன்? அறிந்தவர் அமுது செய்ய இடையூறாக, நாகம் தீண்டியதை நான் எவருக்கும் கூறேன்!" எனச் சிந்தித்தவாறு விஷவேகத்தினும் விரைவாக வீட்டை அடைகின்றான் அவன்.

சமையலறைப் படிக்கட்டு! உடலையெரிக்கின்ற அக் கொடிய விஷம் ஸப்த தாதுக்களிலும் பரவி அப்பொழுதே முடிவிடத்தை அடைகின்றது. பாவம்! அதன் பயனைக் காண்போர் சுலுவில் தெரிந்து கொள்ளும்படி அவனுடைய பற்கள் நீலம் பாய்கின்றன. கண்களும் வண்ணமும் மேனியிழந்து கருகுகின்றன. வாய்மொழி குழறுகின்றது. விஷம் பற்றிய ஆவி ஊசலாடுகின்றது. மயக்கம்! அப் படிக்கட்டிலே நிலை தடுமாறி விழுகிறான் மூத்த திருநாவுக்கரசு; அவ் வீழ்ச்சியிலும் தான் அரிந்துவந்த உண்கலக் குருத்தைத் தாயிடம் கொடுத்ததில் அவன் தவறவில்லை.

அவ்வருமை மகனின் தந்தையும் ஆங்கு வருகிறார். "விஷம் தீண்டி உயிர் துறந்தான் இவன்" எனத் தெரிகின்றனர் அப் பெற்றோர். "சைவமன்னன் பிக்ஷை செய்ய இப்பேரிடையூறு குறுக்கிட்டதே! இனி என் செய்வது?" என ஏங்குகின்றனர். முடிவில் சைவப்பற்று மக்கட் காதலை வெல்லுகின்றது. விரைவில் அம்மகனை ஒரு பாயுடன் சுற்றிக் கண் காணாத விடத்து மறைத்து வைக்கின்றார்கள் அவர்கள். மறைவலார்த் தமிழ் மறை வேந்தன்பால் வைத்த அன்பு எத்தகையது என்பதை எவரால் எடுத்துக் காட்டக் கூடும்?

நடையைக் கடந்து வெளித் திண்ணையை நோக்கி விரைகின்றார் அந்தணர். துயரமே சிறிதுமின்றிப் பிக்ஷை செய்யத் திருநாவுக்கரசை அழைக்கின்றார். தொண்டர்ப் பெருமகனும் அதற்கிசைய அர்க்கியபாத்தியம் முதலிய சைவ வழிபாட்டுடன் அடிகள் அவரை வரவேற்று கூடத்திலே ஒரு ஆஸனத்தில் அமரச் செய்கிறார்.

ஆஸனத்தமர்ந்த நாவுக்கரசர் திருநீறு அணிந்து ஆங்குள்ளவர்களுக்கும் அன்பார்வத்துடன் அருளுகின்றார். பரிகலக் குருத்துடன் தம்பால் அணைந்த அந்தணருக்கும்

விபூதியருளி, "உமது மக்களுள் மூத்ததிரு நாவுக்கரசு எங்கே? அவருக்கும் விபூதி தந்தருள வேண்டும்; அழையுங்கள்!" எனப் பணிக்கின்றார்.

இம் மொழியினைக் கேட்டதும் மறையோன் மனம் பதைக்க, உடல் நடுங்குகின்றது. "சைவப் பெருமை முன் தமது செய்கையை எத்தனை நேரந் தான் ஒளிக்கக்கூடும்?" என ஏங்குகிறார் அடிகள். இனி, என் செய்வது? "அந்தணர் சீலத்திற்கும் சைவப் பெருமைக்கும் முன்னிலையில் இனிச் சொல்லாது மறைப்பது கூடாது" என இடிக்கின்றது அடிகளுடைய மனம். "இதற்கு அவன் இங்கு பயன் படமாட்டான்" எனக் கூறுகின்ற அடிகள் அதிதியின் சிந்தனைக் குழப்பத்தைக் காண்கிறார். அதிதியின் ஸந்தேகமும் அதிகரிக்காதிருக்க, மீண்டும் அப்பூதியார், "ஸ்வாமி! பிக்ஷைக்குக் காலந் தாழ்த்தும் வகையிலே, அவன் விஷம் தீண்டப்பட்டு இறந்தான்" எனக் கூறுகின்றார்.

மாபெரும் மறையோனின் சிவ பக்தியும் சைவாதித்தியமும் நாவுக்கரசின் தோற்றத்துள் தோன்றாத் துணையின் அருளை எழுப்புகின்றன. "கொண்டு வாருங்கள் அம்மகனை. பின்னர் தான் பிக்ஷை" என்ற சைவாக்ஞையிலே அப்பெற்றோர் தம் புதல்வனை நாவுக்கரசர்பால் கொண்டு வருகின்றனர். மக்கள் புடைசூழ, சவத்துடன் அவ்வூர்ப் பெருமானின் கோயிலை யடைகின்றார் சைவத்துறவி. அங்கே முப்புரமெரித்த முதல்வோன் முன்னிலையிலே சைவப்பணியிலே பிணமாகிய மகனைக் கிடத்தி. அச் சைவமே விரித்த சிவபெருமானின் சீரினை "ஒன்று கொலாம்" எனத் தொடங்கிப் பதிகம் பாடுகின்றார்.

ஆங்குச் சூழ்ந்து நின்ற மக்களும் பெற்றோரும் வியப்பெய்த அவ்வரவுண்ட மகன் பதிக முடிவிலே மீண்டும் உயிர் பெறுகின்றான். அவ்வளவே! அவ்வாலயம் முழுவதும் 'ஹர! ஹர!' என்ற பேரொலி! அந்தணர் குழாம் அகமகிழ, அப்பூதியடிகள் திருநாவுக்கரசுக்குத் திருவமுது செய்வித்து மகிழ்கின்றார்.

அப்பூதியடிகளுடன் சின்னாள் உறைந்து பிறகு திருப்பழனத்தை யுற்ற ஸ்வாமிகள் அப்பூதியடிகளின் அன்பின் வலிவால் தமது தொடைமாலைத் திருப்பதிகத்திலே,

"வஞ்சித் தேன் வளை கவர்ந்தான்
வாரானே ஆயிடினும்
பஞ்சிக் காற் சிறகன்னப்
பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப் போய்க் கலிமெலிய
அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப் பூவாய்—நின்ற
சேவடியாய் கோடியையே!"

என அப்பூதியடிகளைச் சிறப்பிக்கின்றார்.

............................எங்கள் பிரா
னனமார் வயற்றிங்களூரினில் வேதியன்
அப்பூதியே

என நம்பியாண்டார்நம்பி யருளிய திருத்தொண்டர் அந்தாதியிலும்,

..................திருநாவுக்கரசெனுமோர்
சொற்றுனெழுதியுங் கூறியுமேயென்றுந்
துன்பில் பதம்
பெற்றுனொரு நம்பி அப்பூதி யென்னும்
பெருந்தகையே

எனச் சிவப்பிரகாசர் அருளிய 'நால்வர் நான்மணி மாலை'யிலும், ஸுந்தரர் பாடிய 'திருத்தொண்டத்தொகை'யிலும்

"ஒரு நம்பி யப்பூதி யடியார்க்கு மடியேன்" என மிகைபட சிறப்பித்துப் போற்றப்படுகின்றார் அப்பூதியடிகளார்.

"சைவ உலகிலே ஒருவர்" என திருநாவுக்கரசரின் இச்சம்பவத்தைச் சிவப்பிரகாசர்,

துடைவாழை மேன்மட வாரல்சிற்பாம்பு
தோட மயங்கி
நடைவாய்ப் பிணமேனப் பட்டார் பெறு
கிலர்; நச்சுகுலை

யுடைவாழை மேலுர கந்தீண்ட மாய்ந்த
வோருவனுயி
ரடைவா னருள்புரி யுந்திரு நாவுக் கரசி
னேயே

எனச் சித்திரித்து திருநாவுக்கரசைப் போற்றும் வகையிலே சைவத்தின் மேன்மையை உலகினருக்கு எடுத்து விளக்குகின்றார்.

ஒருநாள் கலியாணமும் கங்கைகொண்ட சோழபுரமும்.

“கலைவாணன்.”

I

ஒருநாள் கலியாணம்; அதற்கேற்ற ஊர் கோலம். எனினும் அதையும் அலக்கழிக்க ஒரு சிறு மழை. சங்கல்பப்படி ஊர்கோலத்திற்கு முன்னரே விருந்து நடைபெற்றது. சம்பந்தியினத்தவரோ, செவிக்குணவு சிறிது மாலைச் சங்கீதத்திலிருந்ததால், ‘சிறிது வயிற்றுக்கு மீய’க் காலதாமதம் செய்தனர். அதற்குள் அவ்வூர் அக்கிரகாரச் சிறுவர்கள் உள்ளே புகுந்து இலைகள் முன்னர் உட்காருவராயினர். இதைப் பெண்வீட்டுக்காரப் பெருமகனின் பெரிய சகோதரன் காணப்பொறுதவனுகிக் கண்கொள்ளாக் கடும் கோபம் பூண்டு, “ஏண்டா! உங்களுக்கு வீடு வாசல் ஒன்றுமில்லையா? தாய் தகப்பன் கிடையாதா? உங்களை யாரடா இவ்விடத்தில் சோற்றுக்கழைத்தது? போங்களடா வெளியிலே” என்று மிரட்டி, கைகொண்டிழுத்து, இரண்டொரு பெயரைக் கன்னத்திலும் அறைந்து வாயில் முன் நெட்டித் தள்ளினன். உண்மையில் அவர்களுக்கு தாய் தகப்பன் இவ்வுலகத்தில் இவ்வமயம் இல்லை. அவர்கட்கு வீடு வாசலுமில்லை. அவர்களுக்குக் கலியாணக் கடிதம் கைக்கடிதம் ஒன்றும் அனுப்பப் பெறவில்லை. பலதடவைப் பலகாரப் போசனங்களாலும், ‘ஸ்பெஷல்’ காபி, கலர். சோடா பானம் முதலியவைகளால் அக்கி மாந்தியம் அடைந்து அவஸ்தைப் பட்டும் அருமையாய் கைலாகு தந்தழைக்கப் பெற்றவரும் அன்று. கேவலம் அநாதைப் பையன்கள்; பசியொன்றே யுள்ளவர்கள்; நற்போசனத்தை நாள்கணக்காக உண்ணக் காணுதவர். கலியாணக் குதூகலத்தில் விளக்கருகில் போகும் விட்டில் போல உட்சென்றவர். அடித்தும் வெளியில் போக ரோசமற்ற மனமுள்ளவர். இறகு துடிக்க எரியும் விளக்கையே கனியென நம்பி மறுபடியும் அவ்வீட்டிலேயே சென்றனர். பதுங்கி மற்றொரு பந்தியில் அமர்ந்தனர்; புசித்தனர்; அங்கொரு மூலையில் ஒதுங்கி உறங்கினர்.

இதற்குள் மழை யொருசிறிது பெய்து அடங்கிற்று. கை பிடித்திழுத்து போசனம் மறுத்த பாவி பட்டணத்தில் ஒரு பெரிய மனிதனும், ஆயிரம் ஐயாயிரக் கணக்கில் மாதம் சம்பாதிக்கிறவனும். அது எந்த உத்தியோகமோ, நமக்கென்ன? அவன் பெரிய மோட்டார்காரை அனுப்புவதாகத்தான் இருந்தான். ஆனல் அவன் டிரைவருக்கு அஞ்ஞாத வாசம் ஒரு மணிக்கு முன்னரே விதிக்கப்பட்டது. பாண்டவர்களுக்கு ஏற்பட்டதில் இது எம்மாற்றம்! தம்பிக்குப் பெரிய ஏமாற்றம். அந்த ஊரில் பாரம்பரை மிராசுதாரன், ஸ்தல ஸ்தாபன மெம்பர், மைனர் இத்யாதி கீர்த்தி வாய்ந்த சீமானின் ஒரு மோட்டார் அலங்காரத்துடன் வந்தது. அவன் ஸ்தோத்திரப்பிரியன்; மேலும் இளைய சோதரனின் நண்பன். மாப்பிள்ளையும் பெண்ணும் விரைவில் அலங்கரித்துக்கொண்டு புறப்பட்டனர். ஊர்கோலம் சுருக்கப்பட்டதாகையால், அவர்கள் பிரதம

ரகசிய சம்பாஷணமும் சுருக்கமாகவே முடித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. லீவும் கொஞ்சம். விவாகமும், "போட்டோ—5 நிமிஷ சந்திப்பு—இரண்டு நாள் வாய்தா—டிரஸ் செய்ய, கடிதம் போட" இவ்வளவே! ஆகா, என்ன விந்தை! அந்த இரகசியங்களையெல்லாம் புன்னகை, கண் சிமிட்டல், கைப் பிசைதல், கால் நெருக்கல், பக்கத்தணைதல், முகந்திரித்தல்—இதன் வாயிலாகத் தம் மட்டிலும், இரண்டு மூன்றுதரம் வெளிப்படையாக மாலை மாற்றிலும் கைலாகுகளிலும் வெகு சாதுரியமாகப் பேசிவிட்டனர்.

ஆனால் ஊர்கோலத்திலோ பெரிய விவாதங்கள் அந்தப் பெரிய மனிதன் புத்திரனுக்கும் அவர்தம் நெருங்கிய பந்து ஒருவருக்கும் நடந்து வந்தன. வழியில் சாணங்கள் காலில் விடாமல் மிதிபட்டன. பக்கத்திலிருந்த முனிஸிபல் சேர்மனை ஒரு தாக்கு தாக்கினார். அவர் ஊர்கோலத்தன்று தெருவெங்கும் ரோசாமலர் தூவ தான் கொணர்ந்த தீர்மானம் தோற்றதிற்கு வருந்தினர். மற்றும் மாடுகளுக்காவது அல்லது அவற்றைத் தீனி போடாமல் இரவில் ஒட்டும் மாந்தர்களுக்காவது அன்று அம் மதியீனம் வேண்டாம். ஆனால் கலியாணத்தன்றுதான் தினம் எச்சிலை வேட்டையாடும் கால் நடைகளுக்கு ஒரு தனி உற்சாகம். அவைகளும் பல கலியாணப் பந்தல்கள் முன் விழும் எச்சில்களை நரிக்குறவர், பிச்சைக்காரர், நாய் கழுதை இவர்களுடன் போராடி விலாப்புடைக்க வுண்டு பாதையையும் அசுத்தப்படுத்தின. மிருகங்கள், பாவம்! "பெண்டுகள் எக்காரணம் கொண்டும் இவ்வூர் கோலங்களுக்கு போகக்கூடாதென்றார்" அந்தப் பெரிய மனிதரின் புத்திரன். இவன் இங்கிலாந்து சென்று திரும்பிய இந்திரியஜித்து. இந்தப் பவனியில் வரும் பெண்களைக் கண் வெறிக்கப் பார்க்க காலிப்பயன்கள் கூட்டம் தான் பெருகும்" என்றான் அந்த அனுபவசாலி. இதற்குச் சமாதானம், "இப்படி ஊர்கோலம் போனால்தான் அநேக பந்துக்கள், சிநேகிதர்கள் இவர்களைச் சந்திக்கலாம், இளைஞரும் சிறுமிகளும் ஒருவரை யொருவர் பார்க்கவும், இன்னின்னவர் என்று தெரிந்து கொள்ளவும், கலியாணமாகாப் பெண்களுக்கும் பையன்களுக்கும் ஒரு நேத்திரானந்தமும் அழகுத் தெய்வத்திற்கோர் அற்புத நைவேத்தியமும் ஆகுமையா" என்றார். "மகா அழகுத் தெய்வம் எல்லாம்; டாக்கி நக்ஷத்திரங்கள் போலும், ரவை நக்ஷத்திரங்கள் தாராகணத் தூசி போலவும், என்ன கிளம்புகிறதுகள்? ஏதோ, ஐந்து, ஆறு, கண்ணிற் கினியவாக இருக்கிறதுகள். மற்றதெல்லாம், தலை நரையும் பொய்ப்பல்லும் உச்சிச் சொட்டையும் மூக்குக்கண்ணாடியும் சாய்ந்து தனமும் ஒய்ந்த நடையும், அளவிலாத சோடா பானமும், இடையிடையே பெருமூச்சுமாக வல்லவோ திரிகிறதுகள். ஏதோ, எல்லாம் புது "பேஷன்" என்ற சம்ஹிதைப்படி, "டோலக்" என்றமுறத்தையும், மஞ்சள் அறியா முகத்தையும், மயிலைபாய்ந்த கண்களையும் கொண்டு பவுடர் மினுக்கிலும், "காஸ்லைட்" சகாயத்திலும், கைலி புடவையுடன், காலை விசித்து நடக்கின்றனர். இதைப் பார்த்துத் தூக்கத்திலிருந்து எழுந்து வாசலில் நிற்கும் சிறு பெண்ணும் பையனும், 'ஓஹோ இது தான் சரி, ஈசுவரா! எனக்கும் இம்மாதிரி யருள்' என்று வேண்டிக் கொள்வார்கள்" என்று கர்ச்சித்தார்! இந்த சந்தர்ப்பத்தில் தோரண மத்தாப்பு அவுட் பன்னிரண்டு கட்டினது ஒன்றை வாணக்காரன் கொளுத்தினான். அதை ஒருவர் வீட்டிற்கு வாசலில் போட்ட கோடைப் பந்தலில் அருகில் பிடித்துக் கொண்டான். அதில் மத்தாப்பு எறிந்து வெடி வெடிக்க ஆரம்பித்தது. வாணத்திற்கு உரியவன் தன் வேலையைச் செய்தான். வாணம் அதன் வேலையைச் செய்தது. இதற்குள் சீமை மனிதன் "இது மத்தாப்புடன் நிற்கப்படாதோ! இதற்கு வெடியெதற்கு? தூங்குபவர்களை ஏன் எழுப்ப வேண்டும்" என்றான். "அவர்கள் பார்ப்பதற்காகத்தானே, சார், ஊர்கோலம்" என்று பதில் வந்தது. "இல்லை, சார், துர்தேவதைகள், கோரசப்தங்கள், அமங்கள வாக்கு, இவைகள் காதில் விழாமலிருக்கும்" என்றார் இன்னொருவர். "இல்லை. சார், இந்த ஊர்கோலச் செலவெல்லாம் பிள்ளை வீட்டாரைச் சேர்ந்தது. ஒரு ஊர்கோலத்திற்கு இந்த ஊரில் செலவு குறைந்தது ரூ. 60. அதில் பாண வேடிக்கையும் பாண்டு மேளமும் தவிர வேறென்ன இருக்கு" என்றார். "இல்லை, சார், மாப்பிள்ளை நீங்கள்

எல்லோரும் அவுட் பார்த்துக் கொண்டிருந்த போது, பெண்ணை—இல்லை அவள் கண்ணையோ கையையோ முத்தமிட்டார், நான் பார்த்தேன்'' என்றார். ''இல்லை, இல்லை. ஒரு கை குட்டையில் ஒரு கடிதத்தைச் சொருகினார்'' என்றான் மற்றொருவன். இதுகள் பெண் வீட்டுக்காரப் பிள்ளைகளும் மாப்பிள்ளை வீட்டு பையன்களும் அறிந்துவந்த துப்பு. இவர்களுக்கு அந்த அறைதைப் பையன்கள் போல் ஆழ்ந்த தூக்கம் வரவில்லை. அமித போசனத்தாலும், அபார விஷமத்தாலும் குறு குறுவென்று திரிந்தனர். வெற்றிலை போட்டுக் கொண்டனர்; சந்தனம் பூசிக்கொண்டனர்; பெரிய மனிதர்கள் போல் நடந்தனர்; வெறும் எட்டு ஒன்பது வயது சிறுவர்கள் அங்கு வந்த சமவயதுச் சிறுமிகளையும் ஓயாமல் குரங்குசேஷ்டையால் உபத்திரவித்தனர். இடையிடையே ஊர்கோலக் காருகில் சென்று தங்கள் கைங்கரியங்களையும் கடமையையும் ஒருங்கே நடத்தினர் பெரிய வீட்டுப்பிள்ளைகள்.

இதற்குள் ஊர்கோலம் கலியாணப் பந்தருக்கருகில் வந்தது. ''பாண்டுக்காரன் வாசிக்கவே இல்லையே, அநியாயமாகப் பணம் அடித்துக் கொண்டு போகிறானே'' என்று அவசரப்பட்டார் ஒருவர். ''ஆனால் அரை மணி இந்த வீட்டில் முன் கச்சேரி நடக்கட்டுமே'' என்றார் மற்றொருவர். ''ஸார், இதைப் பார்த்தால், போனபிற்பாடு ஊஞ்சல், அதன் பிறகு சேஷஹோமம், காலையில் ஆசீர்வாதம் இன்னும் எவ்வளவே கிடக்கிறதே'' என்றார் ஒரு லௌகீக ஞானி. ''எல்லாம் ஒரு நாள் கலியாணம், ஒன்றைப் பார்த்தால் ஒன்று இல்லை'' என்றார் ஓர் உதாசீனர். ''சரி, இந்த ஐரோப்பிய யுத்தம் இப்பொழுதுபோல் வலுத்துக் கொண்டு போனால், பாண வேடிக்கை ஊர்கோலம் எல்லாம் எடுபட்டுப்போய் விடு மல்லவா? போகட்டுமையா, தூக்கமாவது கெடாது'' என்றார் ஒரு நித்திரானந்தர். இதற்குள் தோரண மத்தாப்பு அவுட்டில் ஒன்று நிதானமாக வெடித்தது. அதன் பொறி ஒன்று ''விர்'' என்று பேசுபவர் முகத்தை நோக்கிப் பறந்தது. மற்றொன்று மாப்பிள்ளை ஊர்கோலக் 'காரின்' பக்கம் வந்தது. கோடைப் பந்தற்காரர் முணுமுணுத்தார்; ''சற்று தூர பிடிக்கப்படாதா, அப்பா'' என்றார்.

''ஆமாங்காணும், நாளைக்கு ஜப்பானியன் வெடி குண்டு வீசினால் கூட இப்படித்தான் சொல்வீர் போலும்; சற்று தூர போடப்படாதா என்று!'' இதற்குள் ஊர்கோலம் முடிந்து ஆரத்தி எடுத்தார்கள்.

II

அன்றிரவு எனக்கு சாப்பிடப் பிடிக்கவில்லை. பட்டினத்து பெரிய மனிதனின் அற்பத்தனம், ஊர்கோலத்திற்கு விஜயம் செய்த உறவினரின் கல்வி கேள்விகளின் நுட்பம், மாப்பிள்ளை பவனியின் பகட்டு, மேளக்காரனின் 'மோடி', அதற்குப் பாண்டுக்காரனின் எதிர் 'மோடி', கலியாணம் செய்து கொண்ட பையன் மூன்று டின் 'கோல்ட் ப்ளேக்' சிகரேட்டுகளை ஒரு நாளைக் கலியாணத்தில் தன் தோழர்களுடன் காலி செய்த விந்தை, அதைக் குறித்து ஆச்சரியமுற்ற அவன் தந்தை, அந்த ஊர்கோலத்தில் மயிர் கொக் கொக்க நரைத்த ஒரு சீமாட்டி, அந்தப் பட்டணப் பெரிய மனிதனின் பிரியை, சின்னஞ்சிறு சிறுக்கிகளுடன் ஏகும் திருக்கூட்டத்துள் ''நானொருத்தியல்லவோ'' என நடிக்கும் யௌவனபாசங்களும், எனது வயிற்றையும் உள்ளத்தையும் பிசைந்தன. இதற்குள் என்னையறியாமல் தூக்கமும் வந்தது. ஒரு மணி சாவகாசம் அயர்ந்து தூங்கினேன். பின்னர் வெகுவாக புரண்டும் கலங்கியும் நல்ல தூக்கம் வரவில்லை. சிறிது நேரம் உலாவினேன். நதிப்புறம் சென்றேன். தூரத்தில் ஒரு மோட்டார் பஸ் சப்தம் கேட்டது. சரி, இதில் ஏறுவோம் என்று நிஷ்காரணமாக ஏறினேன். பொழுதும் விடிந்தது... ......எங்கே போகவேண்டும் என்று கேட்டான். இந்த பஸ் எங்கே போகிறது என்று என்னை ''கண்டக்டர்'' கேட்டான். ''அரியலூர்'' அடுத்த ஸ்டாப்பிங் ஸ்டேஷன் இல்லை, அடுத்த ஊர் என்றதும் 8 அணா வென்றான். நானும் அந்தக் குளிர்ந்த காற்றும், காலிப்பஸ்ஸூம், விடியற்கால மகோற்சவமும், செய்த சூழ்ச்சியால் தூண்டப்பட்டு அமர்ந்தேன். நடு நடுவே கண் அயர்வேன். கனுக் காண்கின்றேனா, என்ன!

III

எங்கேயோ போகின்றேன். தமிழ் வேந்தரின் பெருமையும் தமிழ்வளர்த்த புலவரின் அருமையும் என் கனவில் உருவும் உயிரும் கொண்டு நடமாடின. மக்கள் செய்த மாறுபாட்டால் உடன் சந்நியாசம் பூண்டு வடக்கிருந்த கோப் பெருஞ் சோழனும் அவன் உயிரனைய நட்பாளராம் புலவர் திலகங்களான ஆந்தையாரும் பொத்தியாரும் என் கண்முன் தோன்றுவாராயினர். ஆஹா, லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் ஒருங்கே கடாக்ஷிக்கப்பெற்ற சோழர் பிரானின் கோலத்தை முன்பின் அறியாத புலவர் மாட்டு என்ன அன்பு, ஒருவர் உடல் நீங்கின் உடனே மற்றொருவர் உடல் நீத்தல் "உன தூர் சென்று ஒரு மகவு பெற்றபின் என்னுடன் வந்து சேர்" என்று அரசைத் துறந்த வேந்தன் சொல்லை சிரமேற் கொண்டு அவ்வாறே சென்று மறுமுறை வந்தடைந்த புலவனின் மனத்திட்பம் என்னே! பணிவென்னே! விக்கிரமன், குலோத்துங்கன், ராச ராச சோழன், மூவருலா, ஒட்டக்கூத்தன், பவனி, ஏழு பருவப் பெண்கள், பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்—இவர்கள் பாட்டுடைத் தலைமகனைப் பவனி வரும் போது கண்ட காட்சி, அவர்களின் உள்ளத்தெழும் காதற் கூற்றுக்கள், ஓவியங்கள், வெண்ணிலா முற்றங்கள், வீரமணிகள் ஒலிக்கும் களிற்றின் வைபவம், இன்னிசைகள், நகரப் பெருமக்கள், இசைக்கருவிகளின் இனிய கானம், தமிழ் புலவர்களின் விசித்திரக் கவிதை, அவர்களைப் பாராட்டும் பழந்தமிழ் மன்னரின் பரந்த நட்பு, வாஞ்சை, எண்ணிலடங்கா இவையனைய பல— உருவம், நாதம், ஒளி—எல்லாம் என் கண்முன் உயிர் கொண்டு உலவுவவாயின. இளந்தென்றல் போலும் குளிர்ந்த காற்று அவ்வதிகாலையில் மோட்டார் பஸ் போகும் வேகத்தில் இனிமையாய் வீசி அக்கனவினின்றும் என்னை விழிப்பு மூட்டிற்று. என்முன் இரண்டு பக்கங்களிலும் முன்பின் நெருங்க உட்கார்ந்து கொண்டிருந்த ஐந்தாறு கோமுட்டிகள் கூட்டமாய் ஒரு கலியாணத்திலிருந்து திரும்பிப் போகிறவர்களின் குழந்தை ஒன்று திடீரென்று வாந்தியெடுத்தது. அமிதமாய்ப் போசனமுண்டு அதிகாலையில் இட்டிலியும் வெகுவாகத் தின்றதும் போதாமல் பை நிறைய பக்ஷணங்களும் வைத்துக்கொண்டிருந்தது. அத்துடன் என் கனவும் கலைந்தது. அணைக்கரையைத் தாண்டி மோட்டாரும் கோவிலருகில் வந்தது.

பஸ்காரன் "நீங்கள் திரும்பி வருவதானால், அடுத்த வண்டிக்கு டிக்கட் இப்பொழுதே வாங்கிக் கொள்ளுங்கள்" என்றான்.

VII

நிச்சப்தமான ஊர். ஒரு புறம் இரண்டொரு கடைகள். மற்றொரு புறம் கூரை வீடுகள். இதற்குப் பின் புறம் இடிந்த மதிலும் கோவிலும். மதில்மீதிலெல்லாம் செடியும் கொடியும் கல்லும் முள்ளும் புதரும். உட்சென்றவுடன் இருள் சூழ்ந்த மண்டபம். அதற்குள் கர்ப்பக்கிருஹம் இருமடங்கு இருள். எவனோ ஒருவன் காவலாளன், அவனை வேண்டியதின் பலனாக இன்னொருவன் ஒரு எண்ணெய் வர்த்தியைக் கொளுத்தினான். எனக்கு இந்த இருட்டறையில் பாம்பு தேள்களுடன் பல காலம் வசிக்கும் வாகன விக்கிரகாதிகளைப் பார்க்க ஒருபுறம் ஆவல், ஒருபுறம் பயம். 'எலக்டிரிக் டார்ச்' மின்சார விளக்கை கொண்டு வர மறந்து போனது ஒரு பிசகு. ஆனால் என்னுடன் எண்ணெய் விளக்கை காட்டிக்கொண்டு வந்தவன், "அரையணா கொடுங்கள் இட்டிலி சாப்பிட்டு வருகிறேன்" என்று அரித்துக்கொண்டு வந்தான். அவனுக்கு அந்த கோவிலில் முக்கியமாகத் தோன்றியது அந்த ஊரில் உள்ள மேளகாரர்களின் வீடு, அவர்கள் குடும்ப யோகக்ஷேமங்கள், மானியக்காரர்களின் வேலைகள், யோக்கியதைகள். மெய்க்காவல் என்றொருவன், அவன் இரண்டு எருதுகளுடன் உழப்போய் விட்டான். தன் பத்து வயதுப் பையனை தனக்காக அக் கோவில் தெய்வங்களுக்கு மெய்க்காவல் செய்ய அனுப்பி விட்டான். அப்படியே வாத்தியம் வாசிப்பவனும். இதற்குள் பெருந்திரளாக மாடுகளை மேய்க்க சில பையன்கள் உட்பிரவேசித்தனர். ஒன்றை ஒரு மரத்தில் கட்டினான். ஒரு மிராசுதாரர் தன் உல்லாச ஸ்திரீயுடன் தன் இரட்டை மாட்டு வண்டியினின்றும் இறங்கினார்.

அவர் கோவிலின் சிற்பத்தையும் சிறப்பையும் நோக்கவந்தவரில்லை. ஏகாந்தமாக சல்லாபம் செய்ய இந்த இடம் தவிர வேறொன்றுமில்லை; சிற்றுண்டி போசனம் செய்து கொண்டு போக வும் மாடுகளுக்கு சிறிது ஓய்வு கொடுக்கவும் வந்தவர்.

இவர்கள் ஏகாந்தத்திற்கு நான் இடையூ றாக இராமல், கோவிலுட்புறத்தினின்றும் ஒதுங்கினேன். மதிற்புற மெங்கணும் அபூர்வ சித்திரக்கலையும் சிற்பக்கலையும் அந்த அழிந்த நிலையிலும் அழகு ததும்பி அலங்கரித்தன.

இவ்வாறே தாராசுரத்திலும் மதில் வெளிப் புறத்தில் சிற்பங்கள் விளங்குகின்றன. என்ன அற்புதம்! உயிருள்ள கலையின் உச்சியைத் தமிழர் அடைந்த போழ்து உற்பத்தியான தோற்றங்கள். சண்டிக்கு மகுடம் சூட்டும் சிலை; அர்த்தநாரி, பிக்ஷாடனர், சங்கர நாரா யணர், மகாவிஷ்ணுவின் இரண்டு தேவிகள், நடராஜமூர்த்தி—இவைகளின் பொலிவை என் னென்று உரைப்பது! கொடிகள் படர்ந்தும், சுண்ணும்பும் செம்மண்ணும் தீட்டப் பெற் றும், உப்பு மழை காற்று மானிடக் குறும்பு—இவைகளால் மலின மடைந் தும், அழியாத அழகு ஒன்றையே ஆற்றிக் கொண்டிருந்தன இந்த சிற்பங்கள். தாஷ்டிக மானவைகள், கம்பீரத் தோற்றமுடையவை கள், புருஷாகிருதியுள்ளவைகள். பத்தினி சகிதமோ, சக்தி சகிதமோ காணப்படும் சிலை களில் ஒரு அபூர்வ கற்பனை. பக்கத்தில் வீரா சனத்தில் உட்கார்ந்திருக்கும் பிம்பத்திற்கு அருகில் இருக்கும் சக்தி ஒடுங்கியும் தலை யைக் குனிந்தும் சம ஆசனத்தில் ஒரு புறம் ஓரத்தில் உடலைக்குறுக்கியும், பரம லஜ்ஜை யுடனும், உள்ளது அச்சம், மடம், கற்பு இவை களைக் கண்கூடாக மெய் சிலிர்க்கும்படி அக்கல் சிலையின் ஒவ்வொரு அங்கமும் தோற்று விக்கின்றது. ஒவ்வொரு சிற்ப சிருஷ்டியின் இருபுறமும் தேவர்கள், ரிஷிகள் இவர்களின் கூட்டம். எண்ணிலடங்காமல் என் மனத் திடை யெழுந்தன சிந்தனைகள்.

இஃதென்ன கைங்கரியம்! எந்தச் சிற்பி இந்த அழகுத் தொண்டை அலக்ஷியமாகப் புரிந்து மறைந்தனன்! இவைகளைத் தினந் தோறும் அந்த நாட்களில் கண்டு ஆனந்தித் தும் வழிபட்டும் வந்த மக்களின் சந்ததியா ரோ இவர்? பத்து நூற்றாண்டில் புலியின் சந் ததி பூனையாயிற்றே? அந்த கோபுரச்சிலையின் உருவேபோன்று தோன்றினாள் ஒரு படை யாச்சிப் பெண் அந்த சமயத்தில். சிம்மக் கிணற்றினின்றும் தண்ணீர் கொண்டு போக வந்தவள். பரந்த கண்கள், நெருங்கிய தனம், வள்ளைக்காது, எள்ளுப்பூ போன்ற நாசி, கறு த்த மேனி, சிறுத்த இடை, மயில்போலும் சாயை, முகில்போலும் கொண்டை, இளம் பிடியின் துதிக்கையன்ன தொடை என்றெல் லாம் புலவர்கள் மொழியும் வர்ணனைகளைப் பழித்த நான் "ஏதேது இம் மங்கை தான் இந்த சிற்பத்திற்கு இலக்கணம் தந்த உயிர் சிற்பம்" என்று நிச்சயித்தேன். பெருங் குடத்தில் நீர் கொண்டு அவள் செல்லும் காட்சி அந்தப் பாழுங் கோயிலில் எனக்கு திடுக்கென்று மனோவிகாரத்தை உண்டு பண் ணிற்று. ஏழுபிராகாரத்தில் ஏழு காளிகள் அந்த ஊரைக் காத்ததாக ஒரு ஐதிகம். 'அந்த அழகுத்தெய்வமே இவ்வுருக் கொண்டு அந்த மதிலினின்றும் இறங்கியதோ' என்று வியப் புற்றேன்.

"அங்கே உட்கார்ந்திருப்பது என் அக் காள்; பெரிய மிராசுதார் நுங்கோ அவர்; இங்கே அடிக்கடி வருவார் என் அக்காளைப் பார்ப்பதற்கு" என்று எனக்கு அந்த இரட்டை மாட்டு வண்டிக்காரப் பிரபுவைச் சுட்டி காட் டினாள். இதற்குள் திரும்பிவரும் பஸ்காரன் எனக்காகவிடாமல் சப்தம் செய்வதைக் காதில் கேட்டதும் நான் திகைப்புடனும் வியப்புட னும், அந்த சிறுக்கி சொன்னதற்கு யாதொரு விடையும் சொல்லாமல் நின்றேன். "நான் போய் வருகிறேன்" என்றாள். நானும் புறப் பட்டேன். இதற்குள் மாட்டு வண்டிக்காரப் பிரபு ஒரு கிராமபோனை வைத்தார். அதனின் றும் மகா அமங்களமாக "பண்டித மோதிலால் நேரு பறி கொடுத்தோமே!" என்ற பாட்டு அந்த பாழடைந்த கோவிலின் மண்டபத்தில் புலம்பிற்று. அச் சிறுக்கியின் தமக்கை அற்புத வனப்பு வாய்ந்தவள்; வாய் நிறைய வெற்றிலை; நல்ல கட்டுடைய சரீ

ரம். ஏதோ, அந்தப் பிரபுவுடன் அந்தரங்கமாக அளவளாவிக்கொண்டிருந்தாள். இசைத் தட்டு முடிவதற்குமுன் மறுபடியும் அதையே பாட்டை வைத்தனன். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

நானும் எதையோ பறி கொடுத்தேன் போலும். கடைசியாக மற்றொரு முறை அந்த சிற்பச் சுவரைப் பார்த்துக் கொண்டே போனேன். பாட்டையும் காதால் கேட்டுக் கொண்டே கோவில் வாயிலருகிற் சென்றேன். பஸ்காரன் சப்தம் கர்ணகடூரமாகக் காதைப் பிளந்தது.

"சாமீ! மாடு முட்ட வருது, ஒதுங்கிக் கொள்ளுங்கோ" என்று அந்த உல்லாஸ ஸ்திரீயின் தங்கை குடத்தை வைத்துவிட்டு ஓடி வந்தாள். நல்ல வேளையாக மாடு என்னை முட்ட முடியவில்லை; கயிறு கட்டியிருந்தது. நானும் தப்பித்தேன் என்று, வேகமாகத் திரும்பி மோட்டார் பஸ்ஸில் ஏறினேன்.

மூன்றும் முறையும் அதே "மோதிலால்" பாட்டை வைத்தான். அந்த மெட்டானது என் காதில் ஒட்டிக்கொண்டே வந்தது. பின்னர் அது சோழன் கோவில் பக்கமே என்னை இழுத்துச் சென்றது. என்னையறியாமல் என் மனதிலும் ஒரு பதைபதைப்பு உதித்தது. அது ஒரு பாட்டாகக் கிளம்பிற்று.

("பண்டித மோதி லால் நேரைப் பறி கொடுத்தோமே" என்ற மெட்டு.)

கண்ணிகள்.

1. கங்கை கொண்ட சோழன் கோவில் இடிசுவராச்சே!
இடிசுவராச்சே—அதன்—முடி பறி போச்சே! (கங்)

2. அந்தமுள்ள சில்பமெல்லாம்—அழிந்துபாழாச்சே!
அழிந்துபாழாச்சே—ஆல—ரசம் வேறாச்சே! (கங்)

3. கங்கா! உன் சில்பக் கல்லை—அணைக்குக் கட்டினரோ!
அணைக்குக் கட்டினரோ—அன்றேல் மனைக்கு விற்றனரோ! (கங்)

4. ஏழுகாளி காவல் பூண்ட—மதிற்புறத்திலின்று
கழுதை கத்துதையோ—யதை—உழுதும் வித்தினரே! (கங்)

தொகையறா.

ஆவுடையா ரழகுபெற யுடுத் தணி யாய்வேண்டுமே யாடை
யிலே முழத்தி லொருநூறு—அவ்வேளை

வாலுடைய எச்சமதை யெடுத்தேறிய வேண்டுமே யிணை
யெருது பண்டியிலே யினமீராறு!—ஆயிரம்

நாவுடைய சேடனுமே நவிலொணுப் பொற்புடைய வற்புதக்
கோபுரமுங் கொண்டதே மண்கூறு—இங்கார்

ஈவுடைய மன்னரோடு மாந்தருமே யிரங்கியுனக் கிடுவதற்கே—
இனி நெற் சோறு?

எனவே

5. கங்கை கொண்ட தமிழன் பாவில்—உளம் பறிபோச்சே!
உளம் பறிபோச்சே—பல—கலை வறிதாச்சே! (கங்)

ஸாகரிகா

(கே. என். கணேஷ்)

மஹாராஜா தனிமையாகத் தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். ஆனால் அவர் முகத்தைப் பார்த்தால், அவர் அங்கு யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆமாம்! அந்த தடுக்குக் காரணனை விதூஷகனை ஒரு காரியத்தில் அனுப்பினால் சீக்கிரம் திரும்பி வருவானா?

அப்பொழுது வஸந்தகாலம். நந்தவனத்தில் உள்ள புஷ்பச் செடிகள் அனைத்தும் 'கொல்' லென புஷ்பித்திருக்கின்றன. அப்புஷ்பங்களுடன் அபரிமிதமான கந்தத்தை பரப்புவதற்காகத் தானோ தென்றல் நன்றாய் வீசிக்கொண்டிருந்தது! வண்டுகளும் ஓரே மாதிரி ரீங்காரஞ் செய்து கொண்டே அங்குள்ள புஷ்பங்களிலிருந்து மதுவைப் பருகிக் கொண்டிருந்தன.

நந்தவனத்திலிருந்து விதூஷகன் வெகு குதூகலமாக ஓடிவந்தான். "உங்களுடைய பாக்கியமே பாக்கியம்! உங்களைப்போன்ற அதிருஷ்டசாலி இந்தப் பூவுலகில் இல்லை யென்றே சொல்லலாம்............" என்று கூறிக் கொண்டே மஹாராஜாவின் அருகில் வந்து நமஸ்காரம் செய்தான்.

சோர்வடைந்த மஹாராஜாவின் முகத்தில் ஒரு வித சோபை பிரதிபலித்தது. "என்ன! ஸாகரிகைக்கு உடம்பு ஸௌக்கியம் தானே?" என்றார் கம்பீரமாக.

"..............இது மட்டும். நிச்சயம்! உங்கள் காரியம் ஜெயம்" என்று குதித்தான், விதூஷகன், அவர் கேட்டதற்குப் பதில் சொல்லாமல்.

"நான் ஸாகரிகையைப் பார்க்க முடியுமா? நிச்சயமாகவா?" என்றார் ஆவலுடன்.

"ஆம்!"

"வழக்கம் போல் விளையாடாதே, 'விதூஷகா" என்றார் கொஞ்சம் தாழ்ந்த குரலில்.

நெடு நாளாக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு சந்திப்பு அது. உள்ளூர மஹாராஜாவிற்குச் சந்தோஷம் தான். ஆனாலும், விதூஷகன் வார்த்தைகளில் அவருக்குப் பூரண நம்பிக்கை இல்லை!

விதூஷகன் மஹாராஜாவின் காதில் ஏதோ முணுமுணுத்தான். இருவர் முகத்திலும் ஒரு வித புன்சிரிப்பு. பிறகு ஏதோ ஒரு முடிவிற்கு வந்தவர்கள் போல் உள்ளே சென்றனர்.

2

'மதனிகா! நான் காஞ்சனமாலையை மஹாராஜாவின் உடம்பு நிலையை அறிந்துவர அனுப்பினேன். வெகு நேரம் ஆகியும் இன்னும் வர வில்லை. நீ போய் அவளைச் சற்று அழைத்து வா" என்று உத்தர விட்டாள் மஹாராணி வாஸவதத்தை.

மதனிகையும் அவ்வாறே சென்றாள். கொஞ்ச நேரத்திலேயே காஞ்சனமாலையுடன் திரும்பினாள்.

"ஒரு முக்கியமான விஷயம் தெரிந்து விட்டது மஹாராணி. அது நம்............" என்று ஆரம்பித்தாள் காஞ்சனமாலை.

"மஹாராஜாவைப் பற்றியா?"

"ஆம்!"

"மஹாராஜாவைப் பற்றி அவ்வளவு முக்கியமானது என்ன?" என்று ஆவலுடன் கேட்டாள் மஹாராணி.

"நான் மஹாராஜாவைப் பார்த்து வரச் சென்றேன், தங்கள் உத்தரவுப்படி. செல்லும் பொழுது சித்திரசாலையில் ஸு—ஸங்கதை, விதூஷகன், ஸாகரிகை மூன்று பேருமாக ஏதோ ரகசியம் பேசிக் கொண்டிருந்தனர்—மஹாராஜா ஸாகரிகையை நினைத்தே தானும் வருந்துகிறார். ஸாகரிகை தங்கள் போலவும்,

(இதன் தொடர்ச்சி 494 பக்கம் காண்க)

'ரத்னாவளி'யிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பாகத்தை தழுவி எழுதியது.

மானவீ.

K. வரதாச்சாரி, B.A., B.L.,

(418-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 5. காட்சி 1.

உதயபுர ராஜமாளிகை; மானவீயும் அரசனும்.

அரசன் :—ஓர் அற்புதத்தைக் கண்டேன்.

மானஸீ :—யுத்தத்திலா?

அர :—அது யுத்தமே அல்ல; யுத்தகளத்தில் ஓர் நெருப்பு மழை பெய்தது, அவ்வளவுதான். அதில் நம் ஸேனை எரிந்துபோய் விட்டது.

மானஸீ :—அது எப்படி? புரியவில்லையே!

அர :—எனக்கும் புரியவில்லை. இவ்வுலகில் நடக்கும் ஸம்பவமாகவே தோன்றவில்லை. ஏதோ ஓர் அக்னி வ்ருஷ்டி, ஓர் பயங்கர அபிசாபத்தின் பிரவாஹம் அது. ஓர் க்ஷணம் கண்களை மூடிக்கொண்டேன். என் சரீரத்தை ஊடுருவிக்கொண்டு, என் ஹ்ருதயத்தைக் கலக்கிவிட்டு, ஓர் மின்னல் வெளிச்சென்றது. தலை சுழன்றது; ஒன்றும் தெரியவில்லை; கண்களைத் திறந்துகொண்டேன். தூங்கி விழித்துக் கொண்டதுபோலே தோன்றியது. யுத்தகளத்தில் நான் மட்டில் மீதி. வேறு ஒருவரும் கண்ணிற்குப் படவில்லை. சுற்றிலும் பிணக்குவியல்கள்! அப்பா! என்ன காட்சி!

மானஸீ :—சற்று உட்கார்ந்து கொள்ளுங்கள்; நான் விசிறுகிறேன்.

அர :—நான் ஒருவன்தான் அந்த ச்மசானத்தில் சுற்றிச் சுற்றி வந்தேன். ஒருவரும் யுத்தம் செய்ய வரவில்லை.

மானஸீ :—ஆனால் யுத்தத்தில் நீங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டீர்களா?

அர :—ஒப்புக்கொள்வதாலோ ஒப்புக்கொள்ளாததாலோ ஆவது என்ன? தர்க்க விஷயமா இது? யுத்தமல்லவா? ஸ்தூலமான, கடினமான, பிரத்தியக்ஷமான ஸத்தியமல்லவா? எவ்வளவு பிரத்தியக்ஷமான ஸத்தியம்! ஆமாம், ஏன் அவர்கள் என்னைக் கொல்லவில்லை? ஏன்? "மஹாபத்கான், மஹாபத்கான்" என்று கத்தினேன். "கஜஸிம்ஹா, கஜஸிம்ஹா" என்று அழைத்தேன். ஒருவரும் அருகிலேகூட வரவில்லை. ஏன் வரவில்லை? மானஸீ, ஏன் வரவில்லை, உனக்குத் தெரியுமோ? சொல், ஏன்?

மானஸீ :—இப்படியும் கலங்கலாமா? சற்று உட்காருங்கள்.

அர :—இன்னும் ஓர் விஷயம் புரியவில்லை. மஹாபத்கான் தான் யுத்தத்தில் ஜயித்துவிட்டானே! ஜயகோஷத்துடன், கர்வத்துடன் இந்த நகரத்திற்குள் நுழைந்து கோட்டையைப் பிடித்துக்கொள்ள வேண்டாமோ?

மானஸீ :—ஏன் இந்த ஏக்கம்? யுத்தம் என்றால் ஏதோ ஓர் கக்ஷி தோற்கத் தான் வேண்டும். போனது போகட்டும்; சற்று நிதானித்துக்கொள்ளுங்கள்.

அர :—வாஸ்தவம்; தோற்கத் தான் வேண்டும். துக்கம் ஏன்? ஆம், ஏன் துக்கப்பட வேண்டும்? ஆமாம், அவர்கள் என்னைமட்டில் ஏன் கொல்லவில்லை? (ராணி வருகிறாள்.)

அர :—நீதான் சொல்லு; ஓர் சிக்கலான விஷயம். நீதான் சொல்லவேண்டும்.

ராணி :—அது என்ன அப்படி?

அர :—அவர்கள் ஏன் என்னைக் கொல்லவில்லை? (ராணி மானஸீயின் முகத்தை பரிதாபமாகப் பார்க்கிறாள்.)

அர :—அந்த கம்பீரமான நிசியில், பயங்கர யுத்த க்ஷேத்திரத்தில், பிணக்குவியல்களின் நடுவில், நான் மட்டிலேதான் தனியாக நின்றேன். ஆகாயம் முற்றிலும் எண்ணற்ற நக்ஷத்திரங்கள்! கீழே தரை முழுவதும் கணக்கற்ற பிணங்கள்! இரண்டுக்கும் நடுவில் கோரமான அந்தகாரமும். வேறு ஒன்றுமே இல்லை. நானும் இறந்துவிட்டேன். இவ்வுலகிற்கும் எனக்கும் ஓர் ஸம்பந்தமும் இருப்பதாகத் தோன்றவில்லை. உருவிய கத்தியால் வெட்டினேன்—எதை?

அந்தக் குளிர்ந்த காற்றை! 'மஹாபத்' என்று அறை கூவினேன், அழைத்தேன். அந்தக் குரல் வீணில் நான்கு பக்கங்களிலும் தேடிச் சென்று திரும்பி என்னிடமே வந்துவிட்டது. அப்புறம்—(அரசனுக்குத் தொண்டை அடைத்துக்கொள்கிறது.) அப்புறம் சுற்றிப் பார்த்தேன். என் ராஜ்யம், என் ஸேனை, என் அழகிய மேவார், ஓர் பூகம்பத்தில் நஷ்டப்ரஷ்டமாய் சிதறுண்டு, உயிரற்றுக் கிடந்தது. (ஒடிந்த குரலில்) அந்த ச்மசானத்தின் திறந்தவெளிக் காற்று, அந்த பிணங்களின் ஆத்மாக்களுடைய பாரத்தினால் கனத்து, மேல் செல்லமுடியாமல் ஸ்தப்தமாய் நின்றுவிட்டது. மிகவும் பிரயாசைப்பட்டு ஓர் மூச்சு விட்டேன். அது உயரப்போகவில்லை. இந்த கனத்தினால் எங்கேயோ கீழேயே விழுந்து கிடக்கிறது. தேடிப் பார்த்தால் அகப்பட்டுவிடும். தேடலாமா?

ராணி :—ஆனது ஆகிவிட்டது. ஏன் வீணாக வருந்தவேண்டும்? நான் அப்பொழுதே சொல்லவில்லையா?

அர :—ஆம், ஸரியாகத்தான் சொல்லிவிட்டாய். மேவார் இறக்கிறது; நான் பார்த்துக்கொண்டே நிற்கிறேன்! அந்தப் பிணத்தை என் தோளில் சுமந்து இங்கு எடுத்து வருகிறேன், பார்க்கிறாயா? (போகிறார்.)

காட்சி 2.

மேவார் மாளிகை; அந்தப்புரம்; இரண்டு தாஸிகள்.

முதல் தாஸீ :—ஐயோ பாவம்! கோவிந்த ஸிம்ஹருடைய துயரத்துக்கு எல்லையே இல்லை. ஒரே பிள்ளை, பாவம்!

2-வது தாஸீ :—ஆமாம், இந்தச் சாரணி ராணி, பிணத்தை ஏன் வீட்டிற்குள் எடுத்துக் கொண்டுவந்து போடவேண்டும்?

முதல் :—அவர்கள் காரியங்கள் எல்லாம் அப்படித்தானே! கோணல் தானே, வேறு என்ன வேலை! ரொம்ப கூட்டமோ?

2-வது :—வீடு கொள்ளவில்லை. கோவிந்த ஸிம்ஹர், வெளியில் போனவர், வரவில்லை இன்னும். ஒரு விளக்கு மினு மினு என்று எரிந்துகொண்டிருந்தது.

முதல் :—அதோ, அது யார்?

2-வது :—அதுவா? அதுதான், நமது ராஜ குமாரிதான்.

முதல்:—ஐயோ ஏன் இப்படி? விழி மேலே சென்றுவிட்டது; புடவைத் தலைப்பு அவிழ்ந்து கீழே புரளுகிறது.

2-வது :—இந்தப் பக்கமாகவேதான் வருகிறார்கள். நாம் போய் விடுவோம். (போய் விடுகிறார்கள்; மானஸீ வருகிறாள்.)

மானஸீ :—போய்விட்டார்! போயேவிட்டார். என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமலேயே போய்விட்டார். நியாயமா இது? பாவி நான், கல்நெஞ்சுக்காரி. வாயை விட்டுச் சொன்னேனா? அன்பாக ஓர் வார்த்தை என்னிடமிருந்து பெற என்ன பாடுபட்டார்; நான் அதை அவருக்குச் சொன்னேனா? அதனாலேதான் கோபித்துக்கொண்டு போய் விட்டார். என் கர்வத்தை பொடிப் பொடியாகச் செய்துவிட்டு, என்னை காலில் இட்டு மிதித்துவிட்டுச் சென்றுவிட்டார். ஐயோ! என் ஹ்ருதயத்தை திறந்து பாருமே! உம்முடைய தாஸியல்லவா? உமது சரணகமலங்களில் விழுந்து புரளும் உமது பத்தினியல்லவா? இனி என்ன செய்வேன்? உம்மிடம் வாஸ்தவத்தை எப்படி அறிவிப்பேன்? ஐயோ! தலை சுற்றுகிறது; தேகத்திலிருந்து ஓர் ஜ்வாலை வெளி வீசுகிறது; கால்களுக்கு அடியிலிருந்து பூமி நழுவுகிறது; ஆகாயமும் விலகுகிறது; கண்களும் இருட்டிவிட்டதே!

காட்சி 3.

கோவிந்தஸிம்ஹரின் வீட்டு அங்கணம்; இரவு; காற்று அடித்துக்கொண்டிருக்கிறது; அஜயஸிம்ஹரின் பிணம் கிடக்கிறது; தூக்குவதற்கு நான்கு பேர்களும் ஸத்தியவதியும் நிற்கின்றனர்; கோவிந்த ஸிம்ஹர் பிணத்தை உற்றுப்பார்த்துக்கொண்டே இருக்கிறார்.

கோவிந்தஸிம்ஹா :—என் அஜயன்! ஸத்தியவதி! உனக்கு இது எங்கே அகப்பட்டது?

ஸத்யவதி:—ரஸ்தாவிற்கு அருகில். அங்கு இருந்தவர்களை விசாரித்தேன். மஹாபத்கானுடைய ஸிபாய்கள் கிராமவாஸிகளைக் கொன்

றுகொண்டிருந்தார்களாம். அதைத் தடுக்க இவர் அவர்களுடன் போர் புரிந்தாராம். கொல்லப்பட்டாராம், துப்பாக்கி குண்டினால். கல்யாணியை அவர்கள் பிடித்துக்கொண்டு போய்விட்டார்களாம்.

கோ :—அஜயா! அஜயா! கோபவெறியில் ஏதோ சொன்னேன் என்று போய்விட்டாயே! மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும் அவகாசம் அளிக்காமலேயே போய் விட்டாய்! ஐயோ! உன்னை ஏன் கூப்பிடவில்லை நான்? ஏன் போக விட்டேன்? என் உயிரான அஜயன் என்னை விட்டு சென்றுவிட்டான். இவ்வளவு ரோஷமா? அதுவும் இந்தக் கிழவனிடமா? உன் தகப்பன் அல்லவா? அஜயா! அஜயா!

ஸத்ய :—இதற்கு வருத்தப்படலாமா? தீன ஸம்ரக்ஷணம் செய்துகொண்டு அன்றோ இறந்தார். பிறருக்குத் தன் பிராணனை அளித்தார்.

கோ :—ஆமாம், நீ சொல்வதுதான் ஸரி. எளியவர்களைக் காக்க உயிரை இழந்தான். ஸஹாயமற்றவர்களுக்கு ஸஹாயம் செய்தே இறந்தான். பின் ஏன் துக்கம்? ஸரி, எடுத்துக்கொண்டு போங்கள். தஹனகர்மாக்களை நன்றாகச் செய்யவேண்டும். எடுங்கள்.

(கோவிந்தஸிம்ஹர் பிணத்தின் முகத்தை மூடுகிறார்; தூக்குகிறவர்கள் தூக்க பிரயத்னப்படுகிறார்கள்.)

கோ :—சற்று நில்லுங்கள். இன்னும் ஓர் தடவை பார்த்துவிடுகிறேன். என் ஸர்வஸ்வமும் இவனே! கிழத்தின் பலம், குருடனின் ஊன்றுகோல், என் அருமை மைந்தன்—ஓர் தடவை—ஒரே ஓர் தடவை—வேண்டாம். துக்கம் ஏன்? நீ சொல்வதுதான் ஸரி, ஸத்தியவதி! தீன ஸம்ரக்ஷணத்தில் உயிரை இழந்தான். பின் ஏன் துக்கம்? மேவார்! ஏ, ராக்ஷஸீ! இவ்வளவு உயிர்களை வாயில் போட்டுக்கொண்டும் உன் வயிறு நிரம்பவில்லையா? நீதான் போக ஏற்பாடு செய்துகொண்டு விட்டாயே, போவதுதானே. எல்லோரையும் சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேண்டுமோ? என் தங்கத்தை இழந்தேன். எல்லாம் மண்ணாகப் போய்விட்டது. ஸர்வநாசம்! என் அஜயன் இறந்துவிட்டானா? யார் சொன்னது? இல்லையே. அவன் இறக்கவில்லை. அதோ, என்னைப் பார்க்கிறானே! என்னையே பார்க்கிறான்! (அஜயா! அஜயா! என்று கத்திக்கொண்டு அருகில் ஓடுகிறார்; ஸத்தியவதி குறுக்கிடுகிறாள்.)

ஸத்ய :—சோகாவேசத்தில் சித்த ஸ்வாதீனத்தை இழந்துவிட வேண்டாம். தங்கள் புதல்வர் இவ்வுலகைவிட்டுச் சென்றுவிட்டார், வீரஸ்வர்க்கத்திற்கு.

கோ :—சென்றுவிட்டானா? சென்றுவிட்டான்? ஆம், என் பிள்ளை இல்லை. அஜயா! அஜயா! என் ஸர்வஸ்வமாயிற்றே! ஐயோ! (முகத்தை மூடிக்கொண்டு அழுகிறார்.)

ஸத்ய :—வீரர் அன்றோ தாங்கள்? புத்திர சோகத்தால் இப்படி தாங்களும் கலங்குவதா? தாங்களே தைரியத்தை இழந்துவிட்டால், வேறு யார் என்ன செய்யமுடியும்?

கோ :—என்ன சொல்லுகிறாய்? சற்று உரக்கச் சொல். காது கேட்கவில்லை. எனக்குள் ஓர் பயங்கரப் புயல் அடித்துக்கொண்டிருக்கிறது. ஒன்றும் கேட்காது. ஓ...ஹோ ....ஹோ............(தன் மார்பைப் பிடித்துக் கொள்கிறார்; கல்யாணி வருகிறாள்.)

கல்யாணி :—அப்பா, அப்பா?

கோ :—யார் கூப்பிடுகிறது? யாரது? கல்யாணியா? ஸர்வநாசினீ! பார், உன் வேலையை. ராக்ஷஸீ! என் அஜயனை வாயில் போட்டுக் கொண்டுவிட்டாயே. கொண்டு வா, திருப்பிக் கொடு, இப்பொழுது.

கல்.—ஐயோ! அண்ணா, அண்ணா! (பிணத்தின்மேல் விழுகிறாள்.)

கோ :—சீ, தூரப்போ. என் அஜயனைத் தொடாதே. பிசாசே, போ. (கல்யாணியை கையைப் பிடித்து இழுத்துத் தள்ளுகிறார்.)

கல் :—(எழுந்து) அப்பா! வாஸ்தவமாகவே நான் பிசாசுதான், ராக்ஷஸீதான். என்னைக் கொன்று விடுங்கள், கொல்லுங்கள். இந்த ஸர்வநாசினியை இவ்வுலகைவிட்டுத் துரத்தி விடுங்கள். பிறகு உங்களுக்கு எல்லாம்

கிடைக்கும், எல்லாம் கைகூடும். கல்யாணி யாம் கல்யாணி—யார் எனக்கு இந்தப் பெயர் இட்டார்கள்? நான் உங்கள் வீட்டின் அமங்க ளம்; மேவாரின் தூமகேது; உலகிற்கே ஸர்வ நாசம் செய்யத் தோன்றிய அக்னி சிகை. என் னைக் கொன்றுவிடுங்கள். இதோ கொல்லுங் கள். (கோவிந்தஸிம்ஹருக்கு எதிரில் தலை யைக் குனிந்துகொண்டு உட்காருகிறாள்.)

கோ :—(சிறிது நேரம் சென்று) என்ன வோ என் ஹ்ருதயத்தில் நடந்துகொண்டிருக் கிறதே! என்ன இது? நரகத்தின் வேதனையா? பிசாசுகளின் நிருத்தியமா என்ன? இனி ஸஹி க்கமுடியாது. ஹே ஜகதீசா! ஸஹிக்கமுடிய வில்லையே!

ஸத்ய :—கோவிந்தஸிம்ஹரே! இப்படி தாங்களே அதைரியப்படலாமா? வீரபுத்திரன் இவர். இவருடைய தஹனகர்மாக்களை கௌர வமாக நடத்தவேண்டாமா? தீனஸம்ரக்ஷணம் செய்து இறந்தவரல்லவா?

கோ :—வாஸ்தவம்தான்; நீ சொல்வது வாஸ்தவம். என் புத்திரன் தீனஸம்ரக்ஷணம் செய்து இறந்தான். ஏன் துக்கப்படவேண் டும்? இது கௌரவிக்கத்தக்க விஷயமன்றோ? துக்கமா கொண்டாடுவது? இருந்தாலும்....... (அழுகிறார்.) ஸத்தியவதி! நான் கிழம்! தொண்டுகிழமாய் விட்டேனே!

கல் :—அப்பா!

கோ :—(குரல் நடுங்க) வாடி, அம்மா! என் கல்யாணி! வா, என் மடியில் வா; பாவம், வீட்டை விட்டுத் துரத்தப்பட்டாய், பர்த்தா வினால் திரஸ்கரிக்கப்பட்டாய், தாயை இழந் தாய், துர்ப்பாக்கியவதி நீ. பாவம், வா. உத் தம பதிவிரதையை அவமதித்தேனல்லவா? அதனால்தான் பகவான் எனக்கு இந்த தண் டனையை அளித்தார். ஸரி, நீங்கள் போங்கள்; கிரமப்படி தஹன கர்மாக்களை செய்து முடி யுங்கள்.

(தூக்குகிறார்கள்; அதற்குள் அவஸரமாக அலங் கோலமாய் ராஜகுமாரி மானஸீ ஓடி வருகிறாள்.)

மான :—சற்று பொறுங்கள். நானும் பார்க் கிறேன்.

ஸத் :—யார்? ராஜகுமாரியா?

மான :—அஜயஸிம்ஹரே, பிரியதமரே, என் ஜீவன ஸர்வஸ்வம்! என் ஸ்வாமி!

ஸத்ய :—என்ன சொல்கிறாய்? உன் ஸ்வா மியா?

மான :—ஆம், எல்லோரும் கேளுங்கள். ஒருவருக்கும் சொல்லாமல் மறைத்து வைத் திருந்தேன். இன்று சொல்கிறேன். அவரை நான் மணம் செய்து கொண்டேன். ஒருவருக் கும் தெரியாமல் எனக்கே தெரியாமல் என் ஆத்மாவும் அவர் ஆத்மாவும் மணம் புரிந்து கொண்டுவிட்டன. எனக்கே தெரிவிக்காமல், ஐயோ, ப்ரியதமா, எங்கே சென்று விட்டீர்? இதோ நான் வந்து நிற்கின்றேனே! ராஜகுமா ரியாக நிற்கவில்லை, உபதேசம் செய்பவளாக நிற்கவில்லை; உம் பிரேமையை வேண்டும் பிக்ஷு ணியாக நிற்கிறேன். ஓர் அபலை, ஓர் ஸ்த்ரீ! அஜயஸிம்ஹரே, சற்று பாருமே! இது வரை யில் என் அன்பை உமக்குத் தெரிவிக்கவில்லை. இவ்வளவு அன்பு உம்மிடம் எனக்கு உண்டு என்று அப்பொழுதெல்லாம் புலப்படவில்லை. இன்று உலகம் அறிய பறை அறைகிறேன். அஜயரே, சற்று இப்படி வாருமே.

ஸத்ய :—ஐயோ, ராஜகுமாரியும் சித்தஸ்வா தீனத்தை இழந்து விட்டாரே! மானஸீ! மானஸீ! இதோ பார். தீனஸம்ரக்ஷணம் செய்து உயிரைத் துறந்தார் இவர். அதற்கு நாம் சோகம் கொள்ளலாமா?

மான :—வாஸ்தவம், பிராணனை விடுவதா னால் இப்படித்தான் விடவேண்டும். இப்படிப் பட்ட பதியை அடைந்த நானும் தன்யை! நாம் இருவரும் கர்வம் கொள்ளவேண்டிய தருணம் இது; துக்கப்படத் தருணமன்று, ஆமாம்.

கோவி :—(தொண்டை உலர்ந்து) ராஜ குமாரி! தீனஸம்ரக்ஷணம் செய்து, தேசத்திற் காக உயிரை கொடுத்தான். ஏன் இனி சோகம்? நம் அஜயன் தன் (மேலே பேச முடியாமல் தொண்டை அடைக்க, சுவரில் கையை வைத் துக் கொண்டு, கையில் தலையை வைத்துக் கொண்டு, விக்கி விக்கி அழுகிறார்.)

மான :—வியர்த்தம், வியர்த்தம், எல்லாம் வீண்! உள்ளிருந்து சோகம் பீறிக்கொண்டு மேலே கிளம்புகிறது. இந்த ஆசுவாஸ மொழிகளை உதறித்தள்ளி எறிகிறது. ஸஹிக்க முடியாது இனி, அஜயரே, அஜயஸிம்ஹரே!

கல் :—இவைகளெல்லாம் என்ன? ஒன்றுமே புரியவில்லையே, என்ன நடக்கிறது? தேவதைகளா இவர்கள்? மனுஷ்யர்கள் தானா? ஜீவனமா, மரணமா இது? நான், நான் யார்? ஓ! (மூர்ச்சித்து விழுகிறாள்.)

ஸத் :—கல்யாணி, கல்யாணி!

கோவி :—பெண்ணும் இறக்கிறாளோ? இறந்து விடட்டும்; எல்லோரும் சேர்ந்தே போய் விடுவோம். பிள்ளை, பெண், நான், மேவார்—யாவரும் ஒன்றாகவே போய் விடுவோம். பிள்ளை போய் விட்டான். பெண் போய், ஏன், போய்விட்டாள். மேவார் இதோ மூழ்கிக் கொண்டே இருக்கிறது. இன்னும் கொஞ்சம்—மூழ்கியே விட்டது! போயிற்று! ஸரி, நானும் போகிறேன். (பைத்தியம் பிடித்தவனைப்போல் ஓடுகிறார்.)

காட்சி 4.

மேவார் மலையின் ஓர் தாழ்வரையின் அருகில் மஹாபத்கானின் கூடாரம்; அஸ்தமிக்கும் ஸூர்யனைப் பார்த்துக் கொண்டு மஹாபத்கான் நிற்கிறார்.

மஹாபத்கான் :—போ, அஸ்தமித்துவிட்டது. இன்றுடன் மேவாரின்...(மஹாராஜா கஜஸிம்ஹர் வருகிறார்.)

கஜஸிம்ஹன் :—கான் ஸாஹெப்!

மஹா :—வாருங்கள், மஹாராஜ்!

கஜ :—ஜயித்துவிட்டீர்கள். முற்றிலும் ஜயம். ஆமாம், ஏன் ஸேனையுடன் உதயபுரக் கோட்டைக்குள் பிரவேசிக்கவில்லை?

மஹா:—ஏதாவது குற்ற விசாரணை செய்ய வந்திருக்கிறீர்களா?

கஜ :—இல்லை, இல்லை. கேட்டேன். அவ்வளவுதான். ஆமாம். மேவாரில் ஸ்த்ரீகளெல்லோரும் நம்மோடு யுத்தம் செய்யப் போகிறார்களாமே. ஆயுதங்களை எடுத்துக் கொண்டு விட்டனராமே.

மஹா :—ஸ்த்ரீகளா?

கஜ :—ஆம், ஸ்த்ரீகள்தான். அவர்கள் சண்டையைப் பார்க்கவேண்டும். வேடிக்கையாக இருக்குமல்லவா? வெகு தமாஷ்! நானும் வருகிறேன்.

மஹா :—நீங்கள் ராஜபுத்திரர் தாமா? ராஜபுத்திர மாதர்களையே அல்பமாக பேசும் நீர், ராஜபுத்திரனாக எப்படி இருக்க முடியும்? இல்லை, இல்லை.

கஜ :—(கோபமாக) கான் ஸாஹேப்!

மஹா :—போதுமே! உங்கள் வீரத்தனத்தை என்னிடம் காட்டிவிட வேண்டாம். நீங்களை வைத்துக் கொண்டு, உங்கள் தேசத்துக்காக உபயோகித்தாலும் ஏதாவது பிரயோஜனமுண்டு, போம்.

(கஜஸிம்ஹர் போகிறார்.)

மஹா :—இந்த மஹான்கள்தான் ஹிந்து தர்ம த்வஜத்தை தாங்குகிறவர்களாமோ? ஐயோ, ஹிந்துக்களே! உங்கள் தேசத்தைத் தான் தோற்றீர்கள். அதனுடனே உங்கள் மனுஷ்யத்தனத்தையுமா தோற்று விடவேண்டும்? (ஓர் ஸிபாய் வருகிறான்.) என்ன விசேஷம்?

ஸிபாய் :—இளவரசர் ஓர் புதிய ஸைன்யத்துடன் வந்திருக்கிறார்.

மஹா :—வந்திருக்கிறாரா? ஸரி போ. (ஸிபாய் போகிறான்.) இனி எதற்கு ஸைன்யம்? நான் தான் மேவாரை த்வம்ஸம் செய்தாகி விட்டதே, இனி எதற்கு...ஆமாம், அதுவும் ஸரிதான்? உதய புரத்திற்குள் நான் முகலாய ஸைன்யத்துடன் பிரவேசிக்க ஸம்மதிக்கவில்லை யல்லவா? அவரே, முகலாயரே, அதைச் செய்யட்டும். இத்துடன் என் வேலை முடிந்து விட்டது.

(கோவிந்தஸிம்ஹர் வருகிறார்)

மஹா :—தாங்கள் யார்?

கோவி :—நான், மேவாரின் தர்பார்..........

மஹா :—என்ன வேண்டும்?

கோவி :—இதோ சொல்லுகிறேன். சற்று ஆசுவாஸப் படுத்திக்கொள்கிறேன்.

மஹா :—ஸமாதானத்திற்காக ராணா அமர ஸிம்ஹர் தங்களை என்னிடம் அனுப்பினாரா?

கோவி :—ஐயோ, அதற்கு முன் இடி விழாதா?

மஹா :—பின் என்ன வேண்டும்? எதற்காக இங்கு வந்தீர்கள்?

கோவி :—நான் சாகவேண்டும்; தொண்டு கிழமாகப்போய் விட்டேன், இனி சாக வேண்டியதுதான். ஆனால், யுத்தஞ் செய்து கொண்டே, யுத்தத்திலேயே தான் இறக்க வேண்டும். ஏதோ ஸாதாரண ஸிபாயின் கத்தியால் வெட்டுண்டு உயிர் துறக்க விரும்பவில்லை. உன்னுடைய கத்தியினால் இறக்க வேண்டும்; உன்னுடன் யுத்தம் புரிந்து இறக்கவேண்டும். அது தான் வேண்டும்.

மஹா :—இது என்ன பைத்தியம்!

கோவி :—பைத்தியமல்ல மஹாபத்! யுத்தம் புரிந்து உன்னைக் கொல்ல நான் விரும்புவதாக நினைத்து விட்டாயா? இல்லை, இல்லை. ஐயோ, பகவானே! அப்படி மட்டில் செய்ய முடிந்தால், அவ்வளவு சக்தி மட்டில் எனக்கு இப்பொழுது இருந்தால்...இல்லை, மஹாபத்! த்வந்த்வ யுத்தத்தில் உன்னை ஜெயிக்க என்னால் முடியாது. நிச்சயமாக நான் சாகத்தான் நேரிடும். உன் கையினால் இறக்கவேண்டும் என்று தான் உன்னைத் தேடி வந்தேன்.

மஹா :—வேடிக்கையாக இருக்கிறதே! நல்ல விருப்பம்!

கோவி :—அதில் ஆச்சர்யம் ஒன்று மில்லையே! ராணா பிரதாபஸிம்ஹருடன்கூட இருந்து, கணக்கற்ற யுத்தங்கள் புரிந்து, எண்ணற்ற காயங்களைத் தாங்கிய இந்த சரீரம் கடைசியாக உன் கத்தியினால் வெட்டுண்டு விழ வேண்டும்.

மஹா :—இதனால் தங்களுக்கு என்ன லாபம்?

கோவி —லாபமா? அன்யமதஸ்தனாயினும், நீ பிறவியில் ஹிந்து; முஸல்மானாயினும் ராணா பிரதாபஸிம்ஹரின் மருமகன் கையினால் இறப்பதில், ஓர் கௌரவம் ஏற்படும்.

மஹா :—ஆனால் தாங்கள் ஸாலும்பர் தாகூர், கோவிந்தஸிம்ஹர்!

கோவி :—ஹா, ஹா, ஹா! தெரிந்து கொண்டாயா? புரிந்ததா, இப்பொழுது, நான் ஏன் உன் கையினால் மரணத்தைக் கோருகிறேன் என்று. மஹாபத்கான், மேவாரை ஜெயித்து விட்டாய், மேவாரை த்வம்ஸம் செய்து விட்டாய்; ஆயினும் உன்னை மேவாரின் கோட்டைக்குள் உதய புரத்திற்குள் பிரவேசிக்க விடமாட்டேன். மேவாரில் ஸேனை இனி இல்லை உன்னுடன் யுத்தம் செய்ய; நான் தான் கடைசி வீரன்; நான் தான் மேவாரின் அந்திம வீரன். நான் ஒருவனே நின்று முகலாயர்களின் உதயபுரப் பிரவேசத்தை எதிர்ப்பேன், தடுப்பேன். என் பிராணனை வாங்காமல் நீ உதயபுரத்திற்குள் நுழைய முடியாது. உள்ளே விடமாட்டேன். ஆகையால் எடு, கத்தியை எடு!

(கோவிந்தஸிம்ஹர் கத்தியை உருவிக் கொண்டு நிற்கிறார்.)

மஹா :—வீரச்ரேஷ்டரே! உதயபுரத்திற்குள் பிரவேசிக்க நான் விரும்பவே இல்லையே. பிரவேசிக்கப் போவதும் இல்லை.

கோவி :—பிரவேசிப்பாயோ மாட்டாயோ? அதெல்லாம் எனக்குத் தெரியாது; நீ எடு, கத்தியை எடு.

மஹா :—இதைக் கேளுங்கள்.

கோ :—முடியாது. நான் ஒன்றும் கேட்க மாட்டேன். என்னுள் ஓர் பெரிய நெருப்பு பற்றி எரிகிறது. என் பிள்ளை போய்விட்டான்; என் பெண்ணும் போய்விட்டாள்; நான் சாக வேண்டும். என் ஸ்வதந்திர மேவார், முகலாயர்களிடம் நசுக்குண்டு, அடிமையாவதற்கு முன் நான் சாகவேண்டும். எனக்கு மாப்பிள்ளையாக வந்தும், என் பிள்ளையையே கொன்றானே அவன் கையால் நான் இறக்கவேண்டும். எங்கள் தேசத்திலேயே பிறந்தும் எங்கள் விரோதி

களுக்கு அடிமைப்பட்டு, எங்கள் தேசத்தையே நாசம் செய்கிறனே அவன் கையால் நான் மரிக்க வேண்டும். எங்கள் மதத்தில் பிறந்து எங்களுக்கே விரோதியாகி, எங்கள் அரசனுக்கே ஸஹோதரனாயினும், எங்களுக்கே சத்துருவாக கிளம்பினனே அவன் கையால் நான் உயிரை விடவேண்டும். எடு கத்தியை. எடு, மஹாபத்! எடு.

மஹா :—சற்று நிதானப்படுத்திக் கொள்ளுங்கள்; தங்களை நான் ஒருபோதும் கொல்ல மாட்டேன்.

கோ :—(கத்தியைச் சுழற்றிக்கொண்டு) அதை எல்லாம் நான் கேட்கமாட்டேன். எடுத்துக் கொள், கத்தியை; உன்னைக் காப்பாற்றிக் கொள்.

மஹா :—ஐயோ, கோவிந்தஸிம்ஹரே! இதோ.........

கோ .—என்னைக் கொல்லு, என்னைக் கொல்லு.

மஹா :—நான் கத்தியைக் கீழே வைத்து விட்டேன்.

கோ :—நான் விடமாட்டேன். எடுத்துக் கொள் கத்தியை; சாக வந்த நான் சாகாமற் போய் விடுவேனு? எடுத்துக் கொள், கத்தியை. நான் உன்னை விடமாட்டேன். (கோவிந்தஸிம்ஹர் மஹாபத்கானமீது கத்தியைச் செலுத்த கையைத் தூக்குகிறர். இதற்குள் பின்புறமாக கஜஸிம்ஹர் வந்து சுடுகிறர். கோவிந்தஸிம்ஹர் விழுகிறர்.)

மஹா :—ஐயையோ, என்ன இது? என்ன செய்துவிட்டீர்?

கஜ:—இவனைக் கொன்று விட்டேன்.

மஹா :—இவர் யார் தெரியுமா?

கஜ :—ஏன் யாரோ கொள்ளைக்காரன்தான்.

கோ :—நானல்ல கொள்ளைக்காரன்? நீதான் வந்திருக்கிறய்! மஹாபத்கான்! இனி நீ உதயபுரத்திற்குள் செல்லலாம். உன்னை ஒருவரும் தடுக்கமாட்டார்கள். உன் தாய்மார்களை பிடித்து இழுத்து மூகலாயர்களிடம் தாஸிகளாகக் கொடு. அதுதான் பிள்ளையின் கடமை. அதைப் பூர்த்தியாகக் செய்து கொடு. அஜயா! கல்யாணி! (கோவிந்தஸிம்ஹர் துடித்து இறக்கிறர்.)

காட்சி 5.

உதயபுரக் கோட்டைக்கு எதிரில் இரவு; ஓர் கோட்டைக் காவலாளியுடன் நகரத்தார்கள் பேசிக் கொண்டு இருக்கின்றர்கள்.)

ஒருவன் :—நமது அரசன் ஏன் கோட்டை விட்டு வெளியே சென்றிருக்கிறர்?

காவலாளி :—அது ஏனே? தெரியாது. மஹாபத்கான் இனி யுத்தம் செய்யப்போவதில்லை என்று பாத்ஷாவுக்கு தெரிவித்து விட்டாராம். பாத்ஷா இளவரசரை இங்கு ஸைன்யத்துடன் அனுப்பி இருக்கிறராம். இளவரசர் நமது அரசனிடம் ஓர் தூதனை அனுப்பினர். தூதன் வந்து போனபிறகு, நமது அரசன் இன்று காலை, குதிரை ஏறி, இளவரசரைக் காணச் சென்றிருக்கிறர்.

மற்றொருவ :—ஏதாவது ஸமாதான விஷயமோ?

கா :—என்னவோ!

ஒருவ :—கூட யார் சென்றிருக்கிறர்கள்?

கா :—தனியாகத்தான் போய் இருக்கிறர்.

மற்றொருவ :—ஏன் இன்னும் வரவில்லை!

மற்றொருவ:—அது யார் வருகிறது? அரசனு?

ஒருவ :—இல்லையே, வேறு யாரோ.

மற்றொருவ :—பார்த்தால் அரசனைப் போலத் தான் இருக்கிறது. உடை அரசன் உடைதான். (காவலாளியைப் பார்த்து) அல்லவா?

கா :—அவர் ஜோதிபுர மன்னர் கஜஸிம்ஹர்.

ஒருவ :—மஹாபத்கானுடன் படை எடுத்து வந்திருக்கும் கஜஸிம்ஹரா?

கா :—ஆம்.

மற்றொருவ :—ராஜ புத்திரனல்லவா?

மற்றொருவ :—ராஜபுத்திரனானதாலே தான் ராஜ புத்திரர்களுக்குச் சத்துருவாக வந்திருக்கிறார்.

(சைன்யத்துடன் கஜஸிம்ஹர் வருகிறார்)

கஜ :—(காவலாளியை) இனி இது நம்முடைய கோட்டை. கதவைத் திற.

கா :—என் பிரபுவின் உத்திரவின்றி நான் திறக்கமுடியாது.

கஜ :—உன் பிரபுவா? அமரஸிம்ஹர் இனி பிரபு அல்ல; நான் தான் உன் பிரபு.

கா :—அப்படி நான் தெரிந்து கொள்ளவில்லை. எப்படி இருந்தபோதிலும் அமரஸிம்ஹரின் உத்திரவு இன்றி நான் திறக்கப் போவதில்லை.

கஜ :—(தன் சைனிகர்களிடம்) இவனிடமிருந்து சாவியைப் பிடுங்குங்கள்.

கா :—(கத்தியை உருவி) என் உயிர் உள்ள வரையில், முடியாது.

கஜ :—ஸரி, கொல்லுங்கள் இவனை.

ஒரு நகரத்தோன் :—என்ன, பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள். சேர்ந்து இவர்களை விரட்டி அடிப்போம், வாருங்கள்.

கஜ :—வீரர்களே! (கஜஸிம்ஹரின் சைனிகர்கள் ஜனங்கள்மேல் பாய்ந்து விழுகிறார்கள்; அதற்குள் முகலாய வீரர்கள் சூழ ராணா அமரஸிம்ஹர் வருகிறார்.)

அர :—வீரர்களே! கத்தியைக் கீழே போடுங்கள். (எல்லோரும் கத்தியை கீழே போட்டுவிடுகிறார்கள்.) கஜஸிம்ஹரே! இங்கு தங்களுக்கு என்ன வேலை?

கஜ :—இந்தக் கோட்டைக்குள் பிரவேசிக்கத்தான் வந்தேன்.

அர :—வாருங்கள், ராஜ அதிதி! தங்களுக்குத் தக்க மரியாதை செய்கிறேன். பெற்றுக் கொள்ளுங்கள். முகலாய அடிமையே! நாயே! (அடித்து தள்ளுகிறார்.) காவலாளி! கதவைத் திறந்துவிடு. நீதான் வீரன். (காவலாளி கதவைத் திறக்கிறான்; அரசர் உள்ளே செல்லுகிறார்; முகலாய வீரர்களைப் பார்த்து) நீங்கள் இனி திரும்பிப் போகலாம். (கதவு மூடுகிறது.)

காட்சி 6.

மேவாரின் மலை அடிவாரத்தில் ஒரு வழி; ஸத்யவதியும் சாரணிகளும் அருணஸிம்ஹனும்; சாரணிகள் தேசீயப் பாட்டுபாடுகிறார்கள்.

(மூன்று சைனிகர்களுடன் முகலாய ஸேனாதிபதியான ஹிதாயத் அலிகான் வருகிறான்.)

ஹிதாயத் :—யார் நீங்கள்?

ஸத்யவதி :—நாங்கள் சாரணிகள். பாட்டு பாடிக்கொண்டு அலைந்து வருகிறோம்.

ஹிதா :—இனி இந்தப் பாட்டை நீங்கள் பாடக்கூடாது.

ஸத்ய :—ஏன்?

ஹிதா :—இந்த தேசம் எங்களிடம் வந்து விட்டது. உங்களுடையது அல்ல, இந்த பாட்டுக்களைப்பாட. இது இனி முகலாயர்களுடைய ராஜ்யம்.

ஸத்ய :—முகலாயர்கள் நன்றாக வாழட்டும்! நாங்கள் ஸ்வாதீனமாக இருந்தவரையில், எங்கள் ஸ்வாதீனத்திற்காக முகலாயர்களுடன் சண்டை செய்தோம். கடைசியில் தோற்று முகலாயர்களுக்கு கீழ்ப்படிந்து விட்டோம். இனி அவர்களுடன் எங்களுக்கு ஒரு சண்டையுமில்லை, விரோதமும் இல்லை. ஆயினும், நாங்கள் அழக்கூடாதா? உலகில் அவரவர்கள் தங்கள் தங்கள் தாயை நேசிக்கமாட்டார்களா? நாங்கள் மட்டில் நேசத்தையும் விட்டுவிட வேண்டுமா?

ஹிதா :—அது என்னவோ, இந்தப் பாட்டு பாடக் கூடாது.

அருண :—நாங்கள் பாடத் தான் பாடுவோம். யார் தடுக்கிறார்கள், பார்ப்போம்.

ஹிதா :—பாடினால் கைது செய்துவிடுவேன், தெரியுமா?

ஸத்ய :—ஸரி, அப்படியே செய்துகொள்ளுங்கள். சிறையிலிருந்துகொண்டே எங்கள் அழுகையை அழுகிறோம். எங்கள் பாட்டை பாடிக்கொள்கிறோம். ஸரி, ஆரம்பியுங்கள்.

ஹிதா :—ஓ, அப்படியா? ஆனல் ஸரி. உங்களை கைது செய்துவிட்டேன். எங்கும் செல்லக்கூடாது இனி. (முன்சென்று மறிக்கிருன்.)

அருண :—(கத்தியை உருவி) உயிரில் பிரியம் இருந்தால் ஜாக்கிரதை! என் தாயாரைத் தொடாதீர்.

ஹிதா :—அட பயலே! கத்தியா உனக்கு? சீ, கீழே போடு.

அருண :—என்ன? இதோ பார்!

ஹிதா :—ஸிபாய்களே! இவனைப் பிடியுங்கள். (ஸிபாய்கள் முன்சென்று அருணனுடன் யுத்தம் செய்கிருர்கள்; அருணன் நன்ருக யுத்தம் செய்கிருன்.)

ஸத்ய:—ஸபாஷ்! அப்படித் தான். தாயாரைக் காப்பாற்றத் தெரிந்து கொண்டாய். (ஒரு முகலாய ஸிபாய் காயம்பட்டு கீழே விழுகிருன்.)

ஸத்ய :—அதுதான் ஸரி. உயிர் உள்ளவரையில் கத்தியை கீழே நழுவவிடக்கூடாது. இதுதான் ஆனந்தம்!

(ஹிதாயத் அலிகானே சண்டைக்கு முன் வந்து அருணனுடன் யுத்தம் செய்கிருர்; மூன்று பக்கத்திலும் அருணனை ஸிபாய்கள் சூழ்ந்துகொள்ளுகிருர்கள்; அருணனுக்குச் சாவு கிட்டிவிட்டதைக் கண்டு ஸத்தியவதி கண்ணை மூடிக்கொள்கிருள்; இதற்குள் மஹாபத்கானும் சில ஸிபாய்களும் வருகிருர்கள்.)

மஹாப்பத்கான் :—ஹிதாயத் அலி! நிறுத்தும், போதும். (எல்லோரும் சண்டையை நிறுத்துகிருர்கள்.)

மஹா :—வெட்கம் இல்லை? ஓர் சிறு பையனுடன் தடித்தடியான ஆள்கள் சண்டை செய்கிறதா? சே! பையா, நீதான் வீரன். உன் உயிரை லக்ஷ்யம் செய்யாமல் உன் தாயைக்காக்க யுத்தம் செய்யும் தன்யன். சிரஞ்சீவியாக இரு. (ஸத்தியவதி பார்த்துப் பிரமித்து நிற்கிருள்; ஆனந்த பரவசம் அடைகிருள்; மஹாபத்கான் பக்கமாக இரண்டு அடி எடுத்து வைக்கிருள்; பிறகு தலைகுனிய வெட்கித் திரும்புகிருள்; மஹாபத்கான் ஸத்தியவதியையே பார்த்துக்கொண்டு நிற்கிருர்.)

மஹா :—அக்கா! நான் என்ன சொல்லி அழைப்பேன்! உன்னை 'அக்கா' வென்று கூப்பிடும் பாத்தியதையையும் இழந்துவிட்டேன். என்னை மன்னிப்பாயா? அக்கா! அக்கா!

ஸத்ய :—ஈச்வரா! என்ன தவறு செய்துவிட்டீர்? என் தம்பி என்னை அன்புடன் 'அக்கா' என்று அழைக்கின்றுன். அவனை அள்ளி மார்புடன் அணைத்துக்கொள்ள இயலவில்லையே!

அருண :—இவர் யார், அம்மா?

ஸத்ய :—இவரா? இவர் முகலாய ஸேனுதிபதி மஹாபத்கான் ஸாஹேப்.

மஹா :—பையா! நான் உன் மாமா.

ஸத்ய :—வாடா, போவோம்.

மஹா :—எங்கே போகிருய்? என்னை 'மன்னித்துவிட்டேன்' என்று சொல்லிவிட்டுத் தான் போகவேண்டும்.

ஸத்ய :—மஹாபத்கான்! நீ செய்த பாபம் என்ன என்ருவது உனக்குத் தெரிகிறதா?

மஹா :—தெரிகிறது; நன்ருகத் தெரிகிறது. என் கையால் என் வீட்டிற்குத் தீ வைத்தேன். அதிலிருந்து கிளம்பும் புகையைக் கண்டு ஆனந்தங் கொண்டேன், பிசாசைப்போல்..

ஸத்ய :—இவ்வளவுதானு?

மஹா :—வேறு என்ன? நான் முஸல்மானுகிவிட்டேன், வாஸ்தவம். ஆனல் அதில் ஒரு பாபமும் இல்லை. நான் ஒரு தவறும் புரிந்துவிடவில்லை. எவர் எவருக்கு எந்த எந்த மதத்தில் நம்பிக்கையும் பற்றுதலும் உண்டாகிறதோ, அவரவர்கள் அந்தந்த மதத்தை ஆச்ரயித்து வாழ உரிமை உண்டு. அதில் ஒரு தவறுமில்லை என்பதுதான் என் கொள்கை. அதை அனுஸரித்தே........

ஸத்ய :—ரொம்ப ஸரி! (அருணனை) வா, போவோம்.

மஹா :—முஸல்மானாக ஆனதா பாபம்? பாபமானாலும் இவ்வளவு கொடிய பாபமா அது? மனுஷ்ய ஹ்ருதயத்தின் கோமள ஸ்வ பாவத்தையும் கெடுத்து, அன்பு நிறைந்து, பரி சுத்தம் நிறைந்து, ஆத்மோத்ஸர்க்கத்தையே முதன்மையாகக் கொண்டு விளங்கும் ஸ்த்ரீ யின் புண்ணிய ஹ்ருதயத்தையும் கல்லாக ஆக்க வல்ல அவ்வளவு கொடும் பாபமா அது? நமது ஆசார நியமம் அவ்வளவு கொடியதா? அக்கா, அக்கா! சற்று, சில நிமிஷங்களுக்குமட்டில் நீ எல்லாவற்றையும் மறந்துவிடு. 'நான் முஸல் மான், நீ ஹிந்து' என்பதையும் மறந்துவிடு. 'நான் கொடுங்கோலன், நீ துன்புறுத்தப்பட்ட வள்' என்பதையும் மறந்துவிடு. நாமிருவரும் மனுஷ்யர்கள் என்பதை மட்டில் ஞாபகப் படுத்திக்கொள். 'நீ என் தமக்கை, நான் உன் தம்பி' என்பதை மட்டில் நினைத்துக்கொள். என்னை இடுப்பில் எடுத்துக்கொண்டு சுற்றிவரு வாயே, அந்தக் குழந்தைப் பருவம் உனக்கு ஞாபகம் வரவில்லையா? என் கன்னங்களை முத் தமிட்டு நிரப்பி, என்னைத் தட்டி தூங்கவைப் பாயே ஞாபகம் வருகிறதா? தாயை இழந்த நாம் இருவரும்......தமக்கையும் தம்பியுமான நாம்...........

ஸத்ய :—ஹே பகவானே!

மஹா :—அக்கா, அக்கா!

ஸத்ய :—பொறுக்க இயலாது இனி. போனது போகட்டும். தம்பி, என் அருமை ஸஹோதரன்தான் நீ. உன் அபராதங்கள் யாவையும் மன்னித்துவிட்டேன். அப்படி யே பகவானும் உன்னை மன்னித்துவிடட்டும். உன்னை நான் முகலாய ஸேனாதிபதியான மஹாபத்கானாகக் கருதவில்லை. இன்றும் நீ என் சிறிய ஸஹோதரனை அதே மஹீபதி தான். போய் வா.

மஹா :—அப்பாடா! அக்கா! (நமஸ்கரிக் கிறான்.)

ஸத்ய :—சிரஞ்சீவியாயிரு! வாடா அருண்! போவோம், வா.

ஹிதா :—நீங்கள் எங்கே போவது? அதெல் லாம் முடியாது; நீங்கள் என் கைதிகள்.

மஹா :—என்ன? எனக்கு எதிரில் என் தமக்கையைத் தொட தைர்யம் உள்ளவனும் இருக்கிறானா? ஜாக்கிரதை! நீ போ, அக்கா.

ஹிதா :—கான்ஸாஹேப்! இப்பொழுது தாங்களல்ல ஸேனாதிபதி. நான் உங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை. இப்பொழுது ஸேனாதிபதி, இளவரசர் குர்ரம். (இளவரசர் வருகிறார்.)

இள :—ரொம்ப ஸரி! ஆனால் நானே சொல் லுகிறேன். (ஸத்தியவதியைப் பார்த்து) நீங் கள் யதேச்சையாகப் போய் வாருங்கள்.

ஹிதா :—அப்படி இல்லையே. இவர்கள் நமக்கு விரோதமாக தேசிய கானங்களைப் பாடி கலகம் விளைவிக்கிறார்களே!

இள :—இவர்கள் பாட்டை கேட்டேன். சோகம் ததும்பிற்று; பரிதாபம் நிரம்பி நின் றது.

ஹிதா :—இம்மாதிரி பாட்டுக்களாலேதான் நமது அரசியல் அமைதியே குறைந்து கஷ்ட மும் கலகமும் விளைகின்றன.

இள :—அரசியல் அமைதி விஷயத்தை நான் கவனித்துக்கொள்கிறேன். அதற்குத் தகுந்த ஏற்பாடுகளை முகல் பாத்ஷா செய்து கொள்வார். இத்தகையப் பாட்டுக்களால் இந்த முகலாய ராஜ்யம் சிதறுண்டு சின்னாபின் னமாகி ஓர் வெள்ளை மேகத் துணுக்குப்போல் மறைந்துபோவதென்றால், போகட்டும்; மே வாரிலிருந்து மட்டிலல்ல, ஹிந்துஸ்தானத்தி லிருந்தே போகட்டும். முகலாய ஸாம்ராஜ் யம் இவ்வளவு பலஹீனமான மணலில் கட் டிய மாளிகை என்று எண்ணிவிட்டீர்? நன்றாக வேர் ஊன்றிய ஸாம்ராஜ்யம் இது, தெரியுமா? "ஹிந்துஸ்தான ஜனங்களின் அன்பில் வேர் ஊன்றி அவர்கள் ஆதரவை முழுமனதுடன் பெற்று, ஸ்திரப்பட்டு விளங்குவது இது" என்று தெரிந்துகொள்ளும். அவரவர்கள், தங்கள் தங்கள் தேசத்தை, தங்களுக்குத் தோன்றிய தகுந்த வழியில், நேசித்துப் பூஜிப்பதை நாம் தடுப்பதில்லை; கெடுப்பதில்லை.

இதனால் நமது ஸாம்ராஜ்யமே நம்மைவிட்டுச் சென்றாலும் செல்லட்டும். தெரிந்ததா, ஹிதாயத் அலிகான்?

ஹிதா :—உத்தரவு.

இள :—(ஸத்தியவதியிடம்) நீ பாடு, அம்மா. அதே பாட்டைப் பாடு. நீங்கள் இதைப் பாடி விடுகிறீர்களே என்று எனக்கு வருத்தம் இல்லை இந்தப் பாட்டைக் கேட்க மணிதர்கள் மேவாரில் இல்லையே என்றுதான் வருத்தம். பாடுங்கள், நான் கேட்கிறேன். உங்கள் பழைய விஜய கௌரவங்களைக் கேட்டுக் கண்ணீர் வடிக்க எனக்குப் பழக்கமுண்டு. பாடுங்கள், நானும் உங்களுடன் சேர்ந்து பாடுகிறேன். ஹிதாயத் அலி! நீரும் சேர்ந்துப் பாடும். ஸிபாய்களே! நீங்களும்!

(பாடுகிறார்கள்.)

காட்சி 7.

உதய ஸாகரக்கரை, சாயங்காலம். மானஸீ தனியாக நின்று கொண்டிருக்கிறாள்.

மான :—எனக்குள் ஓர் புயல் அடித்து ஓய்ந்தது. இந்த மிருதுவான அமைதி ஸங்கீதம் இனி எனக்கு ருசிக்கும். மேகங்கள் விலகிவிட்டன. ஆகாயம் நூறு மடங்கு அதிகமாக நிர்மலமாய் நக்ஷத்ரோஜ்வலமாய் விளங்கும். இந்த ஸம்ஸாரத்தில் அல்ப ஸுக துக்கங்களைக் கடந்து விசாலமாய் விஸ்தரிக்கின்றது என்னுடைய கர்த்தவ்விய மார்க்கம். (கலியாணி வருகிறாள்.) யார்? கலியாணியா?

கல் :—ஆம், ராஜகுமாரி.

மான :—மறுபடியும் 'ராஜகுமாரி' தானா? சே! நமக்குத்தான் வேறு புதிய ஸம்பந்தம் ஏற்பட்டிருக்கிறதே. அக்கா! பார்த்தாயா, மறுபடியும் அழ ஆரம்பித்து விட்டாயே! போடி, அம்மா.

கல் :—இனி அழமாட்டேன். எனக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. இங்கு ஓடி வந்தேன். எனக்கு கொஞ்சம் தைரியம், அளி.

மான :—கல்யாணி, உன் துக்கங்களை யெல்லாம் என்னிடம் கொடுத்து விடு. என் ஸுகங்களை எல்லாம் நீ எடுத்துக் கொள்.

கல் :—ஸுகமா? உனக்கு ஸுகம் வேறு இருக்கிறதா!

மான :—ஏன் இல்லை? என்னை நசுக்கி விடத்தான் வந்தது, துக்கம். ஆனால், அதனால் என்னை நசுக்க முடியவில்லை. துஷ்ட ஜந்துக்களை வசப்படுத்தி வேலைக்கு அமர்த்துவது போல், நான் துக்கத்தையும் நன்றாக புரிந்து கொண்டு அதை என் ஸாதனையில் உபயோகித்துக்கொண்டு விட்டேன். அபூர்த்தியான ஜீவனத்தை பூர்த்தியாக்கிக் கொண்டேன்.

கல் :—நீ, தன்யை!

மான :—நீயும் தன்யை ஆகலாம். எனக்கு உதவி செய். 'கல்யாணி' என்ற பெயரை உண்மையாகச் செய். மனுஷ்ய ஜாதியின் ஹிருதயத்திற்காகவே உழைப்போம். உனக்கு தைரியம் தானாகவே வந்து விடும். துக்கங்களின் தன்மை மாறிவிடும். என்ன, ஸம்மதமா?

கா :—ஸரி. என் வியர்த்தமான பிரேமை உன் வேலையில் ஈடுபட்டு ஸார்த்தகம் ஆகட்டும்.

மான :—மஹாபத்காளை இன்றுமா வெறுக்கிறாய்?

கல் :—அன்று கோபித்துக் கொண்டு அவரிடம் அப்படித்தான் சொல்லி விட்டு வந்தேன். ஆனால் அது வாஸ்தவமல்ல. அவரை வெறுக்க என்னால் முடியாது. அவரையே நம்பி, அவரையே தெய்வமாக பாவித்து, இவ்வளவு நாள் வளர்ந்த நான் திடீரென்று அவரை வெறுக்க முடியுமா!

மான :—ஏன் வெறுக்க வேண்டும்? வெறுக்கவே வேண்டாம். ஒருவரையும் வெறுக்கக் கூடாது. உன்னுடைய அன்பை மனுஷ்ய ஜாதியினிடமே செலுத்து. எல்லோரிடமும் ஸமமாக வியாபிக்கட்டும். யோக்கியனா அயோக்கியனா என்று கூட விசாரிக்க வேண்டியதில்லை. பகவான் ஸ்ருஷ்டித்த எல்லோருமே நமது அன்புக்கு பாத்திரம். பிரதிப்பிரயோஜனத்தை விரும்பாமல், விசுவப்பிரேமை செய்து, பிறருக்கு உழைப்பதே, நமது ஸுகம் எனக் கொள்வோம். அப்பொழுது தான் நமக்கு சந்தர்ப்பப்படும்.

ஸத்ய :—மானஸீ, உன் தகப்பனார் திரும்பி வந்து விட்டார். ஸமாதானத்திற்கு வழியைக் காணோம். ஸமானமானவர்களுக்குள் தானே ஸமாதானம் ஏற்படமுடியும்? தோற்றவர்கள் ஜயித்தவர்களுடன் எப்படி ஸமானதாமாகமுடியும்? அரசன் ஸிம்ஹாஸனத்தைத் துறந்து விட்டு ஸன்யாஸியாகி காட்டிற்குச் சென்றுவிட தீர்மானித்துவிட்டார். மேவாரின் கதியைப் பார்த்தாயா? என்ன தாழ்வு, பார்.

மான :—இதுவா தாழ்வு? மேவாரின் தாழ்வு, இன்று ஏற்பட்டதா? இல்லை, இல்லை. அது அன்றே ஆரம்பித்து விட்டது. என்று நாம் கண்மூடித்தனமாக, ஆசாரத்தைப் பிரதானமாகக்கொண்டு, ஸ்வய அறிவை இழந்து, பரஸ்பர விரோதத்தையும், அன்னியர்களைக் கண்டால் த்வேஷத்தையும், மதச் சண்டைகளையும் கைக்கொண்டோமோ, அன்றே வந்தது நமது தாழ்வு. ஆயுதங்களாலும் யுத்த தந்திரங்களாலும் ஒரு தேசம் மேன்மை அடைந்துவிட முடியாது; ஒரு ஜாதி உயர்வு அடைய முடியாது. நமது நீதியின் பலத்தினாலும் நமது சாரித்திரத்தின் பலத்தினாலுமே நாம் உயரமுடியும். அதை இழந்த பிறகு நாம் உயர நிற்கமுடியாது. கீழே விழுந்து விடுவதே நலம். விழுந்து மறுபடியும் மேலே கிளம்புவோம். ஒரு புது தர்மத்தைக் கைகொள்வோம்.

ஸத் :—அது என்ன புது தர்மம்?

மான :—பிரேமை என்பதுதான். இந்த தர்மத்தை கைப் பிடித்தவன் ஸ்வய நலத்தை விட்டு விடுவான்; ஸகோதரனிடம் அன்பு கொள்வான். அது வளர்ந்து வந்து, தன் ஜாதியினிடம் அன்பு கொள்வான்; பின்னும் வளர்ந்து, மனுஷ்யர் என்னும் எல்லோரிடமே அன்பு கொள்வான்; மனுஷ்யத் தன்மையினிடமே அன்பாக அது பரிணமிக்கும். இது தான் விசுவப் பிரேமை என்பது. இது தான் ஈசுவர கைங்கர்யமும். ஓர் ஜாதி; ரக்த நதியை ஓடவிடுவதாலா உன்னதமாகும்? இல்லை. பிரேம பூர்வமாக ஒன்றோடு ஒன்று ஆலிங்கனம் செய்து கொள்ளும் ஜாதிதான் உயர்ந்து நிற்கும். நாம் நீசர்களாகவும் தன்னலக்காரர்களாகவும் இருந்துகொண்டே வரும் வரையில், ராணா பிரதாபஸிம்ஹரின் ஞாபகமும் கௌரவமும், நம் தலையில் சூட்டப்பட்டும் வீணேயாகும். அணைந்த விளக்கினால் என்ன பயன்? துக்கமே அதிகரிக்கும். எப்படி தன்னலம் கோருதலைக் காட்டிலும், தன் ஜாதிக்காக உழைப்பது மேலானதோ அதுபோலவே தன் ஜாதிக்காக உழைப்பதைக் காட்டிலும் மனுஷ்ய வர்க்கத்திற்காகவே உழைப்பது மேலாகும். மனுஷ்யத்வத்திற்கே விரோதமாக ஜாதி நிற்குமானால் அந்த ஜாதியை மனுஷ்யத்வம் என்னும் மஹாஸமுத்திரத்தில் இட்டுக் கரைத்துவிடுவதுதான் நமது கடமை. மனுஷ்யத்வத்தையே இழந்த ஜாதி ஸ்வாதீனமாக இருந்துதான் என்ன பயன்? ஸ்வாதீனத்தையும் இழப்பதுதான் அதற்கு நலம்; மறுபடியும் மனுஷ்யத்வத்தை பிறர்க்காவது, அடைய ஹேதுவாகும். இப்பொழுது நமக்கு வேண்டியதும், எப்பொழுதும் வேண்டியதும், இந்த தர்மம் தான். சாரணிகளே, நான் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்த அந்தப் பாட்டைப் பாடுங்கள். கேட்கட்டும்.

(சாரணிகள் 'விச்வப்ரேமை' என்னும் பாட்டைப் பாடுகிறார்கள்.)

காட்சி 8.

ராணா அமரஸிம்ஹர், தனியாக நின்றுகொண்டு இருக்கிறார்.

அர :—மேவாரின் மலைகளும், லஜ்ஜையடைந்து முகத்தை மூடிக்கொள்கின்றன. ஆகாயம் கோபமடைந்து உறுமுகின்றது. குலதேவதைகளும் ரோஷங்கொண்டு திரும்பிக் கொண்டு விட்டன. என் கையினாலேயே என் மேவார், ராணா பிரதாபஸிம்ஹரின் மேவார், வீழ்ச்சியுற்றது. ஐயோ! (உலவுகிறார்; மஹாபத்கான் வருகிறார்.)

அர :—வாருங்கள், ஜனாப்.

மஹா :—என்றும் ஜயவிஜயியாக விளங்க வேண்டும். (நமஸ்கரிக்கிறார்.)

அர :—ஆஹா, ஜனாப்! ரக்தநதிகளை மட்டில் தான் உங்களுக்கு ஓடவிடத் தெரியும் என்று எண்ணி இருந்தேன். நன்றாகக் கேலியும் செய்வீர்களா! ஆம், நான் தானே ஜயவிஜயியாக இப்பொழுது விளங்குகிறேன்!

மஹா :—இல்லை. நான் கேலி செய்யவில்லை.

அர :—நீர் கேலி செய்தால் என்ன, செய்யா விட்டாலென்ன, ஆவது ஒன்றுமில்லை. ஆயினும் உம்மைக் காண விரும்பியது உண்டு.

மஹா :—என்ன உத்தரவு, சொல்லுங்கள். காத்துக் கொண்டிருக்கிறேன்.

அர :—ஆஹா, என்ன விநயம்! போகட்டும். ஒரு காரியம் ஆகவேண்டும். தாம் ஒருவர் தாம் செய்யமுடியும் அதை.

மஹா :—தயாராக காத்துக்கொண்டு இருக்கிறேன், சொல்லுங்கள்.

அர :—மஹாபத்கான்! என்னைப் பார். நீ எனக்கு என்ன ஆகவேண்டும்? சற்று சொல்.

மஹா :—நான் தங்கள் ஸஹோதரன்.

அர :—ஆம்; அதனாலேதான் ஸஹோதரனுக்குரிய கார்யத்தையும் செய்து முடித்துவிட்டாய். உன் பிதாமஹ ப்ரபிதாமஹர்களின் ஜன்மபூமியை, முகலாயர்களின் காலில் இட்டு மிதிக்க வைத்தாய். அதோ, உன் இரு கைகளிலும் அதன் ரக்தம் வழிகிறது.

மஹா .—மஹாராஜ்! நான் பாத்ஷாவின் உப்பைத் தின்றுவிட்டேனே. அவருக்கு உழைக்கவேண்டாமா?

அர :—அது எதுமுதல்? போகட்டும். உன் வேலையை நீ செய்துமுடித்தாய். அதுவிஷயமாக உன்னுடன் வாத விவாதம் செய்து பயனில்லை. தன் மதத்தைத் துறந்து, முகலாயர்களின் அடியைத் தேடிக்கொண்ட அற்பன் செய்யும் வேலை இதுதானே. நன்றாகச் செய்துவிட்டாய்; மேவாரை த்வம்ஸம் செய்து விட்டாய். ஆனால் அது இன்னும் பூர்த்தியாகவில்லை. மேவாருடன் மேவாரின் அரசனையும் நாசம் செய்துவிடவேண்டும். இந்தா, எடுத்துக்கொள். (கத்தியைக் கொடுக்கிறார்.)

மஹா :—மஹாராஜ்!

அர :—ஆக்ஷேபிக்காதே. எடு, ஒரே குத்து. இந்தா! இதனால் உன் களங்கம் அதிகரித்து விடப்போகிறதில்லை. உனக்குப் பிடிக்காத காரியமும் அல்ல இது. அதோ, உன் வலது கை என் பிராணனை எடுக்கவேண்டும் என்று தானே ஆத்ரமாகத் துடித்துக்கொண்டிருக்கிறது. ஸரி, கொன்றுவிடு.

மஹா :—மஹாராஜ்! மஹாபத்கான் அவ்வளவு அற்பன் அல்லனே! போர்முனையில் வெல்பவன் மஹாபத்கான். தீ இட்டு மேவாரையே ச்மசானம் ஆக்கினேன் என்பது உண்மைதான். ஆயினும் நான் அநியாய யுத்தம் செய்யவில்லையே! நியாய யுத்தம்தானே செய்தேன்.

அர :—நியாய யுத்தமா? இதுவா நியாய யுத்தம்? ஓர் சிறிய ராஜ்யத்தின் கை நிறையாத ஸேனையின்மேல் இவ்வளவு பெரிய ஸாம்ராஜ்யத்தின் ஸமஸ்த சக்தியையும் ஏவி, ஓர் சிறிய தணலை அவிக்க ஓர் மஹாஸமுத்திரத்தின் பிரவாஹத்தை ஏவி, ஸர்வநாசம் செய்து முடித்த இதுவா தர்ம யுத்தம்? போகட்டும். எப்படியோ ஜயித்து விட்டாய். மீதியையும் பூர்த்தி செய்துகொள். இதோ, இந்தக் கத்தி ராணா பிரதாபஸிம்ஹர் இறக்குமுன் என்னிடம் கொடுத்தது; "இதற்கு அவமானம் நேராமல் காப்பாற்றி வா" என்று சொல்லிக் கொடுத்தது. அப்படிக் காப்பாற்றமுடியவில்லை; அவமானம் ஏற்பட்டே விட்டது. ஆகையால் என் ரக்தத்தாலேதான் இந்த அவமானத்தைக் கழுவவேண்டும். எடுத்துக் கொள்.

மஹா :—மஹாராஜ்! மஹாபத்கான் கொலையாளியல்ல; யுத்தவீரன்.

அர :—ஸரி, அப்படியே. யுத்தமே செய்வோம். எடுத்துக்கொள் கத்தியை. (தானும் கத்தியை எடுத்து சுழற்றிப் பார்க்கிறார்.)

மஹா :—நான் மேவாருக்கு விரோதமாக அஸ்திரம் எடுப்பதை விட்டுவிட்டேனே.

அர :—அது எதுமுதல்? என் வீண் வாதம்? எடுத்துக்கொள் கத்தியை. இறந்த மேவாரின்மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்—எடு கத்தியை.

மஹா .—இல்லையே.....சற்று கேளுங்கள்.

அர :—வேண்டாம், வேண்டாம். பயங்கொள்ளிப் பதரே! குலாங்கார மிலேச்சா!

எடு கத்தியை. உன் வீரியத்தையும் பார்த்து விடுவோம். பாரத வர்ஷம் முழுவதுமே கண்டு நடுங்கும் உன் சூரத்தனத்தைத் தான் நானும் பார்க்கின்றேனே. எடு, உன்னை விடப்போகிறதில்லை. அதமா! சைத்தான்! எடு.

மஹா :—ஓஹோ! ஸரி. ஆனால் யுத்தமே நடக்கட்டும். (கத்தியை உருவி) பாரதவர்ஷத்திலேயே மஹாபத்கானுக்கு நிகரான வீரன் இருப்பின், அது தாங்கள் ஒருவரே! ஆயினும் தாங்களும் ஜாக்கிரதையாகவே நடந்துகொள்ள நேரும் பார்ப்போம். (கத்திகளை இருவரும் சுழற்றி ஸரி பார்க்கிறார்கள்.)

அர :—ஸஹோதரர்களின் யுத்தம் இன்று. உலகில் ஒருவரும் கண்டு அறியாத யுத்தம் இது! இனி பிரளயம்தான்! (இதற்குள் மானஸீ ஓடிவந்து இவர்களுக்கு நடுவில் நிற்கிறாள்.)

மான :—என்ன இது? இது என்ன? (மஹாபத்கானைப் பார்த்து) சற்று நிதானியுங்கள்.

அர :—விலகி நில்; நீ இதில் குறுக்கிடலாகாது.

மான :—(இருவரையும்) சற்று நிதானியுங்கள். ஆனது ஆகிவிட்டது. ஸஹோதர ரக்தத்தினாலா இந்த சோகம் சாந்தமாகும்? வேண்டாம். ஆறுதல் அடைய ஒரே வழிதான்—சத்துரு மித்திரன் என்பதை மறந்துவிடுங்கள். த்வேஷத்தை விட்டு ஒழியுங்கள். விசுவப்பிரேமையைக் கைக்கொள்ளுங்கள். தேசத்தின் பெயரினாலும், மதத்தின் பெயரினாலும், ஜாதியின் பெயரினாலும் இதுவரையில் சிந்தின ரக்தம் போதும். மறுபடியும் புத்துயிர் பெற்று மனுஷ்யனாகவேண்டும், மனுஷ்யத் தன்மையை அறிந்து வாழவேண்டும். (சாரணிகள் வருகிறார்கள்.) சாரணிகளே! நான் உங்களுக்குச் சொல்லி வைத்தேனே, அந்தப் பாட்டைப் பாடுங்கள்.

(அவர்களும் மானஸீயும் சேர்ந்து பாடுகிறார்கள்.)

அர :—(ஸ்தம்பித்து கேட்டுவிட்டு) மஹாபத்!

மஹா :—என்ன மஹாராஜ்!

அர :—வாஸ்தவம்தான். உன்மேல் மட்டில் தோஷம் இல்லை. த்வேஷம் வெறுப்பைத்தான் உண்டுபண்ணும். ஆகையால் முதல் தவறு என்னுடையதுதான். என்னை மன்னித்துவிடு.

மஹா :—அண்ணா! (இருவரும் கட்டிக்கொள்ளுகிறார்கள்.)

முற்றிற்று.

டால்மியாபுரம்



"காமு."

'டால்மியாபுரம்' என்ற பெயருள்ள இவ்வூர் ஏற்பட்டு இரண்டு வருஷங்கள் ஆகின்றன. இதற்கு முதல் முதலில் 'கள்ளக்குடி' என்று பெயர். வெறுங்காடாக விருந்த இங்கிலத்தை, தோண்டினால் சிமிண்ட் சுண்ணாம்புக் கற்கள் அகப்படுமென்று கண்டுபிடித்து, டால்மியா சிமிண்ட் கம்பெனிக்காரர்கள் வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் இங்கு ஒரு தொழிற்சாலை கட்டியிருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் புருஷர்கள் மட்டுமே இவ்வூருக்கு வந்தார்கள். வேண்டிய சாமான்களை திருச்சியிலிருந்து வரவழைத்துக் கொண்டு, சாப்பாட்டிற்கு மட்டும் இங்கு ஏற்பாடு செய்து கொண்டார்கள். பொட்டல் காடாக விருந்ததால் பெண்பாலர் குடிவர ஏற்ற வசதிகள் எதுவுமில்லை. நாளடைவில் கம்பெனிக்காரர்கள் குடிசை வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள்; பிறகு அநேக புருஷர்கள் தம்தம் வீட்டுப்பெண்களை வரவழைத்துக் கொண்டனர். அம்மாதிரி வந்த பெண்களில் நானும் ஒருத்தி.

டால்மியாபுரம் திருச்சியிலிருந்து 25மைல் தூரத்திலுள்ளது. நான் திருச்சி மார்க்கமாகவே இவ்வூருக்கு வந்தேன். நான் இங்கு வரும்பொழுது இரவு 8 மணி, நல்ல இருட்டுக் காலம். என் கணவர் எனக்கு ரயிலிலேயே ஸ்டேஷனிலிருந்து நடக்கவேண்டும் என்றும், பாதை மேடுபள்ளமாகவும் வழியில் ரயில்வேக் கம்பிகள், முட்கள் எல்லாம் பொருந்தியிருக்குமென்றும் எச்சரிக்கை செய்திருந்தார். அன்று நான் தட்டுத்தடுமாறி எப்படியோ ஒருவாறாய் வீடு வந்துசேர்ந்தேன். வருஷம் இரண்டாகியும் இன்னும் பாதை அன்று கண்ட மேனி அழிவில்லாமலே இருக்கிறது. ஸ்டேஷனுக்கு நடந்துதான் போகவேண்டும், வண்டிகள் வசதி கிடையாது.

குடிசைவீடு என்றால் தட்டிகளால் மறைக்கப்பட்டு, மேலே கூரை போட்டும், தளங்களை நன்றாகச் சாணிக்கொண்டு மெழுகி, அதன் மேல் வெறும் செங்கற்களை அடுக்கி அதன் மேலும் சாணியால் மெழுகப்பட்டும் இருந்தது. எல்லோருக்கும் இம்மாதிரிக்கட்டின வீடுகள் ஒவ்வொன்றிற்கும் தட்டிகளால் கதவுகள் அமைக்கப்பட்டு மூன்று அறைகள் இருந்தன. இம்மாதிரிக் குடிசைகளை நான் முன்பின் பார்த்திராததால் எனக்கு மிகவும் வியப்பாகவே இருந்தது. குழாய் ஒரு பொதுக் குழாயே. அது வீட்டிற்கு அப்பாலிருந்தது. காலை 5 மணியிலிருந்து 8 மணி வரைக்கும், மாலையில் 5 மணியிலிருந்து 8 மணி மட்டுமே ஜலம் வரும். அதுவும் சுத்த சுண்ணாம்புத் தண்ணீர்.

இந்தத் தண்ணீரும் ஒவ்வொரு நாள் நின்றுவிடும். அதிஜாக்கிரதையாகத் தண்ணீரைக் காப்பாற்றிக் கொண்டாலொழிய பிறகு கஷ்டப்பட வேண்டும். இச்சமாசாரம் தெரியாது முதலில் நான் மிகவும் திண்டாடியிருக்கிறேன். அதுவுமன்றி நான் எல்லோருக்கும் கடைசியாக வந்ததால் என் வீடு மற்றவர்கள் இருப்பிடங்களிலிருந்து சற்று ஒதுப்புறமாகவே இருந்தது. அது அநேக காரியங்களில் எனக்கு இடையூறாகவிருந்தது. ஆனால் மின்

சாரவிளக்கு வசதிமட்டும் உண்டு. ஏனெனில் தொழிற்சாலையே மின்சார சக்தியாலேதான் வேலை செய்கிறது. சாமான்கள் எல்லாம் திருச்சியில் இருந்துதான் வரவேண்டும். பால், தயிர்மட்டுமே இவ்வூரில் கிடைக்கும். கறிகாய்களும் கிடைப்பது அரிதுதான். இன்னும் இவ்வூரில் பெரிய கடைகள் ஏற்படவில்லை. அவசரத்துக்கு உப்பு, புளி இவைகள் வாங்கலாமேயொழிய மற்றவைகள் கிடையா. காக செலவழிப்பதற்கு வசதி இல்லாத ஊர். அநாவசியமாக ஒரு பைசா செலவழியாது. சினிமா என்னும் தொந்தரவு கிடையாது. பட்டண வாசிகளுக்கு இவ்வூரில் பொழுது போவது கஷ்டமே. தாயுமானவர் பாடலில் உள்ளபடி, பசிதீர உண்பதும் உறங்குவதுமே இவ்வூரில் இருப்பவர்களுக்கு வேலை.

இங்கு குடித்தனக்காரர்களாக ஒரு 60 பேர்கள் இருக்கிறார்கள். இருந்தும் ஒருவர்க்கொருவர் ஸ்நேகிதமாகவும், ஒருவர் வீட்டுக்கு ஒருவர் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருக்கமாட்டார்கள். நாமாகப்போனால் கூட இவர்கள் நம் வீட்டிற்கு மறுபடியும் வருவதில்லை. எனக்குமட்டும் பெண்பாலர் ஒன்று கூடி ஒரு மாதர் சங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற அவா.

இப்பொழுது கிட்டத்தட்ட ஒரு வருஷமாக வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். ஒரு 60, 70 சம்பளக்காரர்களுக்கு மொத்தத்தில் மூன்று அறைகள் உள்ள வீடே உண்டு. நான் இருக்கும் வீடு பெரியது; சௌகரியமாயுள்ளது. இம்மாதிரி 16 வீடுகளும், சிறிய வீடுகள் பத்தும் இருக்கின்றன. இவைகளில் இருப்பவர் தவிர, மற்றவர்கள் இன்னும் குடிசை வீடுகளில்தான் குடியிருக்கிறார்கள். நாளாவட்டத்தில் அவர்களுக்கும் வீடுகள் கட்டி ஆகும். இப்பொழுது ஜலகஷ்டம் இல்லை. தண்ணீரும் சுமாராக இருக்கிறது.

வெயிற்காலத்துக்கு குடிசை வீடு மிகவும் ஏற்றதே. இங்கு கோடை காலத்தில் கடும் வெயிலும் குளிர்காலத்தில் நல்ல குளிரும் மழை காலத்தில் விடாமழையும் உண்டு. ஆடிக்காற்று இவ்வூரில் மிகவும் பேர்போனது. போனவருஷம் நான் அந்தக் குடிசைவீட்டில் இந்தக்காற்றால் மிகவும் அவஸ்தைப்பட்டேன். மேல்கூரை எப்பொழுது எந்தநிமிஷம் நம் மேல் பிய்த்து தட்டிகள் விழுந்து விடுமோ என்ற பயமும், காற்று மூர்க்கமாய் அடிக்கும் போது அடுப்பை அணைத்துவிட்டு நாங்கள் எல்லோரும் வெளியில் வந்து உடம்பெல்லாம் மணல் வீச நின்றதும் ஒருநாளும் நான் மறக்கமுடியாது. அந்தக்காற்றுக்கு மிகவும் பயந்து சிலர் கொஞ்ச நாட்கள் ஊருக்குக்கூடப் போனார்கள். ஒவ்வொரு சமயம் நடுநிசியில் காற்றும் மழையும் சேர்ந்து அடிக்கும்பொழுது நம் உயிர் தப்பினால் போதுமென்று, மானேஜருக்கும் உதவி மானேஜருக்கும் மட்டும் முதலிலேயே கட்டிக்கொடுத்திருக்கும் சிமின்ட் வீட்டுக்குப்போய்ப் படுத்துக்கொள்வோம். மறுநாட் காலை நம்வீடும் சாமான்களும் என்னவாகுமோ என்ற விசாரம் ஒருபுறம். சில குடிசைவீடுகள் காற்றில் விழுந்தும் இருக்கின்றன. ஒருநாள் திடீரென்று சுண்ணாம்புக் காளவாயிலிருந்து நெருப்புப்பற்றி பக்கத்தில் இருக்கும் ஏழைக்குடிசைகள் அதோகதி ஆகும் சமயமும் ஏற்பட்டது. ஈசுவரன் அநுக்கிரகத்தால் தீப்பிடித்ததும் உதவிக்கு ஆட்கள் ஓடி தீ அணைக்கப்பட்டது.

இன்னும் இரண்டு மூன்று வருஷங்களில் இவ்வூரும் முன்பு இப்படி எல்லாம் இருந்ததோ என்று நாங்களே ஆச்சரியப்படும்படி பெரிய பட்டணம் ஆகிவிடுமாம். அதற்கு முன்பே உங்களுக்கெல்லாம் எங்கள் கிராமத்தைப் பார்க்கவேண்டுமென்று ஆசையாயிருந்தால், சீக்கிரமாகவே ஒருதடவை வந்து பார்த்துப்போகலாம்.

கீதப் பகுதி

ஸ்ரீ ஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்கள் கிருதி விளக்கம்

கண்ணன் குழலூதல்

(தமிழ் வித்துவான் R. முத்து ஐயர்.)

தெள்ளெனக் கற்றுத் தேர்ந்து தெளிவடைந்த பெரியோர்கள் பரிபக்குவமடைந்த தமது மனோநிலைக்கும் பக்திக்கும் தக்கபடி கடவுளைப் போற்றிப் புகழ்வார்கள். அவ்வாறு புகழ்வதிலும் பல முறைகளும் பேதங்களும் உண்டு. 'கடவுளின் அனந்த கல்யாண குணங்களைப் புகழ்ந்து பாடுதல், அவரது லீலா விநோதச் செயல்களைச் சிந்தித்து மீண்டும் எடுத்துக் கூறி ஆனந்தித்தல். தமக்கு அருள் செய்யாதிருக்கக் காரண மென்னவென்று தம்முடைய உரிமைகளை எடுத்துக்கூறி வாதித்தல் முதலிய பலவகைப்படும். இவைகளில் முற்கூறிய இரண்டு முறைகளைத் தான் பெரும்பாலும் ஸ்ரீ ஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்கள் தாம் இயற்றிய கீர்த்தன ஸாஹித்யங்களில் கையாண்டிருக்கிறார்கள்.

மஹாராஜா அவர்களின் கிருதிகளில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைப் பற்றிய ஸம்ஸ்க்ருத ஸாஹித்யங்கள் பதினான்கும் சில ஹிந்தி ஸாஹித்யங்களும் இருக்கின்றன. அவைகளில் பாகவத ஸங்கிரகம், கண்ணன் பிறப்பு, கண்ணன் திருப்பள்ளியெழுச்சி, குழலூதற் சிறப்பு, ராஸக்கிரீடை என்றிவைகளுக்குத் தனித் தனி' அருமையான கிருதிகள் அமைந்திருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு உணர்ச்சியுடன் முதனூலுடன் போட்டி போடுவது போலிருக்கிறது. அதாவது, முதனூற் பொருளை உட்கொண்டு நவீனக் கலப்புடன் புத்துயிர் கொண்டு பூர்த்தியான பாவமானது இனிமையுடன் நன்கு வெளிப்படுவதற்கு ஏற்ற ராக தாளங்கள் அமைந்து அலங்காரம் பெற்று, உயர்ந்த நிலையில் ஒளிவிட்டு ஜ்வலிக்கின்றது. அவைகளில் இங்கு கண்ணன் குழலூதற் சிறப்பைக் குறித்துச் சிறிது விளக்குவோம்.

மஹாராஜா அவர்களின் அந்தக்கரணத்திற்குக் கண்ணன் குழலூதற் சிறப்பின்

அமானுஷத்தன்மை அடிக்கடி புலனாகின்றது என்று கூறலாம். அதாவது, அதைக் குறித்து அடிக்கடி பல கிருதிகளில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளிற் சில வருமாறு: 'வேணு கானபர' 'வேணுரவரஸிக' 'முரளீகான ரஸிக' 'முரளிநாதவிவ்ருததரபர' 'முரளி நிநாத ரஸிக' 'முரளீர வேணுதிசன்' 'மது வேணு ரவஸதயா' 'ஸங்க்வணித வேணு கானம்' என்பன பல வாகும்.

ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளது கண்ணபிரான் விஷயமான கீர்த்தனைகளில் 'முரளிவாதன விநோத மோஹனகர,' 'வேணுகான லோலுனி,' 'என்ற தொடக்கத்தன சில பிரயோகங்கள் காணப்படுகின்றன. தீக்ஷிதர் அவர்கள் 'முரளீதர' என்பது போன்ற சில ப்ரயோகத்துடன் ஸ்ரீ வேணுகோபால மூர்த்தியையே தனிக்கிருதியில் துதித்திருக்கிறார்கள். மஹாராஜா அவர்கள் கண்ணன் வேணுகான மகிமையைத் தனிக் கீர்த்தனத்தில் வர்ணித்திருக்கிறார்கள். அடியில் வரும் ஸாஹித்தியமானது மிக ஸரளமான ஸம்ஸ்க்ருதமானதால் அதன் பொருளும் அதன் கீழ் எழுதப் பெற்றுள்ளது.

கீர்த்தனை

ராகம். எதுகுலகாம்போதி: த்ருபுட தாளம்

பல்லவி

மோஹனம் அயிதவ முரளீ கானம் அஹோ
மோதயதி கமிஹ நபுவனே.

அனுபல்லவி.

தேஹ விஜித மார திவ்ய மானுஷ வேஷ.

சரணங்கள்

1. நீர ஜேஸாபி விடபி நிசமநேந தரஸா
சாருகிஸ லயிதோ ஜாயதே நவ இவ
ஸரங்க ததிரபி சாநதோலப கபளா
நீர ஜாக்ஷ பவதி நிப்ருத சித்ர கதேவ (மோ)

2. மத்த வாரண வர மஸ்தக பேதனே
தத்த மதிர பீச தரஸாகில கேஸரி
சித்த கத மோஹநே சிரவிஸ்ம்ருத பாவோத
ஸத்தம நிவஸதி ஸாதுபத தத்ரைவ (மோ)

3. பரம புருஷ த்ருட பாஷாண நிகரோபி
பரிதோத்ரவதி ஹந்த பரிகர்ண நேந
தருணி ஜனமோஹகம் ததிஹ ஸாமஜபீதி—
ஹரமத்ய கிமுசித்ரம் பத்ம நாப முராரே. (மோ)

இதன் பொருள்

பல்லவியின் கருத்து

ஐயா! உமது முரளீ கானமானது, ஆஹா! மயக்கக் கூடியது; இவ்வுலகத்தில் யாரைத்தான் ஆனந்தப்படுத்தாது.

அனுபல்லவி

அழகில் மன்மதனை வென்ற சரீரங் கொண்டாய்! சிறந்த மனித அவதாரம் செய்தாய்!

சரணம்

கமலக் கண்ணு! நீர் வற்றிப் பட்டுப்போன மரங்கூட உமது வேணுகானம் கேட்டதும் அழகான தளிர்களோடு கூடின புத்தம்புதிய மரமாகின்றது. இளம் பசும் புல் மேய்கின்ற மான் கூட்டமும் மேய்கையை நிறுத்தி விட்டு அசைவற்ற சித்திரம் போல் நிற்கின்றது.

2. வது சரணம்

ஈச! மதயானையின் சிறந்த மஸ்தகத்தைப் பிளப்பதில் புத்தி செலுத்திய சிங்கங் கூட உமது முரளீகானங் கேட்டு மன மயக்கத்தால் திடீரென்று அந்நிலைமை மறந்து, ஆஹா! வெகு நேரமாக அவ்விடத்திலேலே ஸாதுவாக நிற்கின்றது. என்ன ஆச்சரியம்!

3. வது சரணம்

பரம புருஷ! கஜேந்திரனது பயத்தைப் போக்கியவனே! பத்மநாப! முராரே! கருங்கற் பாறைக் கூட்டமும் வேணுகானங் கேட்டு நாலா பக்கமும் உருகி ஓடுகின்றது. தவிர பருவமங்கையர் மயக்கமடைகிறார்கள்.

இங்கு கூறப்பட்ட பொருள்களை முறைப்படுத்தினால் கல் உருகுதல், பட்ட மரம் தளிர்த்தல், மான்கள் மேயாமல் அசைவற்று நிற்றல், சிங்கம் கொடுந் தொழில் மறந்து சாந்தமுறல், பருவ மங்கையர் மயங்குதல் என்னும் ஐந்து

விஷயங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒன்றை விட ஒன்று ஆரோகணக் கிரமத்தில் உயர்ந்து சிறப்படைகின்றது. அது வருமாறு.

உயிரற்ற கருங்கல்லைவிட கடுமையானது வேறொன்று மில்லை என்பது.

'வைகலும் நீரிற்கிடப்பினும் கல்லிற்கு மெல்லென்றல் சால அரிதாகும்' என்பது பெரியோரும் ஒப்புக்கொண்ட விஷயம். 'அக் கருங்கல்லும் கானங் கேட்டுக் கரைந்துருகு மானால் ஓரறி உயிரான உயிரற்றுப்பட்டுப் போன மரம் மறுபடியும் தளிர்த்துத் தழைத்தது ஓர் அதிசயமல்ல' என்று புலப்படும்படி வேணுகானப் பெருமை சுருங்கச் சொல்லிச் சிறப்பாக விளங்க வைக்கப் பெற்றிருக்கின்றது. இவ்வாறே பாகவதத்திலும்

நின்று உயர் வரையும் உருக
படு மான்களும் நறிய பசிய
தண் தளிர் தழைய
பட்டபாதபம் தளிர்ப்பவும்

என்று கூறப்பெற்றுள்ளது. ஆனால் பெரியாழ்வார் இவ்வாறின்றி கானங்கேட்ட ஓரறிவுயிரான மரங்களின் குணத்தை,

மரங்கள் நின்று மது தாரைகள் பாயும்
மலர்கள் வீழும், வளர் கொம்புகள் தாழும்,
இரங்கும், கூம்பும், திருமால் நின்ற நின்ற
பக்கம் நோக்கி அவை செய்யும் குணமே

என்று கூறுகிறார்.

அடுத்த படியாக மிருகங்களின் தன்மையைப் பற்றிக் கூறுமிடத்து,

மாவும் மாக்களும் ஐயறிவினவே
மக்கள் தாமே ஆறறி உயிரே

என்றார் தொல்காப்பியனார்.

அதாவது, மிருகங்களையும் பகுத்தறிவற்ற மனிதர்களையும் ஐயறிவு உயிர் வர்க்கத்திற் சேர்த்தனர். மிருகங்களில் மானும் சிங்கமும் குறிப்பிடப் பெற்றிருக்கின்றன. மிருகங்களில் மிகவும் பயந்தது மானைப் போல வேறொன்று மில்லை. தனக்கு எங்கேனும் ஆபத்து வந்து விடுமோ என்று எப்பொழுதும் மருண்டு பார்த்துக் கொண்டிருப்பதுவே அதன் இயற்கைக்குணம். வேய்ங்குழல் நாதம் கேட்டதும் ஒரு பொழுதும் விட்டு நீங்காத இயற்கைக் குணம் நீங்கி தம்மை மறந்து நின்றனவாம். இவ்வாறே பெரியாழ்வாரும்

மருண்டு மானினங்கள் மேய்கை மறந்தன
மேய்ந்த புல்லும் கடைவாயின் வழி சோர
இரண்டு பாடும் துலுங்காப் புடைபெயரா
எழுது சித்திரங்கள் போல நின்றனவே

என்று கூறியிருப்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்க தொன்றாகும்.

மானின் குணத்திற்கு நேர்மாறானது சிங்கத்தின் குணம். அச்சமும், கொண்ட வீரத்தில் குறைவு படுத்தலும், மிருகேந்திரனை சிங்கத்தினிடம் அறவே இல்லாத குணங்களாகும். தவிர, அது யானையின் மத்தகத்தைப் பிளக்கக் குறிவைத்து விட்டால் ஒரு பொழுதும் அக் குறி பிழைப்பதும் இல்லை. வேண்டாமென்று நிறுத்துவதும் இல்லை; திட்டமாக எவ்விதமும் அதை நிறைவேற்றித் தான் அமையும். இதுவே சிங்கத்தின் சிறந்த குணமாகும். இக் குணத்தையே கம்பர்,

கும்பத்தின் கரியைக் கொண்மா
கொன்றென

என்று குறிப்பிட்டனர். இதன் கொடுமையான வீர இயற்கைக் குணமும் புல்லாங்குழல் நாதங் கேட்டதும் அக்ஷணமே மறந்ததுமின்றி மிகவும் ஸாதுவாக அவ்விடத்திலேயே நின்றது என்பது 'மனம், குணம், செய்கை என்னும் மூன்றும் மாறிய உயர்ந்த கற்பனையாகும். பாகவதத்தில்,

மழைபெற மதங்கலுழும் மாவும் அரியேனும்
உழுவையும் உழைக்குலமும் ஒன்றி இன
மென்ன
கழையினொடு நின்ற களிறன்னவனை நோக்கி
எழுது உருவு போன்று உருகிநின்ற இசை
யோர்ந்தே

என்று கூறப் பெற்றிருக்கிறது. அதாவது "கண்ணன் குழலோசை கேட்டு நேர் ஜன்மப் பகையான யானையும் சிங்கமும், புலியும் புல்வாயும், ஒரே இனம் போல கண்ணனைப் பார்த்து உருகி நின்றன" என்று ஸகோதர பாவ உணர்ச்சி கூறப்பெற்றதாகும். கொள்வதி

லேயே குறிப்பு வைத்த கோளரி குழலோசை கேட்டுக் குணம் மாறியது மன்றி வெகு ஸாது வாகவும் அவ்விடத்திலேயே நின்றது என்ற கற்பனை மஹாராஜா அவர்களின் அஸாமா னிய கற்பனு சக்தியை வெளிப்படுத்துகிறதா கும்; ஓரறிவுயிர் நிலைமையும் ஐயறிவுயிர் நிலையும் குறிப்பிட்டதிலிருந்து பறவை முத லிய ஏனைய உயிர் வருக்கங்களைப் பற்றிச் சொல் வது மிகையாகும்.

ஆறறிவுடைய மனிதரைப் பற்றிக் கூறு மிடத்து, 'பருவ மங்கையர் மயங்கு கின்ற றனர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கோப ஸ்திரீகளாகிய பருவ மங்கையர் கண்ணபிரா னிடம் மயங்குவதற்குள்ள பல காரணங்களில் குழலூதலும் ஒன்று என்று தான் கொள்ளல் வேண்டும்: பெரியாழ்வார் இந்த ஜம்பூ த்வீபத் திலுள்ள பெண்பாலார்கள் அனைவரையும் அழைத்து கண்ணன் குழலூதலின் அற்புதத் தைக் கேளுங்கள் என்று கூறும் பாசுரத்தில்,

கோவலர் சிறுமியர் இளங்கொங்கை
குதுகலிப்ப உடலுள விழ்ந்து, எங்கும்
காவலும் கடந்து கயிறு மாலையாகி
வந்து கவிழ்ந்து நின்றனரே

என்றும்,

மடமயில்களோடு மான் பிணைபோல
மங்கைமார்கள் மலர்க் கூந்தல் அவிழ
உடை நெகிழ ஓர் கையால் துகில் பற்றி
ஒல்கியோட ரிக்கணோட நின்றனரே

என்றும் கூறியிருக்கிறார். பாகவத ஆசிரியர் மங்கையர்களைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, 'குழலோசை கேட்டதும்

இடைமடந்தையர்கள் நெரசி இடை
இளங்கொடிவெரசிய
மடவனம் பொருவ, மலர்வன
மடைந்தனர் குழுமி

என்று கூறினர்.

சிலப்பதிகார ஆசிரியர் ஆய்ச்சியர் குரவை யில் கண்ணன் குழலூதலைக் குறிக்குமிடத்து, 'முன்பு கண்ணபிரானுடைய வேணுகானங் கேட்ட தலைவி, ஒத்த அன்புடைய தோழி யரைப்பார்த்து, இப்பொழுது நம்மிடம் மாயன் வருவானாுல் அவன் வாயிலிருந்து

'முல்லையம் தீங்குழல் கேளாமோ தோழீ'
'கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழீ'
'ஆம்பலம் தீங்குழல் கேளாமோ தோழீ'

என்று ஆவலுடன் ஆச்சரியத்தோடும் மீண் டும் எதிர் பார்த்துக் கூறுவது போல இயற்றி யிருக்கிறார். கோபஸ்திரீகளுடைய மனோபீஷ் டத்தை நிறைவேற்றுவதற்கென்றே முக்கிய மாக கிருஷ்ணவதாரம் எடுத்த நோக்கமாத லால், கோபியர்களான பெண்பாலாரின் மயக் கத்தைப்பற்றி விரிவாக எடுத்துக்கூற வேண் டாமென்றே விட்டனர் போலும்!

கண்ணபிரானது பக்தியில் ஈடுபட்டு அவ ரது பல திரு விளையாடல்களையும் குணநிச யங்களையும் பலவாறு புகழ்ந்த கர்ணமிருத ஆசிரியர் அடியில் வருமாறு நன்ருக அனு பவித்துக் கூறுகிறார். அது வருமாறு :—

லோகான் உந்மதயன், ச்ருதிர் முகரயன்,
க்ஷோணீருஹான் ஹர்ஷயன்,
அசலான் வித்ரவயன், ம்ருகான் விவசயன்,
கோப்ருந்தம் ஆநந்தயன்,
கோபான் ஸம்ப்ரமயன், முனீன் முகுளயன்,
ஸப்தஸ்வரான் ஜ்ரும்பயன்,
ஓங்காரார்த்தம் உதீரயன், விஜயதே
வம்சீநிந த: சிசு:

(பொருள்) ''பாலகிருஷ்ணனை பரமாத்மா வின் வேணுகானங் கேட்டு உலகம் ப்ரமித் தது. வேதங்கள் முழங்கின, மரங்கள் தளிர்த் தன, கற்கள் உருகின, மான்கள் தம்மை மறந் தன, பசுக் கூட்டங்கள் களிப்படைந்தன. இடையர் சுருசுருப்புக் கொண்டனர். முனி வர்கள் கண் மூடி ஆனந்தித்தனர். ஸ, ரி, க, ம, ப, த, நி, என்ற ஸப்த ஸ்வரங்கள் வெளி யிற் பரவின. ப்ரணவமந்திரத்திற்குப் பொருள் வெளிப்பட்டது. இவ்வாறு எவ்விதத்திலும் நிகரற்று விளங்கிற்று வேணுகானம்'' என்ப தாகும்.

இப்பொருளையெல்லாம் உண்டாக்கி கிருதி யின் பல்லவி ஸாஹித்யத்தில் 'யாரைத்தான் ஆனந்தப்படுத்தாது' என்று அர்த்தாந்தா நியாஸாலங்காரத்தில் அமைத்த பெருமை அதிசயிக்கத்தக்கதாகும்.

தவிர, மஹாராஜா ஸாஹித்யங்களில் சுமார் முப்பத்தேழு ஹிந்திப் பாடல்கள் இருக்கின்றன. அவைகளில் ஏறக்குறைய ஆறு பாடல்களிலும் கண்ணன் வேணுகான விவரம் குறிப்பிடப்பெற்றுள்ளன. அவைகளின் சுருக்கம் அடியில் வருமாறு :—

“கிரீடத்தின் மேல் மயிற்பீலியணிந்து கழுத்தில் மாலையும் காதில் மகர குண்டலமும் தரித்து, அழகிய சரீரத்துடன் விளங்குகின்ற கண்ணபிரானுடைய வேணுகானங் கேட்டு உலகம் ஆனந்த ஸாகரத்தில் முழுகுகின்றது. யமுனா நதிக்கரையில் அன்புடன் கடம்ப மரமேறிக் களிக்கும் கண்ணன் லதாகிருஹத்தி விருந்து பலவித அனுகரண ஓசையோடு புல்லாங்குழல் ஊதுகின்றான். அழகான காளிந்தீ நதி தீரத்தில் மோஹிக்கச் செய்யும் முரளியை வாசித்துக் கொண்டு ராஸக்ரீடை செய்கிறான். பிடாரன் ஊத்திற்கு மயங்கும் பாம்பு போல பிருந்தாவனத்திலுள்ள பெண்கள் எல்லோரும் உன்மத்தமானார்கள்” என்பதாகும்.

இதிலிருந்து மஹாராஜா அவர்களுக்குக் கண்ணபிரானிடமுள்ள பக்தியும், அவரது லீலாவிநோதங்களிலுள்ள பற்றுதலும், இவைகளுக்காகத் ததும்பிவழியும் கற்பனா சக்தியும் “தசமஸ்கந்த பாகவத கா வே” என்பதனால் பாகவத தசம ஸ்கந்தத்திலுள்ள ப்ரேமையும் விளங்குவதன்றி வேணுகானச் சிறப்பும் அதற்கு ஏனைய நூற்களோடுள்ள ஒற்றுமைப் பெருமையும் மற்றும் விளங்குகின்றன.

(472-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸௌஸங்கதை தங்கள் தோழி என் போலவும் வேடம் பூண்டு, இன்று சந்திரோதயம் ஆகி இரண்டு நாழிகைக்கெல்லாம் நந்தவனத்தில் மாதுளை மரத்தடிக்கு வந்து விடும்படி ஆக்ஞாபித்தான் விதூஷகன். அதே நேரத்திற்கு அங்கு மஹாராஜாவும் அவனும் வருவதாகவும் சொன்னான்'' என்று விவரமாகக் கூறினாள் காஞ்சனமாலா.

"ஆம்! நாம் நினைத்தபடிதான் இருக்கிறது. மஹாராஜாவிற்கு இப்பொழுது அவர் பஞ்ச பூதங்களின் சாக்ஷியாய் மணந்த வாஸவதத்தையின்மேல் அன்பு இல்லை. கேவலம் சேடி வேலை பார்க்கும் ஸாகரிகையை அல்லவா அவர் அன்பு நாடுகிறது!'' என்று பெருமூச்செறிந்தாள் மஹாராணி.

3

ஆதித்தனும் தன் வேலையை முடித்துக் கொண்டு, வந்தனம் செலுத்தியவாறே கொந்தளிக்கும் கடலின் நடுவே மூழ்கினான். மற்றொரு திக்கில் பூரண சந்திரன் உதயமாகி வானப்பந்தலை வெகு அழகாக அலங்கரித்தான்.

பூர்ண சந்திரனின் வெள்ளி மயமான கிரணங்களால் பிரகாசிக்கும் அந்த நந்தவனத்தின் எழில், அங்குள்ள புஷ்பச் செடிகளின் தூய்மையான கந்தம்—இவைகள் இரண்டும் தேவலோகத்தை இகழ்ந்தன. தேவேந்திரன் கூட இவைகளைப் பார்த்து பொறாமைப்பட்டதுண்டாம்!

நந்தவனத்தில் ஒரு மூலையில் இருவர் ஸ்வாரஸ்யமாகப் பேசிக் கொண்டே வந்தனர். பார்ப்பவர்களுடன் மனதைக் கொள்ளை கொள்ளும் அந்த நந்தவனத்தின் அழகுகூட அவர்களுடைய மனதை பரவசப்படுத்தவில்லை! அவ்வளவு இனிய பேச்சு!

அதோ தெரிகிறது, பார்த்தீர்களா, மாதுளை விருக்ஷம் அதனடியில் தான் நிற்பதாகச் சொன்னாள், ஸாகரிகை'' என்று சுட்டிக் காண்பித்துக் கொண்டே வந்தான் விதூஷகன்.

"என் பிரிய ஸாகரிகையை அடைவிக்கப் போகும் உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன், விதூஷகா!'' என்று கூறினார், மாதுளை மரத்தை நோக்கியவாறே. இருவரும் சீக்கிரத்திலேயே மாதுளை விருக்ஷத்தை யடைந்தனர்.

"ஆம்! இதோ நிற்கிறாளே ஸாகரிகை, வேஷம் நன்றாய் பொருந்தியிருக்கிறது. ஸௌஸங்கதை கூட............'' என்று பரபரப்புடன் ஆரம்பித்தான் விதூஷகன்.

ஸாகரிகையின் மீதுள்ள காதலை மஹாராஜா இதுகாறும் உள்ளூரவே வைத்திருந்தார். அவர் உள்ளத்தில் அவள்பால் உள்ள அன்பினால் குமுறிக்கிடந்த அலைகள் அனந்தம். அவைகள் ஸாகரிகையைப் பார்த்த முதற் சந்திப்பிலேயே பீறிட்டுக் கொண்டு வெளியே கிளம்பின.

"பிரியே! ஸாகரிகா! இதோ இங்கு பிரகாசிக்கும் பூர்ணசந்திரனைப் பழிக்கும் உன் வதனத்தை திருப்பக்கூடாதா! நீலோத்பலங்கள் போன்ற உன் கண்களால் ஒரு பார்வை மட்டும் போதுமே எனக்கு..............''என்று மஹாராஜா வர்ணிக்கத் தொடங்கினார்.

"மஹாராணி வாஸவதத்தையின் கொடுமை பொறுக்கமாட்டாமல் தானே உன் மீது அன்பு காட்டுகிறார் எங்கள் எஜமானன்! நான் கூட அதைப்பற்றி உனக்கு சித்திரசாலையில் சொல்லவில்லையா! நீ ஏன் ஒரு வார்த்தைகூடப் பேச மாட்டேன் என்கிறாய்?'' என்று குறுக்கிட்டான் விதூஷகன்.

இவ்வளவு நேரம் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த மஹாராணியும் காஞ்சனமாலாவும் திரும்பினார்கள்.

"மஹாராஜா! ஆம்! நான் ஸாகரிகை தான். அவளிடத்தில் பறி கொடுத்த உங்கள் மனதிற்கு யாரைப் பார்த்தாலும் ஸாகரிகையாகத் தானே தோன்றும்!'' என்றாள் மஹாராணி வாஸவதத்தை கோபமாக.

'ஏ! விதூஷகா! நீயும் சேர்ந்தல்லவா இதில் வேலை செய்திருக்கிறாய். என்ன திண்ணக்கம் உனக்கு..............'' என்று காஞ்சனமாலா பின்பற்றினாள்.

மஹாராஜாவும் விதூஷகனும் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டனர்.

அனுஷ்டானப் பகுதி

விஜய தசமி.

(டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.)

மதச்சம்பிரதாயப் பற்றுள்ளோர் இந்தத் தினத்தை எப்போதும் மறக்கமாட்டார்கள். இதை ஒரு சுபதினமெனக் கொண்டாடுவார்கள். தமிழ் உலகத்தவர்க்கு உபயோகமாகும்படி விஜயதசமி என்னும் விசேஷ தினத்தின் மகிமையைக் குறித்து எழுதுவது உசிதமாகுமென்று இதனை இங்கு எழுதத் துணிந்தோம்.

நவராத்திரி உற்சவத்தில் வரும் ஒவ்வொரு திதிக்கும் ஒவ்வொரு விசேஷமுண்டு. ஒவ்வொன்றையும் வைதிக முறைப்படி எடுத்து எழுதுவதென்றால் முடியாது. இரண்டொரு விசேஷத்தை மட்டும் இப்போது கவனிப்போம். சாதாரணமாய் நவராத்திரியில் வருபவைகளுள் அஷ்டமியைத் துர்க்காஷ்டமி என்றும், நவமியை மஹாநவமி என்றும், தசமியை விஜயதசமி என்றும் உலகத்தவர் கூறுவதைக் காண்கிறோம். கஞ்சமலர்க் கண்ணனும், கார்முகில் வண்ணனும், சர்வலோக சரண்யனுமான ஸ்ரீ கிருஷ்ண பகவானும் நவராத்திரியில் வரும் தேவி பூஜையைப்பற்றி வெகுவாய்ச் சொல்லியிருக்கிறாரென்று புராணாதி கிரந்தங்களிலிருந்து தெரிய வருகிறது. துரியோதனாதியரான கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் குரு க்ஷேத்திரத்தில் போர் நடப்பதற்கு முன்பாக அர்ச்சுனனைப் பார்த்து துர்க்காபூஜை செய்யும்படிச் சொன்னார். அதன் பேரில் அவனும் தேரிலிருந்து கீழிறங்கித் தேவியை (சக்தி) பூஜை செய்து பிரார்த்தித்து அவ்வம்மனின் அனுக்கிரக பலத்தினால் மகாபாரதப் போரில் வெற்றியுங் கொண்டனன். இதன்றி இத்தசமி திதிக்கு விஜயதசமி என்று பெயர் வந்ததற்கு வேறொரு காரணமும் உண்டு.

துரியோதனனோடு சூதாடிச் சகலமும் தோற்றுவிட்ட பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷகாலம் வனவாசமிருந்து பின்னர் ஒரு வருஷம் அஞ்ஞாத வாசம் இருக்கவேண்டி விராட நகரஞ் சேர்ந்தார்கள். அக்காலத்தில் துரியோதனன் ஊரூராய் ஒற்றர்களையனுப்பிப் பாண்டவர் இருக்குமிடத்தை யறிந்து வரும்படிச் சொன்னான். இதற்குள் விராட நகரத்தில் பாண்டவர் இருப்பதாய் துரியோதனன் சூசனையாய் கேள்விப்பட்டுத் தன் படைவீரர்களை அந்நகரத்தின்மீது போர்க் கோலங்கொண்டு செல்லும்படி ஆக்கியாபித்தான். படைகள் கடல் கரை புரண்டு பொங்கினது போலப் புறப்பட்டு வந்து விராட ராஜனது பசுக்களைச்

சிறை பிடித்துச் சென்றன. அதுகாறும் அஞ்ஞாத வாசத்தில் ஒளித்து வைத்திருந்த காண்டீபத்தை நபும்சகனாகிப் பிருகந்நளை என்ற பெயரோடிருந்த அர்ச்சுனன் வன்னி விருக்ஷத்திலிருந்து நவராத்திரி கழிந்த பத்தாம் நாள் எடுத்து நாணேற்றி எதிரிகளின் படை கலங்கப் பாணப்பிரயோகஞ் செய்து விராட ராஜனது பசுக்களை அவர்களிடமிருந்து மீட்டு வெற்றிகொண்டு திரும்பினான். இவ்வாறு அர்ச்சுனன் ஜயவீரங்கொண்டு திரும்பினான் என்பதை குறிப்பிடுவதற்கே இந்த விஜயதசமிக் கொண்டாட்டம் என்பர். அல்லது வெற்றி என்னும் பதத்திற்கு அர்த்தமுள்ள விஜயம் என்ற மறுபெயர் கொண்ட அர்ச்சுனனது பெயரை யொட்டி விஜயதசமி என்றும் சொல்லலாம். இதைவிட ஏற்றதும் பொருந்தியதுமான வேறு காரணப் பெயரைக் காணோம். இந்த அரசர்கள் அரசாண்டபோது போர்க்கோலங் கொண்டு செல்வதற்கும், பட்டாபிஷேகஞ் செய்வதற்கும் இந்த விஜயதசமியைப் பிரதானமாய் அனுஷ்டித்ததை யொப்ப வேந்தர் சிறப்பை விளக்கிப் பாடிய கம்பரும் சிலையெழுபது என்ற நூலில் விஜயதசமி நாட் கோடற் சிறப்பு என்பதாக ஒரு செய்யுளைப் பாடியிருக்கிறார்.

இக்காலத்தும் நம் மக்களுக்கு வித்தியாரம்பஞ் செய்வதற்கும் புதிதாய்ச் சாஸ்திரப் பயிற்சி செய்வதற்கும் உரிய சுபதினமாக இந்த விஜயதசமியைக் கொண்டாடுவது சான்றாகுமல்லவா? பின்னும் இந்த விஜயதசமியிற் சம்பந்தப்பட்ட பிரபாவம் அதிகமுண்டு.

சமீ என்பது ஞானம் என்னும் அக்கினிக்கு அறிகுறியானது. ஒவ்வொரு சிருஷ்டி வர்க்கத்திலும் ஞானாக்கினியை ஸ்தூல வுலகத்திற் குறிப்பிடுவதற்கு ஒவ்வொரு வஸ்து வுண்டு. கந்தமூல வர்க்கத்தில் சமீமரமே அந்த அடையாளமென்று புராணங்களிற் கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீ மஹாவிஷ்ணு பத்மாவதியை மணந்த காலத்து வந்திருந்த விருந்தினர்கள் தம் தெய்வமாகிய மஹாவிஷ்ணுவுக்கு அர்ப்பிதஞ் செய்யாது தாம் புசியோம் என்றனர். விவாக காலத்தில் வதூவரர்கள் மாங்கல்ய தாரணமாகுமுன் அன்னம் புசிக்கலாகாதென்று விதி ஏற்பட்டிருப்பதால் இவ்விடத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே மாப்பிள்ளையானமைபற்றி அவர் தம் குலதேவதையான சமீமரத்திற்கு நிவேதனம் செய்துவிட்டு நீங்கள் புசியுங்கள் என்றார். மஹாவிஷ்ணுவே இம்மரத்தைத் தன் குலதேவதை என்றால் அதன் மகிமை இத்தன்மையதென்பது நாம் கூறாமலே விளங்கும். அதர்வண வேதத்தைச் சேர்ந்த கோபத பிராஹ்மணத்திலும் தைத்யப் பிராஹ்மணம் தைத்ரீய ஆரண்யகம் பவிஷ்ய புராணம் ஆகிய இவைகளில் சமீபூஜைக்கு வேண்டிய விவரங்கள் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட பெருமை மிகுந்துள்ள விஜயதசமியைச் செந்தமிழ் நாட்டு வியாபாரிகளும் தொழில் ஆரம்பிக்கக் கருதியுள்ள மற்றோரும் அறிந்து சுபகரமான இந்த தினத்திலேயே தாம் செய்யக் கருதிய காரியத்தை யெடுக்க முயலுவார்கள். இத்தினத்தில் ஆரம்பிக்கப்படும் காரியம் வெகு சிலாக்கியமாய் விளங்குவதோடு அதனால் வரக்கூடிய நற்பயன்களும் பலவுள.

புதிய யோகம்.

('சாதகன்' எழுதியது.)

முன்னுரை :—யோகத்தில் புது முறைகள் இல்லை என்பது பெரும்பாலும் உண்மைதான். ஏன், கலைகளிலும் மொழிகளிலும் முதிய நவீன முறைகள் மாறி மாறித் தோன்றினும், வாழ்க்கையைக் குறித்த அடிப்படையான உட்கருத்துக்கள் வடிவழிவதில்லை என்று யாவரும் ஒத்துக் கொள்வர். கிறிஸ்து முனி கூறிய உபதேசத்தின் உயிர் நிலையை இன்னும் மனிதரால் அறிய இயலவில்லை. ஸ்ரீ கிருஷ்ணபகவான் அருளிய கீதையில் விஸ்தரிக்கப்பட்ட யோகத்தின் நயங்களைத் தான் இங்கு தொடுத்துக் கூறுவது எனினும், 'புதிய' என்று பெயர் பூண்டது கேவலம் பிரஸ்தாபம் பற்றி யன்று. பிற்காலத்தில் யோக சாஸ்திரங்களும் தத்துவ சாஸ்திரங்களும் முது முறையின் நுட்பங்களையும் நயங்களையும் மறந்து, வாழ்வு வேறு, யோகம் வேறு, தியானம் வேறு, செயல் வேறென்ற அனர்த்தமான பிரிவுகளை ஏற்படுத்தி விட்டன. கேவலம் சைதன்ய ஸ்வரூபமாயிருத்தல் (அதாவது, ஸமாதி) ஒன்றென்றும் வியவஹாரங்களில் பிரவர்த்தித்தல் வேறென்றும், ஸம்பூர்ண நிலையையறியாது, நித்தியத்திற்கும் நிகழ் செயலிற்கும் பேதம் விளைவித்தன. இதைப்பற்றியே 'புதுமை' என்ற அடைமொழி. இங்கு தொகுத்த கருத்துக்கள் பல நூல்களிலிருந்தும் ஸ்வயமான அநுபவங்களிலிருந்தும், வாழ்க்கையைக் குறித்த உள் நோக்கத்திலிருந்தும் (Introspection) எடுக்கப்பட்டிருப்பதால், இவற்றின் பொறுப்பு ஆசிரியரையே சார்ந்தது. எனினும், இம் முறையில் ஆழ்ந்து செல்ல விரும்புவோர்க்கு தற்காலம் உயிர் பெற்று விளங்கும் மூவரின் நூல்களைக் குறிப்போம் :

1. ஸ்ரீ அரவிந்தர் இயற்றிய "தெய்விக வாழ்வு"—முதல் பிரிவே பிரசுரமாயிருக்கின்றது. 2. ஸ்ரீ ஜே. கிருஷ்ணமூர்த்தியின் உபதேசங்களும், வினாவிடை விஸ்தாரமும். 3. ஸ்ரீரமண மஹர்ஷிகளின் "நூல் திரட்டு."

1. இனித் தன்னியல்பான யோகம் கூறப்படும்.

2. இதற்கு அதிகாரி, இவ்வுடம்பில் வழுவாத களிப்புடனும், எங்கும் நிலை கொள்ளும் நீர் போன்ற சுயேச்சையுடனும், நிர்ப்பயமாகவும் வாழ விரும்புவோன்; குரு, அவனறிவு; சாதனம், கருத்து முற்றிய வாழ்க்கை.

3. இதற்குக் காலதேச விகல்பம் இல்லை. இளமை, மூப்பு என்ற அதிகார பேதமில்லை. குலம், மொழி என்ற குண வேறுபாடுகள் இல்லை. ஆண், பெண் என்ற லிங்கபேதம் இல்லை. ஆஸன, பிராணாயம நியமங்கள் இல்லை. பகுத்தறிவுப் பயிற்சியும் இல்லை. இந்த யோகம் தன்னியல்பானதால் மிக எளிது, நேர்மையானது; நாம் தன்னியல்பினின்றும் தவறி, அதிநுட்பமான மித்யாலோகங்களில் அஹங்கார வடிவமாகச் சஞ்சரிப்பதால், மிகக் கடினமானது. அநுஷ்டானம், கத்தியின் கூர்ப்பாகத்தில் நடப்பது போன்றது.

4. அநுஷ்டானம், சிசு ஸ்தன்ய ஹாரத்தை விரும்பிக் கொள்வது போல், இயல்பானது, போஷிப்பது.

5. இதற்கு இதுவே பலன்.

6. இந்த யோகத்தில் நிற்பவன், சாம்பரால் மூடப்பட்ட அக்னிபோல் அறியப்படமாட்டான். அவன் ஸாக்ஷி, ஸர்வ மங்களன், நித்ய திருப்தன். லீலையாகவே பின்ன அறிவினனாகவும் நாடுபவனாகவும் காணப்படுகிறான்.

முதற் கட்டம்.

1. வினையின் இயலை அறிய வேண்டும்.

2. வினையென்பது மனோவாக்குக் காயங்களின் இடைவிடாத பிரவிர்த்தி.

3. அலையினின்றும் அலை யெழுவது போல், வினையின் சலனம் நிகழ்கின்றது; இந்த நிகழ்ச்சியின் அறிவே காலம்.

4. அபக்குவம் காரணம்: வினை யென்பது பயன். வினை காரணம்: அபக்குவம் (பந்தம்)

விளைவு. இரண்டும் விதைவிருக்ஷங்களைப் போல அனாதியான காரணகாரிய ஸம்பந்தத்தில் நிகழ்வன.

5. அபக்குவத்தின் மூலவடிவு "நான்" என்ற பின்ன உணர்ச்சி.

6. வினையினின்றும் விடுதலை பெற வினையினால் இயலாது. பந்தனாகிய "நான்," ஜகத்தினின்றும் வேறுபட்டு அனுபவங்களைப் புஜிப்பதாக அந்தக் கேவலம் போத மாத்திரத்தில் எண்ணுவதால், நானே என்னை விடுவித்துக் கொள்ள முடியாது.

7. என்னின்று ஸகலமும் எழுவதால், பிறராலும் என்னைக் கட்டவிழ்க்க முடியாது.

8. ஆகையால் வினையினின்று தப்பும் வழியில்லையெனின், ஓரளவு இது உண்மைதான். இதையறிந்தவர், செயல்களால் விடுதலை நாடார்.

9. வினையற்று இருக்கவும் முடியாது. இது பகவத்கீதையில்—"நஹிகஸ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத் யகர்மகிருத்" என்ற ச்லோகத்தால் விளக்கியுள்ளது. செயலற்றிருக்க ஒருவன் பிரயத்னம் செய்தால், அந்த முயற்சியே பந்தமாக முடியும்.

10. வினைக்கு முடிவுண்டு.

11. இந்த இடையறாத பந்தப் பிரவிர்த்தியை அதி நுட்பமாக அறிவதால், அறிவோன் நிகழ்ச்சியினின்றும் வேறுபடுகிறான். அனாதியான அவிவேகத்தால் தான் எண்ணுவதும், புரிவதும், மொழிவதும், பல வகையில் சேஷ்டிப்பதும் தன்னைக் கட்டுப் படுத்திப் பின்பும் வினையில் ஆழ்த்துவதை அறிகிறான்.

12. ஒன்றன்பின் ஒன்றாக பந்தஹேதுவான மாயாஸ்வரூபங்களை ஆராய்கிறான். இவர்தான் அஸுரர் எனப்படுவர். இவர்தான் தேவரும். அஸுரரை வென்றழித்தபின் தேவரை வென்றழிக்க வேண்டும்.

13. தன்னைச் சாக்ஷிமாத்திரத்தில் நிறுத்தப் பயிலுதல் வினைப் முடியும். தன்னைக் கர்த்தனாகவும் பந்தனாகவும் உணர்ச்சியிலும் நினைப்பிலும் ஒன்றுபடச் சிறிதும் எச்சமில்லாமல் அறிய வேண்டும்.

14. அப்போது பந்தஹேதுக்களின் மறைவான சக்திகள் காணப்படும். அவை முற்றும் அறியப்படுவதால் நாசமடையும். குணங்களும் காலத்தின் மரண தண்டனைக்கு உட்பட்டிருப்பதை இந்த யோகி அறிகிறான்.

15. இந்த ஆராய்ச்சி, வினைமுற்றிய பின் தியானம் செய்வதன்று. அது சவத்தை அறுத்து உயிர் நாடிகளை ஆராய்தல் போன்றதே. இது என்றும், எப்போதும் கருத்து முற்ற வாழ்வது. ஆசையிலும், நிராசையிலும், தொடர்வதிலும், விடுவதிலும், விஷயங்களைப் பற்றுவதிலும் மனமடக்குவதிலும், அறிவோனும் ஈடுபடுபவனும் ஒன்றாகச் (சின்னமின்றி) அறிய வேண்டும்.

16. அப்போது வினைத்தூய்மையால் சுகதுக்கங்களின் ஏகமான ரஸமே மனதைக் கவரக்கவர, பயங்கள் நழுவும்.

பெண்டிர் பகுதி.

மங்கையர் தொண்டு.

(டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.)

மங்கையரும் ஆடவரைப்போல் அறிவு, ஞானம், ஆழ்ந்த யோசனை, கற்குந்திறன், அநுபவம் இவை அனைத்தும் உடையோரென்பதை மறுக்க எவரும் துணியார். இஃதிங்ஙனம் பிரத்தியட்சமாக 'உள்ளங்கை நெல்லிக் கனி போல்' இலங்கிடும். ஒரு சிலர் 'பெண்கள் பின் புத்தியுடையோர்—அவர்கள் யாது சாதிக்கக்கூடும்' எனப் பேசிக்கொள்கின்றனர். மற்றுஞ் சிலர் மாதரது நன்னய எண்ணங்களை ஊக்கி அன்னாரை உயர்த்த விரும்பாது பின்னிடச் செய்கின்றனர்.

"உலகில் உபயோகமற்றோர் ஒருவருமிலர்" என அறிஞர் கூறியிருக்க, இல்லறத்திற்கு மங்காத் தீபமாகும் மங்கையர் எக்காரணத்தால் பூவுலகின் ஒவ்வோர் கோணங்களில் தன்னயமுடையோர்போல ஏன் வதிதல்வேண்டும்? தம் கணவனும் தம் மக்களுந் தவிர்ந்த வேறெதுவும் தமக்கு இன்பம் பயலாதது போலவும், தம் சமூகம் எப்பாடு படினும் தேசாபிமானம், பாஷாபிமானம் இல்லாதார் போலும் ஏனோ சீவித்தல் வேண்டும்?

'அறம் அகத்தில் ஆரம்பிக்கின்றது' எனப் புலவர் கூறினாரன்றி, அஃது அங்ஙனே முடிவடைதல் வேண்டுமென்று கூறினாரில்லை. ஆகலின், பெண்கள் தம் மனத்தில் எழும்பும் சிறிய பெரிய எண்ணங்களை விருத்தி செய்து தம் மனையில் மட்டுமன்று, உலகெலாம் அவ்வெண்ணங்கள் பரவப் பிரயாசித்தல் நன்று. எவரேனும் 'உயரிய எண்ணங்களை நடைமுறையில் கையாடின் அவை பெருஞ் செயல்களாக மாறிவிடும்' என ஒரு பெரியார் கூறியுள்ளார். 'பிறரது பாரத்தைச் சுமக்காவிடினும் இலகுவாக்குதலே பெரிய உபகாரமாகும். எம் தகுதியின்படி. பிறர்க்கு உதவிடலே எங் கடனும்' என்ற மூதுரைகளை யோர்ந்து, அவரவர் தத்தம் முயற்சிக்கேற்ப உதவிபுரிதல் தர்மமாகும்.

மேலைத் தேசம் நாளாந்தம் நிமிடந்தோறும் அறிவில் நூதனமான காரியங்களில் பெருகி வருவதன் காரணமென்ன? தாமறிந்தவற்றைத் தம்முள், தம் குடும்பத்துள், தம் சாதியுள், தம் தேசத்துள் மறைத்துவைக்கப் பிரயாசைப்படாது எழுத வாசிக்கத் தெரிந்தோர் அனைவரும் 'எம்மைப்போல் நீவிரும் ஆகுமின்' என பறையறைவிப்பது போல் செய்திடுவர். ஆயின் நாமோ, நாம் அறிந்தவற்றைப் பிறருக்குப் பிரயோசனப்படுத்தாது வீணில் காலங் கழித்துக்கொண்டிருக்கிறோம். மங்கையர்க்கு உரித்தான தொண்டைச் செய்யவும் கல்வியைக் கற்கவும் விடுகிறோமில்லை. இயற்கையிலேயே சில பெண்களுக்கு அவர்கள் கடமையில் கருத்துமில்லை. அதோடு பெண்களுக்கு அடுப்பங்கரை ஞானம்' மாத்திரம் இருந்தால் போதும், வேறு அவர்களுக்குச் செய்யவும் இயலாது என்று நினைப்பவர்களும் உண்டு. இது எத்துணை கீழ்மையான நோக்கம்! உலகிலே எல்லாவற்றையுமுணர்ந்தோர் இலர். ஆகவே, 'ஒருவரும் யான் முழுதும் அறிந்துள்ளேன்' எனப் பெருமை பாராட்ட முடியாது. கொல்லனுடைய பெரிய சம்மட்டியில் உடைக்க முடியாத பெருங்கற்களை சிறிய உளியினால் உடைத்துவிடக் கூடுமல்லவா? அதேபோல், ஞானிகள் அறியாத பல காரியங்களை கல்வியறிவுடைய பெண்களும் செய்தற் கூடும்.

ஆதலின், உருவத்திலும் ஊனிலும் குறைந்தோரெனப் பலரால் பெண்கள் மதிப்பிடப்பட்டாலும், எமது சகோதரிகள் அரிய பெரிய செயல்களை இல்லத்தின்கண் மாத்திரமன்று, தமிழுலகெலாஞ் செய்ய, மனம் வாக்குச் செய்கைகளில் ஒருமுகப்படல் அத்தியாவசியம். அதற்குரிய கல்வியும் அறிவும் அநுபவமும் எமது சகோதரிகளுக்கு மேன்மேலும் பெருகுவதாக!



மொழிபெயர்ப்புப் பகுதி.

கதைக் கடல்.

மதனமஞ்ஜுகா என்ற ஆறாவது லம்பகம்.

நான்காம் அலை.

(டாக்டர் வே. ராகவன்.)

ஸோமப்ரபை தன்னிருப்பிடம் சென்றதும், அவளிடமுள்ள நட்பினால் அவள் சென்ற வழியைப் பார்த்துக்கொண்டு தெருவை நோக்கிய மாளிகையொன்றின் மேல் களிங்கஸேனை நின்றுகொண்டிருந்தாள். தற்செயலாய் அவ்வழியே ஆகாயமார்க்கமாய் வந்த யுவாவான மதனவேகன் என்ற வித்தியாதரத் தலைவனொருவன் அவளை நெருங்கியவனாய் நோக்கினான். மன்மதன் என்ற இந்திரஜாலிகன் கையிலுள்ள மயில் தோகை போன்றவளாயும் மூவுலகையும் மயக்குபவளாயுமுள்ள அக் களிங்கஸேனையைக் கண்டவுடனேயே மதனவேகன் மனக்கலக்கங் கொண்டான். "போதும் வித்தியாதரஸ்த்ரீகள்! அப்ஸரஸுகளைப்பற்றி என்ன பேச்சு வேண்டியிருக்கிறது! மானிடஸ்த்ரீயொருத்திக்கு இப்படிப்பட்ட வியக்கத்தக்கதான ரூபமிருக்கிறதே! இவள் எனக்கு மனைவியாய் ஆகாவிட்டால், நான் வாழ்ந்து என்ன பயன்? ஆனால் வித்தியாதரனாயிருந்துகொண்டு மானிட ஸ்த்ரீயோடு எப்படிச் சேருவேன்?" இப்படி யோஜித்தவனாய் மதனவேகன் 'ப்ரக்ஞப்தி' என்ற வித்தையைத் தியானஞ்செய்ய, அவ்வித்தை உருவெடுத்துக்கொண்டு அவன் முன் தோன்றி பின்வருமாறு அவனிடம் சொல்லிற்று :

"அழகா! உண்மையில் இக் களிங்கஸேனை மானிட ஸ்த்ரீயல்ல; சாபத்தால் பூவுலகில் நழுவி விழுந்த அப்ஸரஸ் களிங்கதத்த மஹாராஜனின் அரண்மனையில் (இப்படிப்) பிறந்திருக்கிறாள்." வித்தை இப்படித் தெரிவித்ததும் வித்தியாதரன் ஸந்தோஷமடைந்தவனாய் தன் இருப்பிடம் சென்று, அங்கு மற்றவையிலிருந்து மனம் திரும்பி, காதலால் கடையப்பட்டவனாய் யோஜித்தான் : "நான் இவளை பலாத்காரமாய் அபஹரிப்பது எனக்குத் தகாது; 'ஸ்த்ரீகளை நிர்பந்தித்து அனுபவித்தால் நான் மரணமடைவேன்' என்று எனக்கு சாபம் இரு

க்கிறது. ஆகையால் இவளையடைய நான் சிவனைக் குறித்துத் தவஞ் செய்யவேண்டும்; நன்மைகள் தவத்தினாலாகவேண்டியவையாயிருக்கின்றன; வேறு வழியில்லை.'' இப்படி யோஜித்து மறுநாளே ரிஷபமலையையடைந்து ஒரு காலில் நின்றுகொண்டு உணவின்றி தவம் செய்தான். அவனது கடுந்தவத்தால் சீக்கிரமே திருப்தியடைந்து அவனுக்குக் காட்சியளித்த சிவபெருமான் பின்வருமாறு அந்த மதனவேகனிடம் உரைத்தார்: ''இந்த களிங்கஸேனையென்ற கன்னிகை பூமியிலே தன் அழகினால் புகழ் பெற்றிருக்கிறாள்; இவளழகிற்கு நிகரான கணவனில்லை; வத்ஸராஜனான உதயனன் ஒருவனே தக்கவனாயிருக்கிறான்; அவனும் இவளையடைய விரும்பினவனாயிருந்தும், (மஹாராணி) வாஸவதத்தையிடமிருக்கும் ஐயத்தினால் வெளிப்படையாய் இக்களிங்கஸேனையை வேண்டிக் கேட்கவில்லை. ராஜகுமாரி களிங்கஸேனையும் ஸோமப்பிரபையினிடமிருந்து வத்ஸராஜன் உதயனனைப்பற்றிக் கேள்விப்பட்டு, அழகில் ஆசைகொண்டவளாய், அவனைத் தானே வரிக்க ஆவல்கொண்டிருக்கிறாள். இவ்விருவருக்கும் மணம் நடக்கும் முன் காலதாமதத்தை பொறுக்காத உதயனனேபோல் நீ அவன் வேடத்தைப்பூண்டு அவளையண்டி காந்தர்வமுறையில் மனைவியாய்ச் செய்துகொள். இவ்வகையில் உனக்கு இவ்வழகி களிங்கஸேனை கிடைப்பாள்.'' இப்படி சிவபெருமானால் கட்டளையிடப்பட்ட மதனவேகன் கடவுளை வணங்கி காலகூடமலையடியிலுள்ள தன் வீட்டிற்குப் போனான்.

இதனிடையில் தக்ஷசிலா நகரத்தில், ஒவ்வொரு இரவும் தன் வீட்டிற்குச் சென்றுகொண்டும், காலைகளில் வானவழியாய்போகும் விமான யந்திரத்தில் வந்துகொண்டுமிருக்கும் ஸோமப்ரபையுடன் விளையாடிக்கொண்டிருக்கையில் ஒரு ஸமயம் ஏகாந்தத்தில் அவளிடம் களிங்கஸேனை சொன்னாள்: ''தோழி! நான் சொல்லப்போவதை ஒருவரிடமும் சொல்லக்கூடாது. எனக்கு மணம் வரப்போகிறது என்று அறிகிறேன். எப்படித் தெரியும் என்று கேட்கிறாயோ, கேள்: என்னை வேண்டிப் பல அரசர்கள் தூதர்களை இங்கு அனுப்பினார்கள்; என் தந்தை அவர்களை ஸத்கரித்து அப்படியே திருப்பியனுப்பி விட்டார். ஆனால் சிராவஸ்தியில் பிரஸேனஜித் என்று ஆண்டுகொண்டிருக்கிறாரே, அவ்வரசரின் தூதனைமட்டும் ஆதரவுடன் உபசரித்தார்; தாயுடனும் இதைப் பற்றிக் கூடிப் பேசினார்; ஆகையால் அவ்வரசரே எனக்காகக் கோரப்பட்டவர் என்று நினைக்கிறேன்; அவர் நற்குலத்தவர் என்று தந்தையும் தாயும் அவரை ஏற்றனர். குருபாண்டவர்களுக்குப் பாட்டிகளாகிய அம்பிகை, அம்பாலிகைகள் தோன்றிய குலத்தில் அந்த பிரஸேனஜித் தோன்றியவர். ஆகையால், தோழி, சிராவஸ்தி நகரத்தில் அப்பிரஸேனஜித்தென்ற அரசருக்கு இப்பொழுது என்னைத் தகப்பனார் கொடுக்கப்போவதென்று நிச்சயமாயிருக்கிறது.'' இதைக் களிங்கஸேனையிடம் கேட்டு, ஸோமப்பிரபை துயரமடைந்து. கண்ணீர்த் துளிகள் அவளுக்கு மற்றொரு முத்தாஹாரம் போட, அழுதாள். ''ஏன் அழுகிறாய்?'' என்று தோழி வினவ, உலகம் முழுதும் பாக்கியில்லாமல் பார்த்திருக்கும் அம்மயாஸுரன் புதல்வி ஸோமப்பிரபை சொன்னாள்: ''வரனுக்கு இருக்கவேண்டியதாக நாம் தேடும் இளமை, அழகு, நற்பிறப்பு, நன் நடத்தை, செல்வம் என்றவற்றில், இளமை முதன்மைபட்டது; குலம் முதலியன அதற்கடுத்தபடிதான். பிரஸேனஜித்துக்கு வயது ஆகிவிட்டது; அவனை நான் பார்த்திருக்கிறேன். வாடிப்போன ஜாதிப்பூவின் ஜாதியினைப்போல் அவன் குலத்தாலாவதென்ன? பனிபோல் (நரையால்) வெளுத்திருக்கும் அவனுடன் நீ கூடினால், உன் தாமரை முகம் சுருங்கிப்போக, ஹேமந்தருதுவோடு கூடிய தாமரைக் கொடிபோல பரிதாபகரமான நிலைமையை அடைவாய். அதனால்தான் எனக்குத் துயர் ஏற்பட்டது; நன்மையையடையப் போகிறவளே! வத்ஸராஜனான உதயனன் உனக்குக் கணவனானால் எனக்கு ஸந்தோஷமாயிருக்கும். உருவிலாவது, அழகிலாவது, நற்பிறப்பிலாவது, வீரத்திலாவது, செழிப்பிலாவது அவனுக்கு நிகரான மற்றொரு அரசன் இப்பூவுலகில் இல்லை. நுண்ணிடையாளே! அழகில் உனக்கொப்பான அவனோடு சேர்ந்தால் உன்னிடம் பிரமதேவன் ஆக்கிய இவ்வழகு பயன்பட்டதாகும்.'' இப்படிப்பட்ட ஸோமப்பிரபையின் சொற்கள் யந்திரங்கள்போல் தூண்ட

களிங்கஸேனையின் மனது வத்ஸராஜனிடம் சென்றது. அதன்மேல் ராஜகுமாரி மயன் புதல்வியை வினவினாள்: "தோழி! அந்த வத்ஸராஜன் எப்படி இருப்பார்? அவர் எந்த வம்சத்தில் உதித்தவர்? அவருக்கு உதயனன் என்று எப்படிப் பெயர் வந்தது? இவற்றை நீ சொல்லு," என்று. அதன்மேல் ஸோமப்பிரபை சொன்னாள்:

"தோழி! உனக்குச் சொல்லுகிறேன், கேள். பூமிக்கே அணிபோல் வத்ஸம் என்ற தேசம் ஒன்று இருக்கிறது; அங்கு இரண்டாவது அமராவதியோவென கௌசாம்பியென்ற நகரமிருக்கிறது. அங்கிருந்துகொண்டு அந்த வத்ஸேசுவரன் ஆண்டுகொண்டிருக்கிறான். அவன் எந்த வம்சத்தில் உதித்தானோ அந்த வம்சத்தைப்பற்றியும் சொல்லுகிறேன், கேள். பாண்டவர்களில் ஒருவனான அர்ஜுனனுக்கு அபிமன்யுவென்று சக்ரவ்யூஹத்தைப் பிளந்துகொண்டு குருப்படையை ஒழித்த மைந்தன் இருந்தானல்லவா, அவனுக்குப் பிறகு பரீக்ஷித் பாரதவம்சத்தைத் தாங்கினான்; அவனுக்குப் பிறகு பாம்பு வேள்வி நடத்திய ஜனமேஜயன் வந்தான்; அவனுக்குப் பிறகு சதானீகன்; அவன் கௌசாம்பியிலிருந்துவந்து தேவருக்கும் அஸுரருக்கும் ஏற்பட்ட போரில் அஸுரரைக் கொன்று தானும் மாண்டான். அவனுக்குப் பிறகு உலகத்தால் போற்றப்பட்டவனாய், இந்திரன் அனுப்பிய விமானரதத்தில் வானில் போய் வந்துகொண்டிருந்த ஸஹஸ்ரானீகன் ராஜாவாயிருந்தான். அந்த ஸஹஸ்ரானீகனுக்கு மஹிஷியான மிருகாவதியிடம் இந்த உதயன ராஜன் பிறந்தவன்; சந்திரவம்சத்திற்கே அலங்காரமானவன்; பார்ப்பவர் கண்களுக்கு விழாவாயிருப்பவன். அவனுக்கு அப்பெயர் வந்த காரணத்தையும் கேள்: இந்த நற்பிறப்புள்ள உதயன ராஜனின் தாய் மிருகாவதி கர்ப்பிணியாயிருக்கும்போது ரத்தத்தில் ஸ்நானஞ் செய்யவேண்டும் என்ற அவாக்கொண்டாள். மஹாராஜாவோ ரத்தஸ்நானம் தீயதென்று அஞ்சி செம்பஞ்சிக் குழம்பு முதலிய சாறுகள் பிழியப்பெற்ற வாவியில் ஸ்நானஞ் செய்து வைத்தான்; அப்படி ராணி ஸ்நானஞ் செய்துகொண்டிருக்கையில் கருடனுடைய ஜாதியில் பிறந்த பக்ஷியொன்று மாம்ஸமென்றெண்ணி வந்து அவளைக் கொத்திக்கொண்டு போய் விதிவசத்தால் அவளை உயிருடனேயே உதயமலையில் போட்டுவிட்டது. அங்கு ஜமதக்னியென்ற ரிஷி அவளைக் கண்டு, தேற்றி, மறுபடியும் கணவனுடன் கூடலாமென்று சொல்ல, ராணி அவருடைய ஆச்சிரமத்திலேயே தங்கினாள். (முன்) அந்த ஸஹஸ்ரானீகன் திலோத்தமையை நிராகரித்ததால் கோபம் கொண்ட அத் திலோத்தமை யிடமிருந்து அதுபோல் கொஞ்ச காலம் ராணியை விட்டுப் பிரிந்திருக்கவேண்டுமென்கிற சாபம் அரசனுக்கிருந்தது. நாளடைவில் அந்த உதயமலையிலேயே ஜமதக்னியின் ஆச்சிரமத்தில் ஆகாயம் புது மதியை பெற்றெடுப்பது போல் ராணி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். "இதோ பிறந்திருப்பது சக்கிரவர்த்தியான உதயன மஹாராஜன்; எல்லா வித்தியாதாருக்கும் தலைவனாய் அவனுக்குப் பிள்ளையொருவன் பிறப்பான்" என்று அப்பொழுது ஒரு வானொலி மொழிந்தது. தேவதைகள் அக்குழந்தைக்கு உதயகிரியில் பிறந்ததால் உதயனன் என்று பெயரிட்டனர். (இந்திரஸாரதி) மாதலியால் தெரிவிக்கப்பட்டு சாபத்தின் முடிவை எதிர்பார்த்தவனாக ஸஹஸ்ரானீக ராஜனும் மிருகாவதி யில்லாமல் காலத்தை சிரமப்பட்டுக் கழித்து வந்தான். சாபம் முடிந்ததும் தற்செயலாய் உதயமலையிலிருந்து வந்த வேடனொருவனிடமிருந்து அடையாளத்தைக் கேட்டுக்கொண்டு அச்சமயம் எழுந்த அசரீரியொன்றினால் விஷயங்களைத் தெரிவிக்கப்பட்டு, அவ்வேடனை முன்னிட்டுக்கொண்டே ஸஹஸ்ரானீகன் உதயமலைக்கு வந்தான். அங்கு வேண்டியதை அடைவதுபோல் மிருகாவதியை அடைந்தான்; மனோராஜ்யத்தைப் பெறுவது போல் மைந்தன் உதயனனையும் அடைந்தான். அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு கௌசாம்பிக்கு வந்து, மைந்தனின் குணமேன்மையால் திருப்தி யடைந்தவனாய் அவ்வுதயனனை யுவராஜனாய் பட்டாபிஷேகம் செய்தான். தன் மந்திரிகளின் புதல்வர்களான யௌகந்தராயணன் முதலியவர்களை உதயனனுக்குத் தோழர்களாய் அளித்தான். உதயனன் அரச பாரத்தை ஏற்க, ஸஹஸ்ரானீகன் தன் மனைவியுடன் வெகு காலம் இன்பங்களை யனுபவித்து வந்தான். நாளடைவில் மைந்தன் உதயனனையே பட்டத்தில் வைத்து

விட்டு, வயது முதிர்ந்த ஸஹஸ்ரானீகன் தன் மனைவி மந்திரிகளுடன் மஹாப்பிரஸ்தானஞ் சென்றான். இப்படியாகத் தன் தந்தையரின் ராஜ்யத்தைப் பெற்று, பூமி முழுவதும் வென்று, யௌகந்தராயணன் உதவியைக்கொண்டு உதயனன் உலகை ஆண்டு வருகிறான்.”

இப்படி சுருக்கமாய் (உதயனனின்) கதையைச் சொல்லிவிட்டு, ரஹஸ்யமாய் தோழி கலிங்கஸேனையிடம் ஸோமப்பிரபை மறுபடியும் சொன்னாள்: “அழகிய அங்கங்களோடு கூடியவளே! வத்ஸதேசத்தின் அரசனானதால் அவன் வத்ஸராஜன்; பாண்டவரின் மரபில் வந்ததால் சந்திரவம்சத்தவன்; உதயகிரியில் தோன்றியதால் உதயனன் என்று பெயரால் அழைக்கப் படுபவன். இப் பிரபஞ்சத்தில் அழகில் மன்மதனும் அவனுக்கு ஒப்பில்லை. மூவுலகிற்கு மழகியே! அவன் ஒருவனே உனக்கு நிகரான கணவன்! அழகில் ஆசை கொண்ட அவ்வுதயனன் உனக்காக உன்னால் வேண்டப்படவேண்டும் என்று நிச்சயம் விரும்புகிறேன். ஆனால், தோழி, அவனுக்குச் சண்ட மஹாஸேன மஹாராஜனின் புதல்வி வாஸவதத்தை என்று முதல் பட்டமஹிஷி இருக்கிறாள். அவனிடம் அதிகமாய் அன்பு கொண்டு உஷை, சகுந்தலை முதலியவரும் வெட்கிக்குமாறு அந்த வாஸவதத்தை தன் உற்றாரை விட்டு தானே அவ்வுதயனனை வரித்தாள். அவளுக்கு உதயனனிடம் நரவாஹனதத்தன் என்ற பிள்ளை பிறந்தது; தேவர்கள் அம்மைந்தன் வித்யாதர சக்ரவர்த்தியாவான் என்று சொல்லியிருக்கின்றனர். அந்த வாஸவதத்தையிடம் பயந்தவனாய் வத்ஸராஜன் உன்னை வேண்ட முன் வரவில்லை; நான், அவளைப் பார்த்திருக்கிறேன்; அழகில் உன்னுடன் அவள் போட்டிபோட முடியாது.”

இவ்வாறு சொன்னதோழி ஸோமப்பிரபையிடம் கேட்டு வத்ஸராஜனிடம் அன்புகொண்ட கலிங்கஸேனை சொன்னாள்: “நீ சொல்வதை உணர்கிறேன்; ஆனால் தந்தை தாய்க்குக் கட்டுப் பட்டிருக்கும்நான் என்ன செய்ய முடியும்? எல்லாமறிந்து எல்லாம் செய்யவல்ல நீ ஒருத்தியே எனக்கு இக் காரியத்தில் கதி.”

இது தைவ வசத்தால் ஆகவேண்டிய காரியம்; இவ்விஷயமாயுள்ள கதையொன்றைக் கேள்” என்றுரைத்து ஸோமப்பிரபை பின்வரும் கதையைச் சொன்னாள்.

உபகதை—1.

முன் உஜ்ஜயினியில் விக்கிரமஸேனன் என்ற மன்னன் இருந்தான். அவனுக்கு தேஜஸ்வதீ என்று நிகரற்ற அழகுவாய்ந்த பெண் இருந்தாள். அவளுக்கு ஏற்ற கணவனாய் அரசன் ஒருவனும் இல்லை, தன் மாளிகைமேல் நின்று கொண்டிருந்த அந்த ராஜகுமாரி ஒரு ஸமயம் புருஷனொருவனைக் கண்டாள். நல்ல ரூபம் படைத்த அப்புருஷனுடன் அவள் கூட வேண்டுமென்று ஆவலுற்றாள்; தன் எண்ணத்தைத் தெரிவித்து அவனிடம் தன் தோழியை அனுப்பினாள். தோழி அந்தப் புருஷனிடம் சென்று, அவன் திடீரென ஒன்றைச் செய்ய அஞ்சி விருப்பமற்றிருந்தும், அவனை வேண்டி, பலவந்தமாக அவனுடன் ராஜகுமாரி கூடுவதற்கான இடத்தையும் காலத்தையும் ஏற்படுத்தினாள். “நல்லோனே! இதோ இருக்கும் கோயில் ஏகாந்தமானது; இங்கு இன்றிரவு ராஜபுத்திரியின் வரவை எதிர்பார்த்திரு!” என்று சொல்லிவிட்டு, அவனிடம் விடைபெற்றுக் கொண்டு, ராஜபுத்திரி தேஜஸ்வதியிடம் வந்து தன் ஏற்பாட்டைத் தெரிவித்தாள்; ராஜபுத்திரியும் சூரியாஸ்தமனத்தை எதிர்பார்த்தவளாய் நின்றாள். அந்தப் புருஷனோ ஸம்மதம் கொடுத்திருந்தும், பயந்து கொண்டு எங்கேயோ போய்விட்டான்; செந்தாமரையின் தாதுக்களின் ருசியை தவளையா அறியும்?

இதனிடையில் நற்குலத்துதித்த ராஜகுமாரனொருவன், தன் தந்தையை இழந்து தன் தந்தையின் நண்பனான உஜ்ஜயினியரசனைக் காண அவ்வூருக்கு வந்தான்; ஸோமதத்தன் என்று பெயர்; இளமையிலுள்ளவன்; உறவினரால் தன் ராஜ்யம் முதலியன பற்றப் பட்டு தன்னைத் தவிர வேறொருவரும் தனக்கில்லாதவன்; அவ்வழகிய தோற்றமுடையவன் அந்திவேளையில் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தான். தைவவசத்தால் எந்தக் கோயிலில் ராஜபுத்திரிக்காக புருஷனொருவனோடு அவள்

தோழி ஸந்திப்பை ஏற்பாடு செய்திருக்கிறாளோ அதே கோயிலில் இரவைக் கழிப்பதற்காக நுழைந்தான். காதலில் கண்ணிழந்த தேஜஸ்வதீ அன்றிரவு அங்கு கோயிலிருந்த அந்த ராஜகுமாரனை யாரென்று கூட உணராமல் தானாய் வேண்டிக் கணவனாய்ச் செய்து கொண்டாள். தைவத்தால் தனக்களிக்கப் பட்டவளாயும் தனக்கு வரப்போகும் ராஜலக்ஷ்மியின் சேர்க்கையைக் குறிப்பவள் போலுமிருக்கும் அந்த தேஜஸ்வதியை புத்திமானான ராஜகுமாரன் மௌனமாயிருந்து ஸந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டான். அதன்மேல் ஒரு க்ஷணத்திலேயே ராஜகுமாரி (தான் கூடிய) புருஷனை மிகவும் கவர்ச்சியுள்ளவனாய்க் கண்டு 'விதி தன்னை ஏமாற்றாமல் விட்டது' என்று எண்ணிக் கொண்டாள். பிறகு தாம் யார் என்று இருவரும் தெரிந்து, (கொஞ்ச நேரம்) பேசிக்கொண்டிருந்து விட்டு, தேஜஸ்வதீ தன் அரண்மனைக்குப் போனாள்; ராஜகுமாரன் அக் கோயிலிலேயே இரவைக் கழித்தான்.

காலையில் அரண்மனைக்குச் சென்று, வாசற்காப்போன் மூலம் தன் பெயரைத் தெரிவித்து, யாரென்று தெரிந்துகொள்ளப்பட்டவனாய் அந்த ராஜகுமாரன் அரசனுடைய ஸமீபத்திற்கு வந்தான். அரசனிடம் தன்னுடைய ராஜ்யம் முதலியவை அபஹரிக்கப்பட்டுப் போன கஷ்டத்தைச் சொல்ல, அவனுக்கு ஆதரவு காட்டி சத்ருக்களை ஒழிப்பதற்கு உதவி புரிவதாக அரசன் ஒப்புக்கொண்டான். மேலும் கல்யாணஞ் செய்துகொடுக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்த தன் மகளையும் அவனுக்குக் கொடுப்பதாய் அரசன் தீர்மானித்து, அப்பொழுதே மந்திரிகளிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தான். ஸோமதத்தனோ ராஜகுமாரியின் (முன்னிரவு) நடத்தையைப் பற்றி அரசனிடம் சொன்னான்; மஹாராணிக்கோ, தேஜஸ்வதீ நடந்துகொண்ட வகை தேஜஸ்வதியினாலேயே தனக்கு வேண்டிய தோழிகள் மூலம் முன்னாலேயே சொல்லப்பட்டிருந்தது. தற்செயலாய் வேண்டாதது நடக்காமலும் வேண்டியது நடந்ததுமாய்ப் போனதைக் கேட்டு வியந்துபோன அரசனிடம் அப்பொழுது அங்கிருந்த மந்திரிகளில் ஒருவன் சொன்னான்: "நல்ல காரியங்கள் கைகூடும் விஷயத்தில் யஜமானர் கவனமில்லாமலிருந்தாலும், வேலைக்காரர் ஜாக்கிரதையாயிருப்பது போல் இவ்விதியே விழித்து நிற்கிறது. இதுவிஷயமாய் இக்கதையைச் சொல்லுகிறேன், கேளும், அரசே.

உபகதை—2.

ஒரு கிராமத்தில் ஹரிசர்மன் என்றொரு பிராம்மணன்; ஏழை, முட்டாள், வேலையில்லாதவன்; மிகவும் சிரமப்படுபவன்; முன் தீவினையைத் தின்பதற்கென மிகவும் அதிகமான குழந்தைகளையும் பெற்று விட்டான். தன் குடும்பத்தோடு பிச்சை யெடுத்து ஊரூராய்ச் சுற்றி, நகரமொன்றை அடைந்தான்; அங்கு ஸ்தூலதத்தன் என்ற பணக்கார கிருஹஸ்தன் ஒருவனுடைய வீட்டை அண்டினான். அந்த தனிகன் வீட்டில் இவனுடைய பிள்ளைகள் பசு முதலியவற்றை கவனித்துக் கொண்டனர்; இவன் மனைவி வீட்டுக்காரியம் செய்தாள்; வீட்டிற்கு அருகாமையிலேயே சொன்ன வேலையைத் தானும் செய்துகொண்டு ஹரிசர்மன் வஸித்து வந்தான். ஒருஸமயம் ஸ்தூலதத்தனுடைய பெண்ணின் மணவிழா வந்தது; மணப்பிள்ளையின் உற்றார் உறவினர் வரும் ஊர்வலம் திரண்டிருந்தது. அச்சமயம் ஸ்தூலதத்தனின் வீட்டில் தன் குடும்பத்தோடு நெய், மாம்ஸம் முதலியவற்றோடு சாப்பிடவேண்டும் என்று ஆசைகொண்டான். அவன் சாப்பாட்டு வேளையை எதிர்பார்த்திருக்க அவனுடைய ஞாபகமோ ஸ்தூலதத்தன் வீட்டில் ஒருவருக்கும் வரவில்லை; மனம் முறிந்துபோய் தன் மனைவியிடம் அவ்விரவு சொன்னான்: "என் ஏழ்மையாலும் மதியின்மையாலும் என்னை இப்படி அலக்ஷ்யம் செய்தனர்; ஆகையால் இதோ யுக்தியாய் என் புத்தியை ப்ரயோகம் செய்கிறேன்; அதைக் கண்டு ஸ்தூலதத்தன் என்னை கௌரவிப்பான். சொல்லவேண்டிய நேரம் வரும். அப்பொழுது என்னை 'ஞானி' என்று தெரிவி." இப்படி மனைவியிடம் சொல்லிவிட்டு, யோஜனை செய்து ஜனங்கள் உறங்கின பிறகு, ஸ்தூலதத்தன் வீட்டிலிருந்து மணப்பிள்ளை ஏறும் குதிரையை அபஹரித்தான் ஹரிசர்மன். மறைவாய் தூரத்தில் வைக்கப்பட்ட அக்குதிரையை கா

லையில் இங்குமங்கும் தேடியும் மணப்பின்னே யின் ஜனங்கள் கண்டுபிடிக்க முடியவில்லை. அதன்மேல் 'இதென்ன, அபசகுனம்' என்று பயந்து, குதிரையைத் திருடியவனைத் தேடிக் கொண்டிருக்கும் ஸ்தூலதத்தனை ஹரிசர்ம னின் மனைவி நெருங்கியுரைத்தனள்: "என் கணவன் ஞானி; ஜோஸ்யம் முதலியவையறிந் தவர்; உம் குதிரை அகப்படும்படி செய்வார்; அவரை ஏன் கேட்கக் கூடாது?" என்று. அதைக் கேட்டு ஸ்தூலதத்தன் ஹரிசர்மனைக் கூப்பிட்டான்.

"நேற்று என்னை மறந்துபோனீர்; இன்று குதிரை கெட்டுப்போனதும் என் நினைவு வந் தது" என்றான் ஹரிசர்மன்.

"எங்கள் மறதியை மன்னிக்கவேண்டும்: எங்கள் குதிரையை யார் அபஹரித்தனர்? சொல்லவேண்டும்" என்று ஸ்தூலதத்தன் கேட்டான். அதன்மேல் போலியாய் ஏதோ கோடுகளைக் கிழித்து ஹரிசர்மன், "இதோ, தெற்கு எல்லையில் திருடர் குதிரையை வைத் திருக்கின்றனர். (பகலில்) மறைவாய் வைக் கப்பட்ட அக்குதிரையை இரவு வந்ததும் அவர் இன்னும் தூரத்தில் கொண்டுபோகும் முன் நீங்கள் வேகமாய்ச் சென்று அதைக் கொண்டுவாரும்" என்றுரைத்தான். அதைக் கேட்டு ஒரு க்ஷணத்தில் பலர் ஓடி குதிரையை கொண்டுவந்து ஹரிசர்மனின் அறிவை மெச் சினர். அதன்மேல் எல்லோராலும் 'ஞானி' யென்று போற்றப்பட்டு, ஸ்தூலதத்தனாலும் பூஜிக்கப்பட்டு, அவ்விடம் ஹரிசர்மன் சுகமா யிருந்தான்,

பிறகு, நாட்கள் பல கழிய, (ஒரு ஸமயம்) அவ்வூரில் அரண்மனையிலுள்ளிருந்து ஏதோ ஒரு திருடனால் தங்கமும் ரத்தினங்களும் ஏராளமாய் அபஹரிக்கப்பட்டன. திருடன் யாரென்று தெரியாமற்போக, 'ஞானி' என்ற புகழால் அரசன் ஹரிசர்மனை உடனே அழைத்து வரச் செய்தான். அழைத்து வரப் பட்ட ஹரிசர்மன் "காலை சொல்லுகிறேன்" என்று சொல்லி காலத்தை யோட்ட, உண்மை யிலுள்ள அறிவின்மையினால் துன்பப்படும் ஹரிசர்மன் அரசனால் ஒரு அறையில் அடைக் கப்பட்டு, நன்றாய்க் காவலில் வைக்கப்பட் டான். அந்த ராஜநகரத்தில் 'நாக்கு'('ஜிஹ்வா') என்றொரு சேடி இருந்தாள்; அவளை தன் ஸஹோதரனுடன் சேர்ந்து உள்ளிருந்து அப் பொருளை அபஹரித்திருந்தாள். அவள் இர வில் ஹரிசர்மனை அடைத்து வைத்திருக்கும் அறைக்குச் சென்று, அவனுடைய அறிவை யெண்ணி அஞ்சி, 'என்ன பேசிக்கொண்டி ருக்கிறான்' என்று தெரிந்து கொள்ள கதவுத் துவாரத்தில் காதை வைத்தாள். அத் தருணம் ஒண்டியாய் உள்ளே கிடக்கும் ஹரிசர்மன் போலியாய் அறிவுள்ளதாய் பேசிக் கொண்டி ருக்கும் தன் நாக்கை பின்வருமாறு தூற்றிக் கொண்டிருந்தான்: "நாக்கே! சுகம் அனுப விக்கவேண்டும் என்று பேராசை கொண்டு, என்ன செய்துவிட்டாய் நீ! கெட்ட நடத்தை யுள்ளவளே! இப்பொழுது வரப்போகும் தண் டனையை பொறுத்துக் கொள்" என்று. இதைக் கேட்ட 'நாக்கு' சேடி ஞானி என்னும் ஹரிசர் மன் தன்னைத் தெரிந்து கொண்டு விட்டான் என்று பயந்துபோய், யுக்தியாய் அவனறைக் குள் நுழைந்தாள். ஞானியின் தோற்றமுடைய அவனுடைய கால்களில் விழுந்து "பிராம மணரே, பொருளை அபஹரித்ததாய் நீர் கண்டு பிடித்த 'நாக்கு' என்றவள் நான்தான்; அப் பொருளை எடுத்து இவ்வரண்மனைக்குப் பின் மாதுளை மரத்தடியில் பூமியில் புதைத்திருக் கிறோம். இதோ என் கையில் கொஞ்சம் தங் கம் இருக்கிறது; இதைப் பெற்றுக் கொண்டு என்னை காப்பாற்றவேண்டும்." இதைக் கேட்டு ஹரிசர்மன் கர்வம் கொண்டு சொன் னான்: "போ, நடந்தது, நடக்கிறது, நடக்கப் போவது எல்லாம் எனக்கு தெரியும்; ஆனால் நீ என்னிடம் சரணம் புகுந்ததால் உன்னைக் காட்டிக் கொடுக்கமாட்டேன். உன் கையிலுள் ளதை நீ அப்புறம் எனக்குக் கொடு." இப்படி சொல்லப்பட்ட சேடி 'ஸரி' என்று விட்டு, வேகமாய் அவ்விடம் விட்டுச் சென்றாள். அதன் மேல், வியந்தவனாய் ஹரிசர்மன் யோ ஜித்தான். "விதி அனுகூலமானால் முடியாத தையும் விளையாட்டாய் முடித்தே வைக்கிறது. எனக்கு இங்கு ஆபத்து வரும்போலிருந்த தருணம், எதிர்பாராமல் காரியம் கைகூடி விட்டதே! என் 'நாக்கை' நான் தூற்றிக் கொண்டிருக்க திருடி என் முன் வந்து விழுந் தாளே! மறைந்து பாவம் செய்தவர் தம் பயத்

தினாலேயே தம்மை காட்டிக் கொடுத்து விடுகின்றனர்.” இப்படியெல்லாம் யோஜித்துக் கொண்டு ஸந்தோஷமாய் இரவைக் கழித்தான். காலையில் போவியாய் தனக்கு நேர்ந்த அறிவைக் கொண்டு, அரசனை அழைத்துக் கொண்டுபோய் தோட்டத்தில் புதைத்து வைத்திருக்கும் பொருளையடைய வைத்தான். திருடன் அப்பொருளில் கொஞ்சம் எடுத்துக் கொண்டு ஓடி விட்டான் என்றும் சொன்னான். அதன் மேல் திருப்தியடைந்த அரசன் ஹரிசர்மனுக்கு கிராமங்களைக் கொடுக்கவாரம்பித்தான். “மானிடருக்கு அரிதான இந்த அறிவு படியாத இவனுக்கு எப்படி உண்டாகும்? நிச்சயம் திருடரோடு கூடிப் பேசிக் கொண்டு ‘போக்கிரி’த்தனமாய் நடத்திவரும் ஜீவனோபாயம் இது. ஆகையால் இவ்வறிஞனை வேறு முறையில் மேலும் ஒருதரம் பரீக்ஷை செய்ய வேண்டும், மஹாராஜா” என்று மந்திரி அரசனிடம் காதோடு சொன்னான்.

அதன் மேல் உள்ளே தவளைகள் போட்டு, மூடப்பட்ட புதுக்குடமொன்றை தானே கொண்டு வரச் செய்து அரசன் ஹரிசர்மனிடம் சொன்னான்: “ப்ராம்மணரே, இக்குடத்துள்ளிருப்பதை நீர் உரைப்பீரானால் உமக்குப் பெரும் பூஜையைச் செய்வேன்.” அதைக் கேட்டதும் ஹரிசர்மன் தனக்கு சாவுகாலம் நெருங்கிவிட்டதாய் எண்ணினான். (திடீரென) தன் தந்தை இளமையில் தனக்கு “மண்டூகம்” (தவளை) என்று விளையாட்டுப் பெயர் வைத்திருந்தது அவனுக்கு ஞாபகம் வந்தது. விதி தூண்ட, புலம்பவாரம்பித்த ஹரிசர்மன் திடீரெனச் சொன்னான்: “ஹே மண்டூகா! (தவளையே!) ஸாதுவாயும் பராதீனமாயுமிருக்கும் உன் அழிவிற்காகவே இப்பொழுது பலவந்தமாய் திடீரென இக்குடம் ஏற்பட்டிருக்கிறது!” என்று.

அவன் பேச்சு குடத்திற்குள்ளிருக்கும் தவளைக்கும் ஒட்டிப்போனதால் அங்குள்ளவர் “ஆகா! மஹாஞானியிவன்; தவளையையும் தெரிந்து கொண்டுவிட்டான்” என்று களித்தனர்.

அது ஆருடம் சொல்லும் அறிவுதான் என்று நம்பி திருப்தி யடைந்து அரசனும் ஹரிசர்மனுக்கு பொற்குடையொன்றும் வாஹனமும் கிராமங்களும் வழங்கினான். ஒரு நொடியில் ஹரிசர்மன் சிற்றரசரைப் போலானான்.

நல்வினை செய்திருப்பவருக்கு இதுபோல் தைவத்தால் காரியங்கள் கைகூடுகின்றன. அதுபோல், தனக்கு ஸரியில்லாதவனை விலக்கி தனக்கு நிகரான ஸோமதத்தனையே தைவவசத்தால் உம் மகள் தேஜஸ்வதீ முன்கொண்டுபோய் சேர்ந்தாள்.”

இப்படி மந்திரியிடமிருந்து கேட்டு, விக்கிரமஸேன மஹாராஜன் ராஜகுமாரனான ஸோமதத்தனுக்கு லக்ஷ்மியையே கொடுப்பதுபோல் தன் மகளைக் கொடுத்தான். பிறகு மாமனின் படைகளைக் கொண்டு தன் பகைவரை வென்று தன் ராஜ்யத்தில் அமர்ந்து மனைவியுடன் சுகித்திருந்தான்.”

“இப்படியாக இதுபோன்றதெல்லாம் விதியின் மேன்மையால் நடக்கின்றது. இவ்வளவு அழகு வாய்ந்த உன்னை உனக்குத் தக்கவனான வத்ஸராஜனோடு சேர்க்க, விதியல்லாது வேறு யாரால் முடியும்? தோழி, களிங்கஸேனா! இவ்விஷயத்தில் நான் என்ன செய்ய முடியும்?”

இப்படித் தனிமையில் ஸோமப்ரபையிடம் கதையைக் கேட்ட ராஜபுத்திரி களிங்கஸேனை வத்ஸேசுவரனை வேண்டுபவளாய், உறவினரிடமுள்ள பயமும் வெட்கமும் நழுவ, வத்ஸராஜனோடு கூடவேண்டுமென்று ஏக்கங்கொண்டவளானாள்.

அதன்மேல் மூவுலகுக்கும் விளக்கான சூரியன் அணைந்துபோகும் தருணம், தன் விருப்பத்திற்கு வேண்டிய முயற்சியில் மனதைச் செலுத்தியிருக்கும் தோழி களிங்கஸேனையிடம் காலை வரையில் பிரிந்திருக்க மனம் வராமல் விடை பெற்றுக்கொண்டு, வானவழியாய் மயாஸுரன் புதல்வி ஸோமப்ரபை தன்னகம் போய்ச் சேர்ந்தாள்.

நான்காவது அலை முற்றிற்று.

"உமர்கையாமின் உருபையத்து."

"பாரத்வாஜன்."

VII

வம்மின்! தேநறை வள்ளத்திடை பெய்ம்மின், பருகு மினிளவேனிற் றீயிடை
வைம்மின்!! அலமுறு சிந்தனையா நுங்குளிருடை யாவுமே யழிமின், களைமின்!!!
விம்மெனச் சிறையறைந் தேகுவான் மானிடை. தேர்தியாலிவனை
நும்முனர் விண்புகும் காலமாம் கம்புள், பிறிதிவண் காணாய், புகலிட மணித்தே!

VIII

நயஸநகர் தனிலோ நகர்களுக்கினி தாம் பபில புரி தனிலோ
வியஸனமே பெய்ததோ யன்றெனிற் தேநறை ததும்புமோ ருவகையாம்
வயமெனும் வாணாளிடை பருக்கசியுமே மதுக்குடந் துளிபினர் துளியாய்!
வியனுடல் பாதபத் தடலுற ஜீவனுங் கிளை யிழிந்திலை கருங்கழிபமே ஒன்றன் பின்
ஒன்றாய்!

IX

இன்றலர்ந்த விவ்வோராயிர மலரெனவுலப் புற்றறைகுவாய் கொல்லோ
சென்ற நாள லலர்ந்த ரோஸேன் னின்னலுற்றியம்பாயின்று
தென்றலோ டுற்ற விவ்விளவெனில் கொணர்ந்த விவ்வரு மலர் கண்முன்
கன்றிடுமாறு கண்டோரா வுன்னாய் கைகுபாதுடன் ஜாமுஷேட் துஞ்சிடல் ஒன்றே!

X

மலரனைய மன்னரும் பட்டனரென்றாய்! மாள்கவவ்விரர்! மனமது மறுகேல்
ஜலனுடன் றறுகண ருஸ்தும் மதநுகர்ந் தாற்றிடு வெஞ்சமர் செவி தனிலேறற்காய்!
புலர்புவதெவனோ! கோசரேவன்! கைகுபாதேவன், மாண்டனரன்றோ!
நானிலந்தனி ஹாதீமுவே விருந்திட வழைத்தினு மேகா யிவையெலாந் துச்சம்!

XI

என்னுடன் வாராய்! இப்பைம்புற்றரை நோக்காய்! இனி திவணமராய். சேணிவன்
பன்னுதற்கரிய வரம்பிடை பாலை யினணித்துள பைங் கூழ்ப் பழனமும் பாராய்!
உன்னிடல் ஈங்கு ஸூலுத்தனர்? யவனுடல் பேணுமடிமையார்? மேலெவன்? கீழெவன்?
பொன்னவிர் தவிசுறை மகமதுமந்தோ நுகர்வனோ யிப் பூம் பொழி லெழிலே!

XII

பழன வொண் கிளை நிழலடி படிக்க வோர்ச். செந்தமிழ்ப் பனுவலும்
விழைவுழி விழைவுழி பருகுவான் தேநறை பெய்த வோர் மதுக்குடம்
வயிறதற் கீந்திட அடைதனில் ஒன்றும்—இவையுடனீயுன்
குயின் மொழி பாடல் பாலையிலியம்பப் பாலையும் பாவிடு மளகை யாமன்றோ!

சிற்பப் பகுதி

வேலூர்க் கோட்டை.

(S. சுந்தரராஜன், M.A.,)

ஆதிகாலத்தில் இதை ராயவேலூர் என்று அழைத்தார்கள்: கோதாவரி ஜில்லாவிலுள்ள இதே பெயர் கொண்ட ஊரை உப்புவேலூர் என்று சொல்லுவார்கள். இப்பெயர்கள் இவ் வூரை வேறுபடுத்திக் காட்ட அமைந்தன போலும். தற்பொழுது வேலூர் இருக்குமிடத்தில் முற்காலத்தில் வேலப்பர்டி யென்ற சிறு கிராமம் தான் இருந்தது. பிறகு அருகிலுள்ள பத்து குக்கிராமங்களை யொன்று சேர்த்து, வேலங்காடுகளை யழித்து, வேலூரை உண்டாக்கினார்கள். சிறிது சிறிதாக முன்னேற்றமடைந்து தற்பொழுதுள்ள உன்னத நிலையை அடைந்தது. வேலபுரியென்றும் இதற்கு மற்றொரு பெயர் உண்டு.

கோட்டை சதுரவடிவமாகக் கட்டப்பட்டிருக்கிறது. நான்கு பக்கத்திலும் பலமான சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. சுவர்களில் அநேகம் சிறு கோபுரங்கள் இடர் விட்டு விட்டு அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கோபுரத்திற்கு முன்பும் அகன்ற கற்கள் எட்டிப் பார்ப்பவை போல் நீட்டிக்கொண்டிருக்கின்றன. அவைகளின் கீழ்ப்புறத்தில் துப்பாக்கி பீரங்கி வைத்துச் சுடுவதற்குப் போதுமான உயரமுள்ள மேடைகள் கட்டியிருக்கிறார்கள். கோட்டையைச் சுற்றி நாற்புறத்திலும் ஆழமான அகழி வெட்டப்பட்டிருக்கிறது. பிரதானக் கோட்டைச் சுவருக்கு உள்புறம் இரண்டாவதாக மற்றொரு கற்சுவர் இருக்கிறது. இவ்விரண்டு சுவர்களுக்குமிடையில் பிரத்யேகமான மூடப்பட்ட வழியொன்றுண்டு. கோட்டையின் பிரதான மதில் கற்கள் சுண்ணாம்பின் உதவியின்றி ஒன்றுக்கொன்று சரியாகப் பொருத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது சுவர் சுண்ணாம்பாலும் கல்லாலும் கட்டப்பட்டு உயரம் படிப்படியாகக் குறைந்து கீழ்ப்பாகத்தில் ஆரம்பித்துத் தென்புறத்தைச் சுற்றிக்கொண்டு மேல்புறமாக வலம் வந்து வடபுறத்தில் தரைமட்டமடைந்து விடுகிறது. கோட்டைக்குத் தென்பாகத்தில் கொடி நாட்டுவதின் நிமித்தம் உயரமான கொத்தளம் ஏற்பட்டுள்ளது. முன்காலத்தில் இக்கோட்டையைப் பிரவேசிப்பதற்கு வளைந்து வளைந்து செல்லும் சுற்று வழி ஒன்று மாத்திரமே இருந்தது. அகழியைத் தாண்டுவதற்கு நினைத்தமாத்திரத்தில் எடுத்து விட்டுப் பிறகு திரும்பவும் அமைக்கக்கூடிய பாலமொன்றும் இருந்தது. இவ்வாராவதியைத் தாண்டினவுடன் பெரிய கனத்த கதவுகள் இருந்தன. ஆனால் தற்பொழுது அவைகளை யெல்லாம் அழித்துவிட்டு, நேர் பாதை யொன்றை அமைத்திருக்கிறார்கள். வேலூருக் கருகாமையிலிருக்கும் சூரிகுண்டா வென்ற குளத்திலிருந்து பூமிக்குள் செல்லுமொரு கால்வழியாக அக்காலத்தில் அகழிக்குத் தண்ணீர் வந்ததென்பர்.

பொம்மி ரெட்டியும் அவன் தம்பி திம்மி ரெட்டியும் மாற்றாந்தாய் புதல்வர்களுக்கு அஞ்சி சொந்த ஊரான பத்ராசலத்தை விட்டு, தெற்கே ராமேச்வர யாத்திரை கிளம்பினார்கள். வேலூர்ப் பிரதேசத்தை யடைந்தபோது, வேலப்பாடி கிராமம் அவர்கள் மனதிற்குப் பிடித்தது. அருகில் கைலாஸபட்டணத்திலுள்ள சோழராஜன் உத்ரதவு பெற்று, அக் கிராமத்தில் தங்கினார்கள். ஆடு மாடு வளர்ப்பதை ஜீவனத்தொழிலாகக் கொண்டார்கள். ஆற்காட்டுச் சிற்றரசன் அவர்களை எதிர்த்த போது தைரியமாய்ச் சண்டை செய்தார்கள். சோழராஜனும் அவர்கள் வீரத்தை மெச்சி வேலப்பாடியை அவர்களுக்கு அளித்தான்.

பொம்மி ரெட்டியிடம் ஐந்து மருக்களோடு கூடிய வெள்ளைப்பசு வொன்று இருந்தது. கொஞ்சகாலத்தில் அது ஒரு கன்று ஈன்றது. என்றாலும் அது சேய்க்குப் பால் கொ

டுக்கவில்லை. ஆகவே, பொம்மி ரெட்டி ஒரு நாள் பசுவைத்தொடர்ந்து காட்டிற்குச் சென்றான். மேய்ச்சலில் அது தனியாக ஓரிடம் சென்று ஜலத்தில் வாழ்ந்த வொரு ஐந்து தலை நாகத்திற்குப் பால் கொடுக்கக் கண்டான். மிகவும் ஆச்சரியமடைந்து அச் சர்ப்பத்தை வணங்கித் தொழுதான்.

அந் நாகம் பொம்மி ரெட்டியின் கனவில் தோன்றி தான் பரமசிவனென்றும் அவனுக்கு வேண்டிய வரத்தைக் கேட்குமாறும் சொல்லியது. பொம்மி ரெட்டி ஒரு வரத்தையும் அபேக்ஷிக்காமல் பரமசிவனுக்கு அங்கேயே ஒரு கோவில் கட்டுவதாகச் சொன்னான். சிவபெருமானும் மறைவிட மொன்றைச் சுட்டி, அங்கு கிடக்கும் புதையலை இப் புனித காரியத்துக்கு உபயோகிக்குமாறு சொல்லி மறைந்தார்.

பொம்மி ரெட்டி அங்கு புதையலுடன் ஒரு லிங்கமும் இருக்கக் கண்டான். தற்செயலாக பத்ராசலத்திலிருந்து ஒரு சிற்பி தமிழ் நாட்டுக் கோவில்களைச் சுற்றிப் பார்க்கும் எண்ணத்துடன் கிளம்பி அப்பொழுது வேலூரில் தங்கியிருந்தான். அவனுடைய உதவியால் கோவில் வேலை ஆரம்பமாயிற்று. ஒரு முயல், பொம்மி ரெட்டியின் நாய்களைத் துரத்த, அவைகள் அங்கு ஓரிடத்தைச் சுற்றி வலம் வந்தன. அச்சமயம் பரமசிவன் அசரீரியாகத் தோன்றி, அதுவே அக் கோவிலுக்குச் சுற்றுப் பிராகாரமாகவேண்டுமென்று கட்டளையிட்டார். அவ்வாறே இக் கோவில் சரியாக ஒன்பது வருஷத்தில் கட்டி முடிவு பெற்றது. ஜலத்தின் மத்தியில் சிவனைக் கண்டதால், ஜலகண்டேஸ்வரர் என்று ஸ்வாமிக்குப் பெயருண்டாயிற்று.

வாய்ச் சொல்லாக வந்த வரலாற்றில் இப் பெயர் வழங்குகிறது. ஆனால் வேலூரிலிருக்கும் சாஸனங்கள் ஸ்வாமியை 'ஜ்வரகண்டேச்வரர்' அதாவது பிணியைத் தீர்ப்பவரென்று கூறுகின்றன.

இது நிற்க, மேற் சொல்லிய சிற்பியின் மகன் தன் தகப்பன் நெடு நாளாகியும் திரும்பி வாராமையால், அவனைத் தேடிக்கொண்டு புறப்பட்டான். வேலூரில் தகப்பன் கட்டிய கோவிலைக் கண்டு அதிசயத்துடன் புகழ்ந்தான். ஆனால் கோவில் சுபலக்னத்தில் ஆரம்பிக்கப் படாமையால், சீக்கிரத்தில் பாழாய் விடுமென்று சொன்னான். அவன் அப்படிச் சொன்ன முஹூர்த்தத்தாலேயோ, அல்லது அசுபலக்னத்திற் ஆரம்பித்ததாலேயோ, அல்லது வேறு யாது காரணத்தினாலோ, இக் கோயில் தற்பொழுது பாழடைந்து, பூஜையற்று, ஸங்கமின்றி, ஊரிலுள்ள சோம்பேரிகள்; குடிகொள்ளும் மடமாக மாறியிருப்பது அதிக விசனத்தை உண்டாக்கும் விஷயம்.

பிறகு சிற்பியின் மகன் நல்லதொரு சுபலக்னத்தில் வேலூர்க் கோட்டை கட்ட ஆரம்பித்தான். இவ்வேலையில் பல்லாயிரம் ஆட்கள் நியமிக்கப்பட்டனர். பதின்மூன்று மைமில் தூரத்திலுள்ள பள்ளி கொண்டையென்னும் ஊரிலிருந்து கற்கள் கொண்டு வந்தார்கள். வேலை மிகவும் சுறு சுறுப்பாயும் ஊக்கத்துடனும் நடந்தது. எல்லாம் ஒழுங்காகக் கட்டி முடிந்ததும் சிவபெருமான் மற்றொரு முறை பொம்மி ரெட்டியின் கனவில் வந்து, கோட்டையை வேங்கடதேவ மஹாராயனிடம் ஒப்பித்து விடும்படி சொன்னார். அவ்வாறே கோட்டை விஜயநகர அரசர்கள் வசமாயிற்று. இப் பரம்பரை வரலாறு, இக் கோட்டை பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் கட்டப்பட்டதாகக் கூறுகிறது. ஆனால் சரித்திர ஆராச்சியாளர்களோ கோட்டை பதினைன்காம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகச் சொல்லுகிறார்கள்.

இனி இவ்வபூர்வ சரித்திரமுடைய கோவிலைச் சற்று கவனிப்போம். தூரத்திலிருந்து பார்க்கும்பொழுதே உயர்ந்த கோபுரம், பல சித்திர வேலைப்பாடுகளமைந்து கம்பீரமாக நிற்பது தென்படுகிறது. கோபுரவாயிலின் இரு புறத்திலும் துவாரபாலர்கள் மாதிரி இரண்டு அழகிய கற்பதுமைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளே இக்கோவிலையும் கோட்டையையும் அமைத்த பொம்மி ரெட்டி, திம்மி ரெட்டி. இவர்களின் உருவச்சிலைகளென்று இவ்வூரார் சொல்லுகிறார்கள்.

கர்ப்பக்கிரகம் அழகிய விமானத்துடன் கூடி உட்பிராகாரத்தில் அமைந்திருக்கின்றது.

இவ்விரண்டாவது பிராகாரத்தின் முன்பும் ஒரு சிறு கோபுரம் கட்டப்பட்டிருக்கிறது. இதற்குள் அதிசயிக்கத்தக்க பிரதிமைகளோ, சிற்பங்களோ இல்லையென்றே சொல்லலாம். ஆனால் வெளிப்பிராகாரத்திலுள்ள கலியாண மண்டபத்தில் இருக்கும் சிலைகளோ மிகவும் அபூர்வமானவை. மதுரை மீனாக்ஷி அம்மன் கோவில் சிற்பங்களைக் காட்டிலும் எந்த அம்சத்திலும் குறைவுள்ளவை யென்று சொல்ல முடியாது. இம்மண்டபத்தின் ஒவ்வொரு கல்லும் கலையின் ஒரு அம்சமென்றே கருதலாம்.

ஒரே கல்லில் நிருமிக்கப்பட்டு அழகுடன் திகழும் பல அபூர்வச்சிலைகள் இம்மண்டபத்தை அலங்கரிக்கின்றன. மண்டபத்தின் முன்னணியில் நிற்கும் தூண்களில் குதிரைவீரர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அங்க அவயமும் இவ்வாறு தெளிவுடன் விளங்கும்படி கற்கள் அமைவது துர்லபம். குதிரைகள் ஒன்றின் வாயில்—வெளியில் எடுக்கமுடியாத, ஆனாலும் வாய்க்குள்ளேயே உருளும்படியான பந்து ஒன்றைச் சிற்பி அபூர்வ வேலைத்திறமையுடன் அமைத்திருக்கிறான். இச்சிற்பங்கள் விஜயநகரத்துப் போர்வீரர்களையோ அல்லது அப்போதையத் தென்னிந்திய யுத்தவீரர்களையோ ஒருவாறு சித்திரிக்கலாகும் என்று கருத இடமுண்டு.

மண்டபத்தின் விமானத்தின் அழகு வர்ணிக்கத் தரமன்று. கண்களால் கண்டு அநுபவிக்கவே ஏற்பட்டது. மூன்று வரிசைகள் இளிகள் அலர்ந்த தாமரைப் புஷ்பமொன்றை அலகினாலும் அழகிய சிறு கால்களாலும் கவ்விக்கொண்டிருக்கும் பாவனையாகக் கல் வெட்டப்பட்டிருக்கிறது இதேமாதிரி இரண்டு சிற்பங்கள் இருக்கின்றன. இவ்விமானத்தைப் பல தூண்கள் தாங்குகின்றன. ஒவ்வொரு தூணும் ஒரே கல்லால் செதுக்கப்பட்டு ஐந்து சிறு கம்பங்களைக் கொண்டது. ஐந்து கம்பங்களும், அபூர்வமான நுண்ணிய சித்திர வேலைப்பாடுகள் அமைந்தவொரு கல்லால் பிணைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு செதுக்கியிருப்பது ஒரு பெரிய அதிசயமே. ஒவ்வொரு தூணிலும் இரண்டடி உயரமுள்ளதும் அங்க அவயவங்கள் சாமுத்திரிகா லக்ஷணத்திற்குத தக்கபடி அமைக்கப்பட்டதுமான பதுமைகள் சோபையுடன் துலங்குகின்றன. கல்லோடு ஒட்டினாற்போலிருந்தும் தேகத்தின் சகல பாகங்களும் தெளிவாயிருப்பது வியப்புண்டாக்கும். ஒரே வார்த்தையில், இம்மண்டபம் கலையே உருவெடுத்து வந்து அமைந்திருக்கிறதென்றால் மிகையாகாது. இம்மண்டபத்தைப் பார்த்து அநுபவித்த காக்ஸ் (Cox(என்ற ஆங்கிலேயர் 'இங்கிலாந்தில் இம்மாதிரி ஒரு மண்டபம் இருந்தால், மிகவும் ஆச்சரியத்தை விளைவித்து வெகு பத்திரமாய்ப் பாதுகாக்கும்படி தூண்டும். ஆனால் இங்கே (இந்தியாவில்) தேடுவாரற்றுக் கிடக்கின்றது' என்று எழுதியிருக்கிறார்.

கோவிலுள் பிரவேசித்தவுடன், இடது புறத்தில் இக்கலியாண மண்டபம் அமைந்திருக்கிறது. பண்டை நாட்களில் வருஷந்தோறும் ஸ்வாமிக்கும் அம்மனுக்கும் இம்மண்டபத்தில் உத்ஸவம் நடைபெறுவது வழக்கம். அச்சமயம் மஹோத்ஸவத்தைக் கண்டு களித்தவர்களை 'கொடுத்து வைத்த பாக்கியவான்கள்' என்றுதான் நாம் எண்ணவேண்டும்.

சரித்திர வாயிலாக இம்மண்டபத்தைப் பற்றியொரு அதிசய விஷயம் வெளிவந்துள்ளது. முகம்மதியர்களிடமிருந்து கிழக்கு இந்தியா கம்பெனியார் (East India Company) வேலூரைப் பிடித்துக்கொண்ட பிறகு, இம்மண்டம் ஆங்கிலேயர் உள்ளத்தைக் கவர்ந்தது. ஆகையால் இம்மண்டபத்தை அப்படியே பெயர்த்து இங்கிலாந்தில் பிரைட்டன் (Brighton) என்ற இடத்தில் திரும்ப அமைத்து ராஜகுமாரருக்குக் காணிக்கையாகக் கொடுப்பதென்று தீர்மானித்தார்கள். அவ்வுத்தேசத்தோடு மண்டபத்திலிருக்கும் கற்களை ஒவ்வொன்றாய் பெயர்த்து நம்பர் போட்டார்கள். ஆனால் நம்முடைய அதிர்ஷ்டவசமாகவோ வென்னமோ, இவ்வபூர்வ மண்டபச் சிற்பங்களை யெடுத்துச் செல்லவிருக்கும் கப்பல் கடலில் மூழ்கியது. அத்துடன் இவ்வெண்ணமும் கைவிடப்பட்டது; நம் நாட்டுச் சிற்பமும் நம்மிடம் தங்கிற்று.

புஸ்தக விமர்சனம்

ஸுந்தர ராமாயணமும் ஸதீ விலஸிதமும் :— ப்ரம்மஸ்ரீ க. ஸுந்தர சாஸ்திரிகள் கவனஞ் செய்தவை; கவியின் புதல்வர் க. சிவராமமூர்த்தி, எம்.ஏ., தாம் வரைந்த சித்திரப் படங்களுடன் வெளியிட்டது. (1/28, எட்வர்டு எலியட் ரோட், மயிலாப்பூர்.)

எளியதாயும் அழகியதாயுமுள்ள நடையில் எழுதப்பட்ட இரு ஸம்ஸ்க்ருதக் காவியங்கள் இப்புத்தகத்தில் உள. ஸம்ஸ்க்ருத மொழிக்கு முன் இருந்த ஆதரவும் பிரசாரமும் ஸமீப காலத்தில் குறைந்தே போயிருக்கிறது; ஆனால் அம்மொழியில் பேசுவோரும் சுவை மிக்க கவி யெழுதுவோரும் இன்னுமிருக்கின்றனர். இப்புத்தகத்தில் வெளிவந்திருக்கும் ஸம்ஸ்க்ருத காவியங்களை யியற்றியவர் காலஞ்சென்ற களமூர் ஸுந்தர சாஸ்திரிகள் என்பவர். சோள அரசர் காலத்தில் விக்ரம சோள சதுர்வேதிமங்கலம் என்று விளங்கிய பெரிய அக்கிரஹாரத்தில் உதித்து, இளமையில் வேதத்தையும், வியாகரண ஸாஹித்யங்களையும் நன்கு பயின்று, பிறகு ஆங்கிலம் படித்து, தாசில்தாராய் வேலை பார்த்து, பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி, கிணறு முதலியவைகளையும் வெட்டி உலகத்தொண்டு புரிந்து வந்தவர் இவ்வாசிரியர். இவருக்குச் சிறந்த ராம பக்தியுண்டு; ராமபக்தி இல்லாமல் எப்படி ஸம்ஸ்க்ருதம் படித்தவர் இருக்கமுடியும்? ஸம்ஸ்க்ருதம் படித்து, ராமாயணத்தை உபாஸிக்காதவரும் உளரோ?

ஒவ்வொரு நாளும் காலை ராமாயணத்தைப் பாராயணஞ் செய்து வருவதில் கைகண்ட பலனிருக்கிறது என்பது கோடிக்கணக்கான ஜனங்களின் பிரத்தியக்ஷ அனுபவம்; இவ்வாசிரியர் தாம் ராமாயணத்தைப் பாராயணஞ் செய்ததோடு, தமக்கு புத்திரப்பேறு கிடைக்க வேண்டுமென்று ராமாயணத்தை ஸ்வயம் கவனஞ் செய்யுமுறையிலும் வழிபடவாரம்பித்தார். ஸம்ஸ்க்ருத மொழியில் ராமாயண கதையைத் தழுவி எழுந்த காவியங்களும் நாடகங்களும் எவ்வளவு என்று கணக்கிடமுடியாது. இப்படி ராமாயண ஸம்பந்தமாய் காவியங்கள் இயற்றிய கவிகள் கேவலம் தமக்கிருக்கும் படிப்பை காட்டிக் கொள்ளவோ, கவித்திறனை வெளியிட்டுக் கொள்ளவோ ஆரம்பித்தவரல்லர். காவியம் இயற்றுவதை ராமனின் அளவற்ற அழகையும் அவனது முடிவற்ற குணங்களையும் அனுபவிப்பதற்கு அனுகூலமான சிறந்த யோக முறையாகவே கருதினர்.

பிற்காலக் கவிகள் பெரும்பாலும் சிலேடைகளில் விழுந்து, ப்ராஸங்களில் புரண்டு கொண்டு, ரஸம் என்பதையே மறந்து கிடப்பர். அதுபோலில்லாமல் இக்கவி ஸரஸமாய் எழுதும் குணம் பெற்றிருக்கிறார். ஆனால், சிலேடைசெய்யவோ ப்ராஸம் புனைக்கவோ தெரியாதவரல்லவென்று காண்பித்துக் கொள்ள இரண்டொரு வேலைப் பாடுகளையும் காண்பித்திருக்கிறார். (14, 18, 107, 131, 132; 7. 29; 9. 8) முக்கியமாய் வால்மீகத்திலும் காளிதாஸன் கவிதையிலும் ஊறியவரானதால் இக்கவிக்கு இந்நன்னடை ஸித்தித்தது போலும்.

‘ஸதீவிலஸிதம்’ என்ற சிருங்காரச் சிறு காவியம் முழுதும் அகப்படவில்லை. இச் சிறு காவியத்தில் உத்தமமான சிருங்காரம் எப்படி இருக்கும் என்பதற்கு உதாஹரணத்தைக் காணலாம். காதலும் கற்பும் ஒன்றுக்கொன்று பங்கமில்லாமல் சேர்ந்து செழிக்கும் சிறப்பையே ஸம்ஸ்க்ருத சிருங்கார காவியங்கள் விளக்குகின்றன. அம்முறையில் இச் சிறு காவியத்திலும் பத்மா என்ற உத்தமஸ்த்ரீயின் காதலும் கற்பும் வர்ணிக்கப்படுகின்றன.

சொல்லைச் சித்திரிக்க வல்ல தந்தைக்கு, சித்திரத்தை செய்யவல்ல மைந்தன் ராமகிருபையினால் தோன்றினன். தகப்பனாரின் இக்காவியங்களை வெளிப்படுத்திய க. சிவராமமூர்த்தி என்பவர் பல கலைகளில் தேர்ந்திருப்பவர்; முக்கியமாய் சித்திரக்கலையில் நிர்மாணாத்புதங்களை செய்ய வல்லவர். அவர் ராமாயண கட்டங்களில் ஏற்றதாயும் அழகு மிக்கதாயுமுள்ள சித்திரங்களை வரைந்து இப்புத்தகத்தில் சேர்த்திருக்கிறார். இப்படிப்பட்ட சித்திரங்கள் இப்புத்தத்தில் பதினெட்டு உள. இவற்றுள் கும்பகர்ணனைப் பற்றிய இரண்டு சித்திரங்களும் நகைச்சுவை மிக்கதாயிருக்கின்றன.

வே. ரா.